மலர் - 03 இதழ் - 12 - ஜூன் 2025

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

அட்சய திருதியை
- முனைவர் தேமொழி

தமிழர்களின் இயற்கைத் தெய்வம்
- பாமயன்

பாரதிதாசன்
- மாலதி தமிழ்ச்செல்வன்,

சீன சிந்தாமணிப் பெருந்தெரு
- முனைவர். எஸ். சாந்தினிபீ,

சங்கத் தமிழரின் வேனிற்காலம்சார் பதிவுகள்
- உ.ச.எ.தமிழரசன்

கடலும் ஆறும் மன்னனும் புலவரும்: உவமைச் சிறப்பு
- பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

காயகல்பத்தின் சிறப்பு
- அண்ணாமலை சுகுமாரன்

காலதேவன் வழிபாடு
- முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

இன்னும் பல

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்,
எந்தையும் உடையோம், எம்குன்றும் பிறர் கொளார்,
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்,
வென்றெறி முரசின் வேந்தர்,
எம் குன்றும் கொண்டார், எந்தையும் இலமே.

– பாரிமகளிர் பாடியது

உலக தந்தையர் தினம் ஜூன் 15

தனிச்சுற்றுக்கு மட்டும்

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 03 இதழ் - 12
ஜூன் 2025

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நு ண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97630

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. அட்சய திருதியை — 3
– முனைவர் தேமொழி

2. தமிழர்களின் இயற்கைத் தெய்வம் — 7
– பாமயன்

3. பாறைகள் – சில பார்வைகள் — 17
– ச.சபாரத்தினம்

4. நான் குருதி பேசுகிறேன் [6] — 21
– ராஜலட்சுமி சரவணன் M.Sc., M.Phil.,

5. இருண்ட வீட்டில் ‘குடும்ப விளக்கேற்றிய’ பாரதிதாசன் — 25
– மாலதி தமிழ்ச்செல்வன்,

6. சீன சிந்தாமணிப் பெருந்தெரு — 33
– முனைவர். எஸ். சாந்தினிபீ,

7. சங்கத் தமிழரின் வேனிற்காலம்சார் பதிவுகள் — 37
– உ.ச.எ.தமிழரசன்

8. கடலும் ஆறும் மன்னனும் புலவரும்: உவமைச் சிறப்பு — 45
– பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு

9. காயகல்பத்தின் சிறப்பு — 55
– அண்ணாமலை சுகுமாரன்

10. டச்சு தங்க நாணயம் — 59
– அண்ணாமலை சுகுமாரன்

11. காலதேவன் வழிபாடு — 61
– முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

12. ஒப்பிலக்கணம் தந்த ஒப்பிலாக் கால்டுவெல் — 71
– பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே

13. எளிய முறையில் யாப்பறிவோம் — 77
– நெருப்பலையார். இராம இளங்கோவன்

14. ஆழ்வார்கள் வரலாறு: கோழியர்கோன் குலசேகரன் — 83
– ஜனக்புரி ஸ்ரீனிவாசன்,

15. *Tamilmagan's Gene Notes in Vengai Anchor* — 87
– Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

தேமொழியின் அறிவியல் நூல்கள்



பொருளடக்கம்

எண்	பொருள்	பக்.
1.	மரபுவழி அறிதலில் தாய்க்குலத்தின் பங்கு	19
2.	மனித இனப் பரவல் விளைவித்த மரபணு மாற்றங்களும் தோல் நிறத்தின் பரிணாம வளர்ச்சியும்	31
3.	மனித இனத்தினர் எப்பொழுது அமெரிக்காவிற்குப் புலம் பெயர்ந்தனர்?	47
4.	ஆஸ்திரேலியப் பழங்குடியினருக்கும் தமிழருக்கும் தொடர்புண்டா?	58
5.	ஸ்டெப்பி மேய்ப்பாளர்கள் இனக்குழுவின் பரவலுக்குக் காரணம்	71
6.	நெல் வேளாண்மையும் கோழி வளர்ப்பின் தொடக்கமும்	76
7.	மயிலாடும்பாறை மூத்த தமிழ்க்குடியின் வாளின் காலம்	84
8.	நகர விரிவாக்கமும் மார்செட்டி மாறிலி கோட்பாடும்	98
9.	ஏரிகளில் அமைக்கப்பட்ட செயற்கைத் தீவுகள்	107
10.	தொழில்நுட்ப வளர்ச்சியின் வரலாறு	116



பொருளடக்கம்

எண்	பொருள்	பக்.
1.	உயிர் காக்கும் செயற்கை இழையை உருவாக்கிய ஸ்டெப்ஃபெனி கோலக்	19
2.	நாசாவின் பெண்கம்ப்யூட்டர் காத்தரைன் ஜான்சன்	28
3.	புவியதிர்ச்சியியல் ஆய்வாளர் இன்ஜ் லேமேன்	34
4.	டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு	44
5.	வேதியியல் அறிஞர் டிமிட்ரீ மெண்டலீயா	49
6.	உயிர்ப்புவியியல் துறையின் முன்னோடி அலெக்ஸாண்டர் வோன் ஹம்போல்ட்	54
7.	தொற்றுநோய் பரவலைக் காட்டும் மருத்துவப் புவி-வரைபடங்களின் வரலாறு	67
8.	கடற்காலமானி: நெடுங்கோட்டுச் சிக்கலுக்கான தீர்வு	84
9.	துல்லியத்தை நோக்கி முன்னேறும் உலக வரைபடம்	101
10.	முச்சொல்முகவரி	116

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்.
1.	நிலவின் மறுபக்கத்தை நம்மால் ஏன் காணமுடிவதில்லை?	19
2.	உறைபனிக்கட்டிகள் உடைவதேன்?	23
3.	திமிங்கிலம் ஏன் பெரிய உயிரினமாக இருக்கிறது?	27
4.	பாலம் ஏன் பாடியது?	36
5.	வலி நிவாரணி எவ்வாறு வேலை செய்கிறது?	42
6.	பயணப்பிணி தோன்றக் காரணம் என்ன?	47
7.	ஹச்சிமோஜி டிஎன்ஏ	52
8.	ஸ்குடாய்ட் என்றொரு புதிய வடிவம் கணித வடிவியலில் அறிமுகம்	58
9.	தேன்கூட்டின் கட்டமைப்பு: ஒரு வடிவமைப்பின் சிறப்பு	61
10.	பிரிக்காமல் படிக்கப்படும் கடிதங்கள்	66
11.	இலங்கை தெதிகம கோட்டாவேரா - யானை விளக்கு	72
12.	ஆய்வறிக்கைகளையும் அவற்றின் முடிவுகளையும் அறிந்து கொள்ளும் முறை	79
13.	மருத்துவத்தில் நோய் கண்டறிய உதவும் கணினியின் செயற்கை நுண்ணறிவு	86
14.	செயற்கை நுண்ணறிவுடன் ஓர் கலந்துரையாடல்	95
15.	செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் ஓவியங்கள்	107
16.	திறன்பேசியின் வளர்ச்சி	116



அட்சய திருதியை

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்கோ

ஒவ்வொரு ஆண்டும் இளவேனில் காலத்தில் கொண்டாடப்படும் பண்டிகை அட்சய திருதியை, வட இந்தியாவில் இந்து மாதமான வைசாக வளர்பிறையில் அமாவாசை நாளை அடுத்த மூன்றாம் நாளில் அக்ஷய திருதியை (அல்லது அக்ஷய தீஜ்) பண்டிகை கொண்டாடப்படும். அதே நாளானது தமிழகப்பகுதிகளில் சித்திரை மாதத்து வளர்பிறையில் அமாவாசை நாளை அடுத்த மூன்றாம் நாளாக இருக்கும். எனவே தமிழகத்தில் சித்திரை வளர்பிறை மூன்றாம் நாள் அட்சய திருதியை கொண்டாடப்படுவது வழக்கம்.

அட்சய / அக்ஷய என்றால் குறைவற்ற என்ற பொருள்; அட்சய பாத்திரம் என்பது அதே பொருளின் அடிப்படையில் உருவான சொல்தான். திருதியை என்றால் 3 ம் நாள் என்பதாகும். இது நாட்காட்டியில் பழைய முறையில் வானியல் அடிப்படையில் நாட்களைக் கணக்கிடும் முறையில் அமைகிறது.

வளர்பிறை (சுக்கில பட்சம்/நிலவொளி அதிகரிக்கும் நாட்கள்) மற்றும் தேய்பிறையில் (கிருஷ்ண பட்சம்/நிலவொளி குறையும் நாட்கள்) நாட்கள் அமாவாசை (அல்லது) பௌர்ணமி அடுத்த நாள் முதலாகத் தொடக்கம் கொண்டு கணக்கிடப்படுவது வழக்கம்.

இவ்வாறு தொடங்கும் வரிசையில் மூன்றாவது நாள் திரிதியை எனக் குறிப்பிடப்படும்.

1. பிரதமை, 2. துவிதியை, 3. "திருதியை", 4. சதுர்த்தி, 5. பஞ்சமி, 6. சஷ்டி, 7. சப்தமி, 8. அஷ்டமி, 9. நவமி, 10. தசமி, 11. ஏகாதசி, 12. துவாதசி, 13. திரயோதசி, 14. சதுர்த்தசி, 15. பவுர்ணமி (அல்லது) அமாவாசை என்று மொத்தம் 15 திதிகள் உள்ளன.

அட்சய திருதியை நாளில் அசையும் அசையா சொத்துக்களில் பணம் முதலீடு செய்தால் செல்வம் கொழிக்கும் என்பது வணிகர்கள் தொடக்கி வைத்த வணிகத் தந்திரம். குறிப்பாக இது தங்க நகை வியாபாரிகளின் முன்னெடுப்பு. அட்சயதிருதியை நாளில் 'குன்றிமணி அளவு தங்கம் வாங்கினாலும் அது குன்று போலப் பெருகும்' என்று கூறும் வழக்காறு மக்களிடையே நிலவி வரும் காரணத்தால் கடன் வாங்கியாவது குன்றிமணி அளவு தங்கம் வாங்க வேண்டும் என்ற மனநிலையை இது மக்களிடம் வளர்த்துவிட்டது. சென்ற ஆண்டு வாங்கினோமே அதனால் செல்வம் கொழித்ததா என்பது ஆராயப்படுவதில்லை. அட்சய திருதியை கொண்டாட்டம் அண்மைய வழக்கம். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர்

அட்சய திருதியை என்பதை ஆன்மீகத்தில் மூழ்கிய குடும்பத்தினர் கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. குறிப்பாக 50 அல்லது 60 அகவை முதிர்ந்த பெரியோர்களைக் கேட்டாலோ, அக்காலத்து ஏப்ரல் மே மாதங்களில் வெளியான பத்திரிக்கை செய்திகள், கதைகள் போன்றவற்றை மீள்பார்வை செய்தாலோ இந்த உண்மை தெளிவாகும். இது மக்களின் ஆசைக்குத் தூபம் போட்டு வணிக நோக்கில் பெரிதாக்கப்பட்ட பண்டிகை.

ஹஸ்தினாபூர் சமணக் கோவில் சிற்பங்கள்
[Hastinapur-Digamber Jain Mandir - Jambu Dweep Rachna
Ak47Gamer Photo: Aug 2021]

தீபாவளியைப் போலவே சமணர்களிடம் இருந்து வைதீகச் சமயத்தார் உள்வாங்கிக் கொண்டது இந்த அட்சய திருதியை பண்டிகையாகும்.

சமணத்தில், அட்சய திருதியை நாள் என்பது, சமணத்தின் முதற் தீர்த்தங்கரரான ரிசபநாதர் தமது ஓராண்டு கடுந்துறவு வாழ்வை நிறைவுசெய்து தமது குவிந்த கைகளில் ஊற்றப்பட்ட கரும்புச் சாற்றைப் பருகிய நாளாகக் கருதப்படுகிறது.

‘வர்சி தப’ என்றும் சமணர்கள் இவ்விழாவைக் குறிப்பிடுவது வழக்கம். ஓராண்டு முழுவதும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் உண்ணா நோன்பு இருக்கும் வர்சி தப எனப்படும் நோன்பைக் கடைப்பிடிப்போர், இந்த நாளில் பாரணை செய்து (கரும்புச் சாற்றை அருந்தி) தமது தபசை நிறைவு செய்கின்றனர். இந்நாளில் சமணர்கள் உண்ணாநோன்பு இருப்பதும் வழக்கமே.

சமண பண்டிகையான தீபாவளியை எடுத்துக் கொண்டு அதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட கதைகளாக நரகாசுரன் வதம்,ராமர் சீதை அயோத்தி திரும்பிய நாள், லக்ஷ்மி பூஜை நாள் என்று பற்பல காரணங்களைக் காட்டி இந்துக்கள் தீபாவளி கொண்டாடும் வழக்கம் போலவே; வைதீகச் சமயம் இந்நாளுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பல புராணக் கட்டுக் கதைகள் கொடுத்துள்ளது; அவை

1. பகவான் பரசுராமர் அவதரித்த நாள்
2. ஆதிசங்கரர் கனகதாரா ஸ்தோத்திரம் இயற்றிய நாள்
3. திரேதாயுகம் ஆரம்பமான நாள்
4. பாண்டவர்கள் சூரியனிடமிருந்து அட்சய பாத்திரம் பெற்ற நாள்
5. அன்னபூரணி தேவி அவதரித்த நாள்
6. கங்கை நதி பூமியைத் தொட்ட நாள்
7. குபேரன் இழந்த செல்வங்களை மீட்ட நாள்
8. வியாசர் மகாபாரதம் எழுத ஆரம்பித்த நாள்
9. குசேலர் கிருஷ்ண பகவானைச் சந்தித்த நாள்

இவற்றில் இழையோடி இருக்கும் கருத்து செல்வச் செழிப்பின் தொடக்கம் என்பதாக இருப்பதைக் காண முடிகிறது.

இந்துமதத்தினர் தங்கள் சமயத்தில் அட்சயதிருதியை இணைத்துக் கொண்டது போலவே புத்த சமயத்தினரும் பிழையாக அட்சயதிருதியை நாளை மணிமேகலைக்கு அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரம் கிடைத்த நாளாகக் கூறி வருகிறார்கள். மணிமேகலை காப்பியம் சொல்லும் தகவலுடன் இக்கருத்து முரண்படுகிறது. அட்சயதிருதியைக்கும் மணிமேகலை அமுதசுரபி என்ற அட்சய பாத்திரத்தைப் பெற்ற கதைக்கும் தொடர்பில்லை.

மணிபல்லவம்தீவில் (ஆபுத்திரன் பொய்கையில் எறிந்த) அமுதசுரபி மணிமேகலைக்குக் கிடைத்த நாள் வைகாசி விசாகம் முழு நிலவு நாளாகும். இந்த நாள் புத்த பூர்ணிமா நாள் என்று அழைக்கப்படும். புத்தர் இவ்வுலகில் அவதரித்த திருநாளாகவும், அவர் ஞானம் பெற்ற நாளாகவும் இந்தப் புத்த பூர்ணிமா கொண்டாடப்படுகிறது.

அதாவது, வரும் மே 12, 2025 வைகாசி விசாகம் / புத்த பூர்ணிமா என்ற முழுநிலவு நாள், இது வட இந்திய நாட்காட்டி கணக்கு முறை; பார்க்க:*https://www.drikpanchang.com/panchang/month-panchang.html?date=12/05/2025)*

மணிபல்லவத்தீவின் 'கோமுகி' என்னும் பொய்கையிலிருந்து 'அமுத சுரபி' என்னும் அட்சயபாத்திரம் ஒவ்வோர் ஆண்டும் வைகாசித் தூய நிறைமதி நாளில் தோன்றும்; அதில் இட்ட அமுதம் கொள்ளக் கொள்ளக் குறையாது வளர்ந்துகொண்டே இருக்கும் என அப்பகுதியைக் காத்து நிற்கும் தீவதிலகை என்பவள் மணிமேகலையிடம் கூறுகிறாள். இதுதான் மணிமேகலை காப்பியத்தில் உள்ள தகவல்.

(ref : https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0017366_மணிமேகலை.pdf)

எனவே, வைகாசி விசாகா நாள் என்பது வேறு, அட்சயதிருதியை நாள் என்பது வேறு.

ஒரு பண்பாட்டில் ஒரு குறிப்பிட்ட பண்டிகைக்கு, நம்ப முடியாத வகையில் பல்வேறு கதைகள் சொல்லப்பட்டால், அவை யாவும் அப்பண்டிகையைத் தங்கள் வழக்கத்தில் உள்வாங்கிக் கொள்ளப் புனையப்பட்ட புனைவுகள் என்பதையும், அப்பண்டிகை உண்மையில் வேறு ஒருவருக்குச் சொந்தம் என்பதற்கான அறிகுறி அது என்பதையும் புரிந்து கொள்ளலாம். பிறகு முறையான ஆய்வை முன்னெடுப்பதன் மூலம் அப்பண்டிகை எவருடைய வழக்கம் என்பதும் தெளிவாகும். இது போன்ற விழாக்களும் கொண்டாட்டங்களும் பண்பாட்டுக் கலப்பின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை.

தமிழர்களின் இயற்கைத் தெய்வம்

பாமயன்

இயற்கையைத் தெய்வமாகக் காணும் மரபு பல பண்டைச் சமூகங்களில் உள்ளது. இயற்கையால்தான் வாழ்கின்றோம் என்ற புரிதலின் அடிப்படையில் எழுந்த உணர்வால் அதைப் போற்றும் பண்பும் உருவாகியுள்ளதைக் காண முடிகிறது. மழை, காற்று, வெயில், இடி, மின்னல் போன்ற மனிதர் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் பண்டை மக்களுக்குப் பெரும் அச்சத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்த காரணத்தால் அந்த இரண்டு உணர்வுகளைக் கொண்ட ஒன்றாக அந்த ஆற்றலைக் கருதியுள்ளனர். மக்களுக்கு அப்பாற்பட்ட அந்த ஆற்றல் உலகத்தை இயக்குவதாக நம்பினார்கள். அதையே தெய்வமாகக் கருதினார்கள்.

பண்டைச் சமூகங்களான, எகிப்து, சுமேரியா, சீனா, மாயா, இன்கா முதலிய பழங்குடிகள் இயற்கையைத் தெய்வமாகப் புரிந்து கொண்டனர். நிறுவனமயப்பட்ட இறையியல் அமைப்புகள் தோன்றுவதற்கு முன்பாக இந்த நிலை இருந்துள்ளது.

இன்கா நாகரிக மக்கள் பச்சையம்மா *(Pachamama)* என்ற தெய்வத்தை பூமித்தெய்வம் என்றும் வளமைத் தெய்வம் என்றும் கருதினார்கள். நடவு, அறுவடை ஆகியவற்றுக்கும் இதுவே தெய்வம் என்று கருதினார்கள். பச்சையம்மா என்பது தமிழ்ப் பெயர்போல உள்ளது நமக்கு வியப்பாகத் தான் உள்ளது.

பாரசீகர்கள் சுபென்டா ஆர்மதி *(Spenta Armaiti)* என்ற தெய்வத்தைப் பூவுலகத் தெய்வமாகக் கருதினர்.

கிரேக்கர்கள் ‘கையா’ *(Gaia)* என்ற தெய்வத்தை, பூமித்தாய் என்று அழைத்துக் கொண்டனர். நிலத்தையே தெய்வமாகக் கொண்ட மரபு இவர்களுக்கு உள்ளது.

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட வைதீக மரபில் நான்காம் வேதம் என்று அறியப்படும் அதர்வண வேதத்தில் உள்ள ‘பிரிதிவி சூக்தத்தில்’ பூமி, கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்குமான துணைவியாக அல்லது மனைவியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

‘ஸா நோ பூதஸ்ய பாவயஸ்ய பத்னிவுரும் லோகம் ப்ருதிவி நஹ் க்ருணோது’ (அதர்வ வேதம்: 12.1)

துணைவி என்பதைத் தெய்வமாகவும் சில மொழிபெயர்ப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். எப்படியானாலும் ‘பிருதிவி’ என்ற சொல்லாடல் பூமி என்பதைத் தெய்வமாகக் கருதுவதை அறிய முடிகிறது.

பழங்குடிச் சமூகங்கள் சில பகுதிகளை துய்யப் (புனிதம்) பகுதிகளாக உயர்த்தி வைத்துக் கொண்டனர். அந்தப் பகுதியில் உள்ள செடி, கொடிகளைப் பறிப்பது கூடாது. விலங்குகளைக் கொல்வது கூடாது, அது மட்டுமல்லாது தேவையற்ற ஒலிகளைக் கூட எழுப்பக் கூடாது போன்ற கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தனர். இந்த ‘விலக்கு’ அல்லது ‘தவிர்ப்பு’ *(taboo)* என்பது பல்லுயிர் ஓம்பல் என்பதற்கான அடித்தளம் ஆகும். உயிரியல் பன்மயம் மிக்க பல பகுதிகள் காக்கப்படுவது இன்றைய அரசுகள் கட்டுப்படுத்தும் ஒதுக்குக் காடுகள், சரணாலயங்கள் போன்றவற்றால் மட்டும் காப்பாற்றப்படுவதல்ல, ஆண்டாண்டு காலமாக பதியெழு அறியா பழங்குடிகள் தங்களுக்குள் வகுத்துக் கொண்ட விலக்குகள் வழியாகவே நடந்து வந்துள்ளன. அந்தச் சூழலியல் உணர்வுநிலை அவர்களுக்கு

வாய்க்கப் பெற்றிருந்தது. வெப்ப மண்டலப் பகுதிகளில் பழங்குடிகளால் காக்கப்பட்டுள்ள பரப்புக் காடுகளை அரசுகள் கூட காக்கவில்லை என்று ஆய்வுகள் கூறுகின்றன. (Journal of Sustainable Forestry - Volume 42, 2023 - Issue 3).

காடுகளில் தங்களுடைய முன்னோர்களின் மூச்சுக்காற்று உள்ளதாக உணர்கின்றனர். அதை ‘ஆவிகள்’ என்று அரைகுறையாகப் புரிந்து கொண்டு நாம் பகுத்தறிவு விளக்கம் கொடுத்துப் புறந்தள்ளுகிறோம். ஆனால் பேராற்றல் மிக்க அறிவியல் சமூகம் இயற்கையைப் பாதுகாக்க வில்லையே!

காலநிலை மாற்றம் போன்ற கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள இந்த துய்யக் காடுகள் முறையே சிறந்த அணுகுமுறை என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. பழங்குடிகள் பின்பற்றும் ‘தவிர்ப்பு’ முறையால் பல அரிய வகை உயிரினங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

எத்தியோப்பியாவில் தேவாலயங்களே இப்படிப்பட்ட துய்யக் காடுகளைப் பாதுகாக்கின்றன. அவர்கள் அங்குள்ள செடி, கொடி. புதர் என்று யாவற்றையும் தூய ஆவியின் வடிவங்களாகவே பார்க்கின்றனர். அவற்றைப் போற்றிப் பாதுகாத்தல் என்ற பண்பு இருந்துள்ளது. இவர்கள் இந்த ‘தவிர்ப்புகளை’ எழுதப்பட்ட சட்டங்கள் வழியில் பின்பற்றுவதில்லை, மரபு மரபாக வரும் வாய்மொழி ஆணையாகவே பின்பற்றுகின்றனர். அதற்கு ‘முன்னோர் ஆவி’ என்ற கருத்தியல் அவர்களுக்கு உதவி வருகிறது.

‘சிம்பாப்வே’ நாட்டுப் பழங்குடிகள் காலங்காலமாக யானைகளையும் குரங்குகளையும் வரிக்குதிரைகளையும், எருமைகளையும் கொல்லாமல் தவிர்க்கின்றனர். இப்போது அதற்கான அறிவியல் காரணம் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றைக் கொல்வதால் ஒருவகை நோய் அவர்களுக்கு வருவதாக ஆய்வுகளில் கண்டறிந்தார்கள். அதேபோல நைசீரியப் பழங்குடிகளிடம் செய்யப்பட்ட ஆய்வுகள் உணர்த்துகின்றன. ‘நசோ சமண்யங்கா’ என்ற பழங்குடிகள் யானையைத் தங்கள் குடிச்சின்னமாக அல்லது குலக்குறியாக வைத்துள்ளனர். பண்டைத் தமிழர்கள் இந்த அடையாளங்களை ‘குடிநிலை’ என்று குறிப்பிடுகின்றனர். இவற்றைக் காக்கும் பொறுப்பை இந்தக் குடிகள் ஏற்றுள்ளன.

இம்மாதிரியான பண்டைய இயற்கைத் தெய்வப் பார்வை தமிழர்களுக்கு உண்டா என்று தேடியபோது எண்ணற்ற செய்திகள் கிடைத்தன. தமிழ் என்பது இயற்கை இயைபு மொழி. தமிழ் தோன்றிய நிலம் அல்லது திணை, வெப்ப மண்டலப் பகுதி என்பதால் இயற்கை இம்மக்களின் வாழ்வுக்கு இணக்கமாக உள்ளதால் இயற்கையையும் தமிழ் மொழியையும் பிரிக்க முடியாது.

‘அணங்கு’ என்றும் ‘சூர்’ என்றும் ‘சூரர மகளிர்’ என்றும் அறியப்படும் இயற்கைத் தெய்வங்கள் பற்றிய ஏராளமான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன.

முதலில் ‘சூர்’ என்பதை இயற்கைத் தெய்வமாகப் பண்டைத் தமிழர் கருதினர்.

தெய்வம் என்பது முதலில் இயற்கையின் நிகழ்வுகளான மழை, இடி முதலியவற்றால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகவே தோன்றிய கருத்தாகும். எனவே இயற்கையை ஒரு தெய்வமாகவே மக்கள் பார்க்கத் தொடங்கியுள்ளனர்.

சூர் என்ற சொல் சுள் என்ற வேர்ச்சொல் வழியாகத் தோன்றியது. சுள் என்பதற்குச் சுடுதல் என்று பொருள். சுள்ளை என்றால் செங்கல் முதலியவற்றைச் சுடும் இடம்.

சுள் > சுர் > சுரம்

சுள் > சுர் > சூர் (சொற்பிறப்பியல் பேரகரமுதலி)

இப்படியாக சூர் என்ற சொல் விரிந்து உருவாகியுள்ளது. சுடுதல் என்பதும் வெப்பம் என்பதும் அச்சத்திற்கான அடிப்படையாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

சுடும் கதிரவனின் வெப்பம் பெருந்துயர் தருவதாக உள்ளதாக அகநானூறு குறிப்பிடுகிறது.

தெறு கதிர் உலைஇய வேனில் வெங் காட்டு
(அகம்: 153)

வெப்பமான வெயில் துன்பம் தரும் தகிக்கும் குடிசைகள் பற்றி சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர்
குரம்பை (சிறு: 174)

வெயில் எப்படிக் கொல்லும் என்பதைத் திருக்குறள் விளக்கும்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே'
(குறள்: 77)

துன்பம், அச்சம் தரும் சூர் தெய்வமாக அறியப்பட்டதைக் காணலாம்.

'மிகப் பரந்த மலைப்பகுதியில் உள்ள சுனையில் நீர் பெருகி ஓடுகிறது, பெரிய மலைத் தொடரில் அருவி ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது, காட்டாறு கடுவிரைவாக பாய்ந்து கற்களைச் சிதறிவிட்டு வருகிறது, மூங்கில்களை இழுத்துக்கொண்டு அந்த நீரலைகள் காட்டில் மோதிச் செல்கிறது. இப்படியான இடத்தில் சூர் என்னும் தெய்வத்தை இருக்கும்' என்று நற்றிணை கூறுகிறது,

'சூருடை நனந்தலைச் சுனை நீர் மல்கப்,
பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்பக்,
கல் அலைத்து இழிதரும் கடுவரல்
கான்யாற்று...' (நற்: 7)

'மலையில் உள்ள சுனை எனப்படும் நீரூற்று கடவுள் தன்மை கொண்டது, அங்கு யாரும் பறிக்கக் கூடாத (தடுக்கப்பட்ட) குவளை மலர் அது இலைகளை உதிர்த்துப் பூத்துள்ளது, காந்தள் இரத்தம் போலச் சிவந்து பொலிவுடன் உள்ளது இவற்றை பாங்குறத் தொடுத்து அணிந்து கொண்டு பெரிய மலைத்தொடரில் அருவியின்

இசைக்கு ஏற்ப சூர் மகள் என்ற தெய்வப் பெண் ஆடுகின்றாள்' என்று மிக நுட்பமாக நற்றிணை இயற்கையைத் தெய்வமாகக் கொள்வதைக் காட்டுகிறது.

கடவுட் கற்சுனை அடை இறந்து அவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண் பூ உரு கெழக் கட்டிப்,
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்
அருவி இன் இயத்து ஆடும்... (நற்: 34)

இங்கு அந்த பொற்புடைக் காட்டில் உள்ள மலர்கள் தெய்வத்திற்கே உரியவை, மக்கள் யாரும் பறிக்கக் கூடாது என்று விளக்குகிறது.

இதே போன்ற கருத்தை கபிலர் நற்றிணைப் பாட்டில் குறிப்பிடுகிறார்.

சூராகிய தெய்வம் இருக்கும் மலைத்தொடரில் தழைகளையும் பறித்தல் கூடாது என்று இப்பாடல் கூறுகிறது,

'சூருடை அடுக்கத்த கொயற்கு
அருந்தழையே' (நற்: 359)

நிலையாக உள்ள உயிர்கள் கூட செல்ல முடியாத கடுமையான பொதிகை மலையில் சூர் என்ற தெய்வம் உள்ளது, சந்தனமும் உள்ளது என்று குறுந்தொகை கூறுகிறது.

'மன் உயிர் அறியாத் துன் அரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம்...'(குறு: 376)

சூர் அமைந்திருக்கும் பெரிய மலையில் உள்ள அருவியில் குளிக்கும் பெண்களைப் பற்றி நற்றிணை குறிப்பிடுகிறது,

'சூருடைச் சிலம்பின் அருவி ஆடி' (நற்: 373)

சூர்களுக்கு பலிச்சோறு கொடுக்கும் பழக்கம் இருந்ததைப் பின்வரும் பாடலால் காணலாம்,

கரிய கண்போன்ற அமைப்பைக் கொண்ட கருனைக் கிழங்கும், செந்நெல்லைக் குற்றி எடுத்து வெண்மையான சோறும் சேர்த்து சூர்களுக்குப் படைப்பர்.

'கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய' (நற்: 367)

பல ஆப்பிரிக்க, தென்னமரிக்கப் பழங்குடிகளிடம் தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் பழக்கம் இருந்து வருகிறது. தங்களை முன்னோர்களின் ஆவிகளுடன் இணைத்துக் கொள்ளும் ஓர் உளவியல் தன்மையை இதன் மூலம் காணலாம்.

அருவிகள் உள்ள மலைகளில் சூர் இருக்கும் என்று ஐங்குறுநூறு கூறும்.

'இலங்கும் அருவிச்
சூர் மலை...(ஐங்: 249)
சூர் தெய்வம் உள்ள மலைநாடனைப் பற்றி அகநானூறு கூறும்,
'சூர் உறை வெற்பன்...(அகம்: 98)

சூர் என்ற தெய்வம் இருக்கின்ற மலையில் ஒளி பொருந்திய பூக்களைச் சூடிக்கொண்டு விரும்புகின்ற வடிவத்தில் அணங்கு வருமாம்.

> *'சூர் உடைச் சிலம்பில் சுடர்ப் பூ வேய்ந்து*
> *தாம் வேண்டு உருவின் அணங்குமார்*
> *வருமே' (அகம்: 158)*

ஆப்பிரிக்க, வட, நடு ஆசிய நாடுகளிலும் அமெரிக்கத் தொல்குடிகளிடமும் ஆவிகளுடன் உறவாடும் சடங்குகளும் நம்பிக்கைகளும் உண்டு. அந்தத் தெய்வங்களும் விரும்பிய வடிவத்துடன் வரும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இது பழங்குடிகளிடம் பொதுவாகக் காணப்படும் தன்மை. சாமன் சடங்கு முறைகள் இயற்கையுடன் அவர்கள் கொண்டிருக்கும் பிணைப்பு முறையைப் பறை சாற்றுகிறது. தலைமுறை தலைமுறைகளாக தாங்கள் இயற்கையுடன் இழையாகப் பின்னிக் கிடப்பதாக அவர்கள் நம்புகின்றனர். எனவே இயற்கைக்கு எந்தத் தீங்கும் செய்யக் கூடாது என்று கருதுகின்றனர்.

நடுகற்களில் எழுத்துக்களைப் பதிவிட்டு வைக்கும் பழக்கம் அகநானூறு காலத்திலேயே இருந்த செய்தியையும், அந்த நடுகற்கள் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாகவே ஓமை மரங்களில் (யானை ஆப்பிள் என்றும் கூறுவர்) சூர் தெய்வங்கள் தங்கும் என்று குறிப்புகள் நமக்கு வியப்புத் தருகின்றன.

> *'மருங்குல் நுணுகிய பேஎம் முதிர் நடுகல்*
> *பெயர் பயம் படரத் தோன்று குயில் எழுத்து*
> *இயைபுடன் நோக்கல் செல்லாது,*
> *அசைவுடன்*
> *ஆறு செல் வம்பலர் விட்டனர் கழியும்*
> *சூர் முதல் இருந்த ஓமையம் புறவின் (அக: 297)*

இயற்கையைத் தெய்வமாக நம்பிய சமூகம் பின்னர் நடுகற்களையும், அதில் எழுத்துக்களைப் பொறிக்கும் நிலைக்கு வந்ததையும் இந்தப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

பரந்து விரிந்த கொல்லி மலையில் பெருமழை பொழிந்து தீர்த்தவுடன் சூர் தெய்வம் விருப்பமுடன் வரும். அதாவது செழித்துக் காணப்படும் இயற்கையே தெய்வம் என்ற கருத்து பழந்தமிழர்களிடம் இருந்துள்ளது.

> *'கார் புகன்றெடுத்த சூர் புகல் நனந்தலை*
> *மா இருங்கொல்லி' (அகம்: 303)*

தெய்வம் இருக்கும் இடத்தில் மழை இடியுடன் கொட்டி முழங்கும் என்று கூறப்பட்டுள்ளது,

> *'சூர் புகல் அடுக்கத்து மழை மாறு முழங்கும்'*
> *(அகம்: 359)*

சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையில் பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்குரைக்க வந்தபோது, அவர் உருவத்தை விளக்கும்போது, சூர் எனும் தெய்வம் உள்ள காட்டில், விருப்பமுடன் காளி இருப்பதாகக் கூறப்படுகிறது

‘சூருடைக் கானகம் உகந்த காளி’
(சிலம்பு: வழக்குரை காதை: 10)

சூர் என்ற தெய்வம் சூரர மகளிராகவும் சங்க இலக்கியப் பரப்பில் அடுத்து விவரிக்கப் பட்டுள்ளது.

‘மிக உயர்ந்த மலையில், சிவந்த பாதத்தில் கிண்கிணி என்ற கொலுசை அணிந்து கொண்டு வளைந்த இடையினையும் பருத்த தோளையும் கொண்டு, பட்டுப் பூச்சியின் வண்ணத்துடன் கூடிய இயற்கையான நிறத்தைக் கொண்ட ஆடையை உடுத்திக் கொண்டும் பல மணிகளைக் கோர்த்துச் செய்த மேகலையை உடுத்திய சிறுவரிகளையுடைய அல்குலைக் கொண்டும், செயற்கையான எந்த ஒப்பனையையும் செய்யாத பேரழகினைக் கொண்டும், நாவல் பெயருடைய ஒருவகைப் பொன்னால் புனைந்து செய்த அணிகலன்களையும், நெடுந்தொலைவும் தாண்டி விளங்குகிற குற்றம் அற்ற திருவுடலையும் உடையவராய் தோழிமார் ஆய்ந்து முடித்து இரண்டாக வகிர்ந்த நெய் தடவிய பசையுள்ள கூந்தலிலே சிவந்த காம்பையுடைய சிறிய வெட்சிப் பூக்களைச் செருகி, பசுமையான தண்டையுடைய குவளை மலரின் தூய இதழ்களைக் கிள்ளிப் பதித்து, தெய்வ உத்தி என்னும் பெயருடைய தலைக்கோலத்தையும் வலம்புரிச்சங்கு வடிவாய்ச் செய்த நகையையும் உரிய இடத்திலே அணிந்து, பொட்டு வைத்த மணம் வீசுகின்ற அழகிய நெற்றியில் முழுதும் பின்னி முடித்த குற்றம் அற்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பக மலரைச் செருகி, கரிய புற இதழுடன் பூம்பஞ்சினை உடைய விளக்கமான மருதப் பூங்கொத்துக்களைப் பதித்து, கிளையினின்றும் அழகுறத் தோன்றி எழுந்த நீரின் கீழுள்ள செவ்விய அரும்புகளே இணைத்துத் தொடுத்த மாலையினைக் கொண்டையைச் சுற்றி வளைய வைத்து, துணையாக இரு பக்கமும் வளவிய காதுகளில் நிறையச் செருகிய ஒள்ளிய அசோகந் தளிர்போல் நுண்வேலை மிக்க அணிகலன் பூண்ட மார்பில் அசைந்து கொண்டிருக்க, திண்ணிய வயிரமுடைய நறுமணமுள்ள சந்தனத்தை அரைத்து உண்டாக்கிய பொலிவும் நிறமும் மிக்க குழம்பினை மணம் கமழும் மருதப் பூங்கொத்தினைப் பதித்தாற்போலக் கோங்கின் குவிந்த மொக்கு போன்ற இளமுலைகளில் அப்பி, அதன்மேல் விரிந்த வேங்கை மலரின் நுண்ணிய மகரந்தப் பொடியை அப்பிப் பதித்து, அழகுறத் தோன்றும்படி விளா மரக் குறுந்தளிரைக் கிள்ளி அணிந்து, கோழி உருவங் கொண்டு ஓங்கிப் பறக்கும் வெற்றிக்கொடி வாழ்க என்று வாழ்த்தி, மலைப்பகுதியெல்லாம் எதிரொலிக்கும்படி பாடி, சூரர மகளிர் விளையாடுகின்ற சோலைகள்’

என்று மிக விரிவாகத் திருமுருகாற்றுப்படை முப்பது வரிகளில் சூரர மகளிரை வரைந்து காட்டியுள்ளது.

‘மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி
கணைக்கால் வாங்கிய நுசுப்பின்
பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கை புனைந்து இயற்றாக் கவின்பெறு
வனப்பின்
....
....
வண் காது நிறைந்த பிண்டி ஒண் தளிர்
நுண் பூண் ஆகம் திளைப்ப திண் காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேம் கமழ் மருது இணர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண் தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா
கோழி ஓங்கிய வென்று அடு விறற்கொடி
வாழிய பெரிது என்று ஏத்தி பலர் உடன்
சீர்திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை’ (திரு:12-41)

இவ்வளவு விளக்கமாக சூரர மகளிரைப் படம் பிடித்துக் கொடுத்துள்ளதைக் கவனிக்கும்போது இயற்கைத் தெய்வத்தைப் பழந்தமிழர் எப்படி உற்றுநோக்கியுள்ளனர் என்று புரிகிறது.

சூரர மகளிரைச் சாட்சி வைத்து தலைவன் கைத்தலம் பற்றிக் கொண்டு உன்னை மணக்கிறேன் என்று சூளுரைத்த செய்திகள் உள்ளன.

‘நேர் இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோடு உற்ற சூளே’ (குறுந்:53)

தலைவன் சூரர மகள் போல் நீ இருக்கிறாய் என்று புகழ்ந்து பேசி அவளை மணந்த செய்திகளும் உள்ளன. (அகம்:32)

சூர் என்ற இயற்கைத் தெய்வம், பின்னர் ‘அணங்கு’ என்று அறியப்பட்டது.

பண்டைத் தமிழ் வாழ்வியலை ஆவணப்படுத்திய நூல் தொல்காப்பியம். இதில் பின்வரும் நூற்பா,

‘அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே’
(தொல்: மெய்: 252)

என்று விளக்குகிறது. அதாவது அணங்கு, விலங்கு, கள்வர், அரசு ஆகியவை மாறுபாடில்லாத அச்சத்தைத் தரக் கூடியவை என்பது இதன் பொருள்.

காடுறை தெய்வமான அணங்கு அச்சம் தரும் ஒன்றாகவே அறியப்படுகிறது.

அச்சத்தின் காரணமாகத் தோன்றும் துன்பம்

'அணங்கு' என்பதற்கு நெருங்கி பிடித்தல் என்ற பொருள் உள்ளது.

அள்> அண்> அணங்கு என்ற வேர்ச்சொல் அடிப்படையில் தோன்றிய சொல் இதுவாகும்.

விரும்பப்பட்டவரை விரும்பிப் பிடித்துக் கொண்டு துன்பந்தருவது அணங்கு.

'இளைய யானைக் குருளை காட்டில் எப்படி அச்சப்படுத்துமோ அப்படி இவள் என்னை அச்சமூட்டுகிறாள்' என்று குறுந்தொகைப் பாட்டு கூறுகிறது,

'சிறு வெள்ளரவின் அவ்வரிக் குருளை,
கான யானை அணங்கியாஅங்கு,
இளையள், முளை வாள் எயிற்றள்,
வளை உடைக் கையள், எம்
அணங்கியோளே' (குறுந்:119)
பின்வரும் வரிகள் அணங்கு என்பது இயற்கையான கடவுள் என்றே கூறுகிறது.
'அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி'
(பொருந: 20)

இனிய சீரிய ஒலியுடன் கின்னரம் என்ற பறவை பாடும் மலைச்சாரலில் அணங்கு இருக்கும்

'இன் சீர்க்
கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்'
(பெரும்:494)

தெய்வத்தைப் போன்ற பெண்கள் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது

அணங்கு வீழ்வு அன்ன பூந்தொடி மகளிர்
(மது: 446)

கடலோரப் பகுதியான நெய்தல் நிலத்தில் சுறா மீனின் கொம்பை நட்டு தெய்வத்தை வருத்தி வீட்டுக்கு அழைக்கும் சடங்கு பட்டினப்பாலையில் உள்ளது,

'சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச் சேர்த்திய வல் அணங்கினால்' (பட்:87)

சூர் என்ற தெய்வக் கருத்து பெரிதும் குறிஞ்சி, முல்லை நிலங்களில் காணப்படும்போது அணங்கு என்ற தெய்வம் நெய்தல், பாலை என்று மற்றத் திணைகளிலும் பரவிக் காணப்படுகிறது.

மார்பகத்தின் மீது தெய்வம் வந்து இருக்க வேண்டும் என்று வேண்டும் செய்தியை நற்றிணையில் காண முடிகிறது,

‘சுணங்கு அணி வன முலை அணங்கு கொளத்
திமிரி’ (நற்: 9)

பெண்களைப் பீடிக்கும் ஒரு தெய்வமாக அணங்கு இருப்பதையும் காண முடிகிறது, குறிபார்த்து பேய் பிடித்துள்ளதாக அறியும் சடங்கு இங்குக் குறிப்பிடப்படுகிறது,

‘அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி,
வெறி என உணர்ந்த உள்ளமொடு மறி
அறுத்து
அன்னை அயரும் முருகு’ (நற்: 47)

ஆக, சூர் என்ற தெய்வம், சூரர மகளிர் என்றும், அணங்கு என்றும் முருகு என்றும் வளர்ச்சிநிலை எட்டியுள்ளதைச் சங்க இலக்கியங்கள் வழி காண முடிகிறது.

இயற்கையைத் தெய்வமாகக் காணும் ஒரு மரபு நமக்குத் தரும் செய்தி யாதெனில் உயிர்ப்புள்ள இயற்கையோடு நாம் அனைவரும் இணைந்துள்ளோம். அதைத் தனித்துப் பார்க்க முடியாது என்பதாகும். இயற்கைக்கு நாம் செய்யும் கேடுகள் நம்மைத் திருப்பித் தாக்கும் என்பது அடுத்த செய்தியாகும்.

உலக தந்தையர் தினம் (ஜூன் 15)

அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்,
எந்தையும் உடையோம், எம்குன்றும் பிறர் கொளார்,
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்,
வென்றெறி முரசின் வேந்தர்,
எம் குன்றும் கொண்டார், எந்தையும் இலமே.

– பாரிமகளிர் பாடியது

"பாறைகள் சில பார்வைகள்"

ச.சபாரத்தினம்
புவியியலாளர், க◌ோவை.

நாம் வாழும் பூமியில் தவிர்க்க முடியாத அங்கம் பாறைகள். ஏன், இப்படியும் கூறலாம். இந்த புவிக்கோளம் பாறைகளால் ஆனது. ஒரு புவியியலாளனாக, பாறைகள் குறித்த புவியியல் பார்வைகளையும், பாறைகளின் பயன்பாடுகளின் ஒன்றான, சிறப்பு வாய்ந்ததும், ஆர்வமிக்கதுமான சிலை வடித்தலில் பாறைகள் குறித்த சிற்பிகளின் பார்வைகள் குறித்தும் இங்கே காண்போம்.

புவியியல் பார்வைகள்:-

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கனிமங்களின் (Minerals) சேர்க்கையே பாறை எனப்படும். பாறைகள் மூன்று வகைப்படும்.

அக்கினிப்பாறைகள் (Sedimentary Rocks):- இவை முதன்மைப்பாறைகள் என்றும் அழைக்கப்படும்.

உருமாறிய பாறைகள் (Metamorphic rocks):- அக்கினிப்பாறைகளோ, படிவுப்பாறைகளோ புவியின் வெப்பம், அழுத்தம் இவற்றின் காரணமாக உருமாற்றம் பெற்று உருவாகுபவை.

அக்கினிப்பாறைகள் - முற்றிலும் பாறைக்குழம்புகளால் ஆன புவிக்கோளமானது, சுழன்று சுழன்று மெல்லக்குளிர்ந்து உருவாகும் பாறைகள். பூமியின் மையப்பகுதி (Core) இன்றும் இன்னும் பாறைக்குழம்பு நிலையிலேயே இருக்கிறது. இந்த பாறைக்குழம்புகள் குளிர்ந்து உருவாகும் பாறைகளே அக்னிப்பாறைகள். இவை எரிமலைப்பாறைகள் (Volcanic Rocks) ஆழ்நிலைப் பாறைகள் (Plutonic rocks) என இருவகைப்படும். எரிமலைக்குழம்பு பூமிக்கு அடியில் இருந்தால் மேக்மா (Magma) எனவும் பூமிக்கு மேலே வந்தபின் லாவா (Lava) என்றும் அழைக்கப்படும். பசால்ட், அப்சிடியன் போன்றவை எரிமலைப்பாறைகளுக்கு எடுத்தக்காட்டுகள் ஆகும். பூமிக்கு அடியில் வெகு

ஆழத்தில், உருவாகி கெட்டிப்பட்டவை ஆழ்நிலைப்பாறைகள் ஆகும். கிரானைட் (Granite) கேப்ரோ (Gobbro) போன்றவை இதற்கு உதாரணம் ஆகும்.

படிவுப்பாறைகள்:-

மலை உச்சி போன்ற உயரமான, தூரமான இடங்களிலிருந்து நீரால் அடித்து வரப்பெற்ற, உருண்டு, பிரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி, நொறுங்கி, துகள் ஆகி படிவம் (sediment) ஆகிறது. அவ்வாறு தூள் ஆக இருப்பவை ஒன்று சேர்ந்து இறுகி, உருவாகும் பாறைகள் படிவுப்பாறைகள். சுண்ணாம்புக்கல் (Limestone), மணற்கற்கள் (Sandstone) போன்றவை இதற்கு உதாரணங்கள் ஆகும்.

உருமாறிய பாறைகள்:-

அக்னி பாறைகளோ, படிவுப்பாறைகளோ, பூமியின் அழுத்தம் மற்றும் வெப்பம் காரணமாக உருமாற்றம் அடைந்து உண்டான பாறைகள். அவ்வாறன நிகழ்வின்போது பாறைகளின் ரசாயனத்தன்மை மாறுவதில்லை.

உதாரணமாக Marble என்னும் பளிங்குக்கல். இவை சுண்ணாம்புக்கல்லின் உருமாற்றம் அடைந்த பாறைகள் ஆகும். பூமியின் வெகு ஆழத்தில் உருமாறிய கரியே (Carbon) வைரமாக மாறுகிறது.

சிலை வடிப்போரின் பார்வையின் பாறைகள்:-

கல்லிலே கலை வண்ணம் காணும் கலைஞர்களை சிற்பி, கற்றச்சன், ஸ்தபதி இப்படி பலவாறு அழைப்பார்கள். விஸ்வ பிரம்மனே எல்லா மகரிஷிகளுக்கும் முதன்மையானவர் என்பர். அவரே இந்த உலகை வடிவமைத்தவர். ஐந்தொழில்களைப்படைத்தவர். அதில் இறைவனின் திருவுருவங்களை வடிக்கும் கற்றொழில் முதன்மையானது என்பார்கள். ஒரு சிற்பிக்கு, சிலை வடிக்க வேண்டிய பாறையில், அந்த உருவம் மட்டுமே மனதில் இருக்குமாம். அது தவிர தேவையில்லாத பகுதிகளை அகற்றி விக்கிரகம் உருவாக்கப்படும் என்று ஒரு கருத்து உண்டு.

ஒரு சிற்பி சிலைவடிக்க, எவ்வாறு பாறைகளைத் தெரிவு செய்கிறார், ஒரு சிற்பியின் பார்வையில் பாறைகள் மூன்று வகைப்படும். அவை 1. ஆண் கல் 2. பெண் கல் 3. அலிக்கல். இதை எவ்வாறு அறிவது,

சிற்பிகள் பார்வையில்

ஆண்கல்:-

நல்ல விளைச்சலான (Yield) கல் - மிகவும் உறுதியாக இருக்கும். தட்டினால் மணி ஓசை கேட்கும். இவை ஆண் உருவகச்சிலைகள் செய்யப்பயன் படுகின்றன.

பெண்கல்:-

இவை மத்திமமான வளர்ச்சியும், உறுதியும் கொண்டிருக்கும். தட்டினால் வெங்கல ஓசை வரும். இவை பெண் உருவ சிலைகள் செய்யப்பயன்படுகின்றன.

அலிக்கல்:-

இவை உறுதியான கற்கள். இவற்றில் ஓசை வராது. இவை சிலைகளின் பீடம், மேடை போன்ற அமைப்புகளைச் செய்வதற்குப் பயன்படுகின்றன.

சந்திரகாந்தக்கல்:-

உண்மையில் இது பாறை அல்ல. ரத்தினக்கற்கள் (Gem stone) வகைகளில் ஒன்று. இவை மென்மையான கல் ஆகும். இதை சந்திரகாந்தம் அல்லது நிலவுக்கல் என்று அழைப்பார்கள். இது வெண்மை நிறத்துடன், சில சமயங்களில் நீல ஒளி பாய்ச்சியும் காணப்படும். எனவே Blue stone (நீலக்கல்) என்றும் அழைகப்படும். வேதியியல்படி சோடியம் பொட்டாசியம் அலுமினியம் சிலிக்கேட் வேதியியல் வாய்பாடு (Chemical Composition) உடையவை. கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் கருவறை சந்திரகாந்தக்கல்லால் ஆனது. எனவே கருவறை எப்போதும் குளிர்ச்சியாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் இவை பாறைகள் இல்லை. மணிக்கற்களே. எனவே, சிவலிங்க பிரதிஷ்டையின் போது. அதன் பீடத்தில் சந்திரகாந்தக்கற்களை வைத்து, பதித்திருக்க வாய்ப்புண்டு.

சில கட்டுமானங்கள், சில பாறை வகைகள்:-

உலகப்புகழ் பெற்ற தாஜ்மகால் பளிங்குக் கற்களால் ஆனது. பளிங்குக்கல் (Marble) என்பது சுண்ணாம்புக்கல்லின் உருமாறிய பாறை (Metamorphic rock) வடிவமே.

இந்தியாவின் சிவப்பு நகரம் (Pink city) என்று அழைக்கப்படும் ஜெய்ப்பூர். அங்கே உள்ள கோட்டைகள், கட்டுமானங்கள் இளஞ்சிவப்பு வண்ண மணற்கற்களால் (Pink Sand Stone) ஆனவை. எனவே அந்த நகரமே இளஞ்சிவப்பு வண்ணமயமாக இருக்கும்.

அரியலூர் அருகே கல்லங்குறிச்சி கலியுக வரதராசப் பெருமாள் ஆலயம், முழுக்க முழுக்க அந்த பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல், மற்றும் மணற்கற்களால் கட்டப்பட்டது.

கர்நாடக மாநிலத்தில், சிற்பங்களும் பெயர் பெற்ற பேளூர். ஹலபேடு ஆகியவற்றின் எழில்மிகு சிற்பங்கள் Steatite ஸ்டியடைட் (Soap Stone) என்னும் கல் வகையால் உருவாக்கப்பட்டன. இவை நாம் மாவுக்கல் என்று கூறுவோமே, அந்த வகை சார்ந்தது. நகத்தால் கீர முடியும்.

நீலகிரி மலைகள் (Blue Mountains) தூரத்திலிருந்து பார்க்கும் போது நல்ல நீல நிறத்தில் தெரியும். தாவரவியலாளர்கள், குறிஞ்சி மலர் நீல வண்ணம். அதனால் அந்த பெயர் வந்தது என்பார்கள். ஆனால் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறைதானே குறிஞ்சி பூக்கும்!!! நீலகிரி மலையின் பாறைகள் சார்னகைட் (Cherokee) என்றும் பாறைகள் ஆகும். அவற்றின் காரணமாகவே நீல நிறமும் நீலகிரி என்ற பெயரும் என்று புவியிலாளர்கள் கூறுவார்கள்.

இறுதியாக, பாறைகள் என்பது நமது பூமியின் வரலாற்றுப்பக்கங்கள் ஆகும். "Rocks are the pages of Earths History" பாறைகளை நன்கு ஆராய்ந்தால், அவற்றின் மூலம் பூமியின் கடந்த காலம் அறியலாம். Jamen Hutton என்னும் ஸ்காட்லாலந்தை சேர்ந்த புவியிலாளர் "Present is key to the past" என்றார். ஆம் நிகழ்காலமே கடந்த காலத்தின் திறவுகோல். நிகழ்காலத்தை ஊன்றி கவனிப்போம். கடந்த காலத்தை நம் கண்முன் கொண்டு வருவோம்!.

நான் குருதி பேசுகிறேன் [6]

ராஜலட்சுமி சரவணன் M.Sc., M.Phil.,
அபுதாபி

அன்பு வாசகர்களுக்கு என் வணக்கங்கள். நான் குருதி பேசுகிறேன். இந்த உலகத்தில் ஒன்றே ஒன்று பெரிது. அது எதுவென்று தேடினால் பூமியில் ஆட்கொண்டிருக்கும் 75% தண்ணீரா? அல்லது சுட்டெரிக்கும் அக்னியா? இல்லை சூறாவளிக்காற்றா? இவ்வாறு ஒவ்வொன்றாகத் தேடினால் ஒரே சொல்லில் கிடைப்பது இயற்கை.

பொதுவாக மனிதர்கள் துன்பம் வரும் காலத்தில் மட்டுமே துவண்டு போவார்கள், இல்லையேல் கால் போட்டு ஆடுவதும் கண்டதை உண்பதும் இயல்பாகக் கொண்டிருப்பார்கள். உயிருடன் கலந்திருக்கும் உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாகப் பெயர் சூட்டியிருந்தாலும், அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது மற்றும் அவைகள் தனக்குள்ளேயே செய்திகளைப் பரிமாற்றிக் கொள்ளும் (communication) என்பதை மறந்து, வயிற்றுப் பகுதியை உணவகத்திற்கு முன்னால் நிறுத்தி வைத்துள்ள குப்பைத்தொட்டி போல் நடத்துவதினால் ஏற்படும் பின் விளைவுகளைப் பற்றி பார்ப்போம்.

கரு உருவாகுவதில் தொடங்கி வளர்ச்சியுற்று வயதாகும் வரை, நாளமில்லா சுரப்பிகள் தான் அனைத்துப் பொறுப்புகளையும் எடுத்துக் கொள்கிறது. இவை ஆங்காங்கே உட்கார்ந்து கொண்டு ஊக்கிகளைச் சுரக்கின்றன. உடல் முழுவதும் குருதி வழியாகத் தேவையான இடத்திற்கு அவ்வூக்கிகள் சென்றடைகின்றன. இவை சுரப்பதில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுவதினால், உடலில் நோய்கள் வருவதற்கான முக்கிய காரணமாக அமைகின்றன. பொதுவாக, தொடர்பாடல் என்பது நம் உடலுக்குள்ளும் நடக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும்

இந்த நாளமில்லா சுரப்பிகள் உடலின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தாலும், இவை சுரக்கும் ஊக்கிகள் வேதி அல்லது இரசாயன பரிமாற்றியாக உடல் முழுவதும் குருதியில் கலந்து சுற்றி வருவதோடு அதன் இலக்கில் சென்று சுரப்பிகளையும் திசுக்களையும் "யப்பா தூங்கி விடாதே வேலையைச் செய்" என்று தூண்டுவதோடு, உடலைச் சீர் செய்வதும், செல்களின் வளர்சிதை மாற்றம் மற்றும் அதன் நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டுச் சரிவரச் செய்வதற்கு வழி வகுப்பதும், உடல் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சியிலும் கவனம் கொள்கிறது.

என் காதலி கணையம் (pancreas) மற்றும் அவளுக்கு உண்டாகும் நோய்கள் பற்றி உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். அதன் தொடர்ச்சியாக இப்போது நீரிழிவு நோய் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

நீரிழிவு நோய் (*Diabetes Mellitus*):

பொதுவாக நீரிழிவு நோய் வருவதற்கு, என்னவள் சுரக்கும் கணையச் சுரப்பு நீர் (insulin) குறைவதால், அல்லது அவள் சுரப்பதை நிறுத்தினால், அல்லது செல்களின் மேல் புறத்தில் சுரப்புநீர் சென்று அதன் வேலையைச் செய்வதில் ஏதேனும் தடை ஏற்பட்டால், அதாவது அதன் செயல்பாட்டில் ஏதேனும் குறைபாடுகள் (insulin resistance) இருப்பின் அதுவே காரணமாக அமைகின்றன. மேற்கண்ட காரணங்களினால் உடலில் உள்ள மாவுச்சத்து (Carbohydrate) மற்றும் கொழுப்பு ஆகியவற்றின் வளர்சிதை மாற்றத்தின் அளவுகளில் வேறுபாடு உண்டாகின்றது.

நீரிழிவு நோயின் இரண்டு வகைகள்:

- சுரப்பு நீர் சார்ந்த நீரிழிவு நோய் (IDDM) - *Insulin Dependent diabetes Mellitus.*
- சுரப்பு நீர் சார்ந்து அல்லாத நீரிழிவு நோய் (NIDDM) - *Non-Insulin Depenent Diabetes Mellitus.*



மேற்கண்ட இரண்டு வகைகளான நீரிழிவு நோய்களும் என்னவளுக்குள் (Pancreas) இருக்கும் சுரப்பு நீரைச் சுரக்கக்கூடிய தீவுக் கூட்டமாகக் காணப்படும் செல்களில் (Beta Islets) சில அழிவதால் அல்லது சீர் குலைவதால் வருகின்றது.

இவற்றைக் குறைக்கச் சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைப்பது இன்றியமையாத ஒன்றாகும். இதற்கு நாம் உட்கொள்ளும் உணவு அறு சுவையும் கலந்து அறிவியல் ஆராய்ச்சிக்கு உட்பட்ட உணவுகளாக இருப்பினும், முன்னோர்களின் வழி உணவு

எடுப்பினும் அவை சுகாதார முறையிலும், வளர்சிதை மாற்றத்திற்குத் தேவையான, போதுமானதாக இருப்பின் அதுவே நன்மைத் தரக்கூடியதாகும்.

கடினமாகஉழைத்து உண்ணலாம், அதற்காக உண்பதையே கடினமான ஒன்றாக அன்றாட வாழ்வில் மாறிவிடக்கூடாது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

முடிந்தவரை ஒளிச்சேர்க்கை மூலம் கிடைக்கும் இயற்கையான தாவர உணவுகள் நார்ச்சத்து அதிகம் பெற்றவை. இவற்றை எடுத்துக் கொள்வதால் செரிமானம் தொடர்புடைய சிக்கல்கள் இன்றியும், தாவர உணவுகளில் நிறைந்திருக்கும் பழச்சர்க்கரை *(fructose)* எளிய ஒற்றைச் சர்க்கரை ஆகும். இவற்றை எளிதாக எடுத்துக் கொள்ளலாம்.

பதப்படுத்தப்பட்ட உணவுகளில் நார்ச்சத்துக் குறைவாகவும் சர்க்கரை அளவுக் கூடுதலாகவும் இருக்கும். இதை உண்பதால் பசி அடங்காமல் உண்ணும் அளவு அதிகரிக்கும் போது, உடலின் செரிமான உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டு உடல்நலக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. உணவு உண்ணும் வேலையில், சர்க்கரையின் அளவை தங்கள் உடலுக்கு எவ்வளவு தேவை என்பதை சற்றேனும் நினைவில் கொண்டு உண்பதே சிறந்ததாகும்.



நீண்டகால உடல் நலச் சீர்கேட்டைக் குறைக்கச் சர்க்கரையின் அளவு சீரான விகிதத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இனிப்புச் சுவை மகிழ்ச்சியூட்டக் கூடியதாகும். நார்ச்சத்து அதிகம் உள்ள புரத உணவுகளை விட இனிப்பு மிக்க உணவுகள் உண்ணத் தூண்டக்கூடியவை, இவ்வாறு மகிழ்ச்சியுணர்வை தூண்டக்கூடிய உணவுகளையே மனம் அதிகம் விரும்பும். எனினும் உடல் நலனைக் கருத்தில் கொண்டு தவிர்த்தல் நல்லது. தன்னை மறந்து சர்க்கரை உணவுகள் அதிகமாக உண்பதால் சுமையாக மாறி விளைவுகள் மோசமாகின்றன.

தொடர்வோம்...

இருண்ட வீட்டில் 'குடும்ப விளக்கேற்றிய' பாரதிதாசன்

மாலதி தமிழ்ச்செல்வன்,
டில்லி

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என இன்று நாம் முழங்குவதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த பெருமக்களின் பட்டியலில், பாவேந்தர் பாரதிதாசனாருக்கு குறிப்பிடத்தக்க இடம் உண்டு. பாரதியாரின் தமிழ்க்கனலின் மீது காதல் கொண்ட கனக சுப்புரத்தினம், பாரதியின் தாசன் ஆனார். சக்தியை பெண்ணை பெண்மையைப் போற்றிய பாரதியாரைப் போலவே, பெண்ணின் பெருமையையும் அவர்களின் கடமையையும், ஒரு சமூகம் சிறப்பாக இருக்க பெண்களின் பங்கு முக்கியமானது என்பதையும் உணர்த்தியவர் பாரதியின் தாசன்.

அவரது ஆகச்சிறந்த படைப்புகளில் முக்கியமான ஒன்று குடும்ப விளக்கு. குடும்ப விளக்கேற்றிய பெருங்கவிஞர் பாரதிதாசன், கவியாற்றல் மூலம் சாதி வெறிக்கு எதிராகப் போர்க்குரல் விடுத்தவர்.

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ"

என்று அவர் கவிதை பாடிய காலம் 80 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இன்று நாம், குறிப்பாகப் பெண்கள் அனுபவிக்கும் பல இயல்பான விஷயங்கள் அன்றைய பெண்களுக்கு வாய்த்ததில்லை என்பதே இன்றைய இளைஞர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால், பெண்களுக்கு உரிமை கொடுக்காத சமூகம் ஒருபோதும் சிறக்காது என்பதை உணர்ந்த பெருமக்கள், பெண் விடுதலையை வலியுறுத்தினார்கள்.

'மாதர் உரிமை மறுப்பது மாண்பா, மாதர் முன்னேற்றத்தில் மகிழ்வது மாண்பா, ஆய்ந்துபார்' என்று பெண் விடுதலைக்கு வித்திட்டார். பெண்களுக்காக மட்டுமல்ல, சாதி, மதம், பொருளாதாரம் எனப் பிளவுபட்டிருந்த சமூகத்தில் நிலவிய பாகுபாடுகளுக்கு எதிராகப் பாடிய பாவேந்தர், கவிதை, நாடகம், சிறுகதை, கட்டுரை என அனைத்து இலக்கிய வடிவங்களும் படைப்புகளைக் கொடுத்தவர். பாவேந்தரின் கவிதைகளும், தமிழ் ஆளுமையும் இலக்கியத்தில் நீங்கா இடம் பிடித்தவை.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்னும் கருத்தை வலியுறுத்தும் பாவேந்தர் பாரதிதாசனின் குடும்ப விளக்கு, பலரின் அறியாமை என்னும் இருளைப் போக்கியது என்று சொன்னால் அது மிகையாகாது. குடும்பத்தில் ஒவ்வொருவரும் அன்பு எனும் நூலால் பின்னப்பட்டு, பாசவலையில் கட்டுண்டிருந்தால், குடும்பம் எப்படியிருக்கும்? இந்தக் கற்பனையைத் தமிழருக்குக் கவிதையாய், நவீனக் கதையாய் புனைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார் பாரதிதாசன்.

குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புகளைச் சரியாக உணர்ந்து அதன்படி நடந்தால், இல்லறம் சிறக்கும் என்பதைக் கதையாய் கவிதை நடையில் விவரிக்கிறது குடும்பவிளக்கு.

குடும்ப விளக்கின் நாயகியைக் கடமை உணர்வுமிக்க பெண்ணாய் மிளிரச் செய்த பாவேந்தர், நேர்மையாக வணிகம் செய்து பொருள் ஈட்டுபவனாகக் கதாநாயகனைப் படைத்தார். அதுமட்டுமா? அன்பான பெற்றோர், அழகான குழந்தைகளுடன் சிறந்த குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பாரதிதாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை யாது? சமுதாய முன்னேற்றம் தானே? சமுதாயத்தின் அங்கங்களாக விளங்கும் குடும்பங்கள் எப்படி இருந்தால் வாழ்க்கை இனிக்கும்? பாரதிதாசனின் வார்த்தைகளில் அதைத் தெரிந்து கொள்வது சுவாரசியமானது.

கூட்டுக் குடும்ப வாழ்க்கை குறைந்து, ''நானும் என் குடும்பமும்'' என்ற போக்கு அதிகரித்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் அனைவரும் குடும்ப விளக்கைப்

படித்து உணர வேண்டும். அன்பையும்-பாசத்தையும் பண்பான வாழ்க்கை முறையையும் உணர்த்தும் குடும்பவிளக்கு, அழகான குடும்பத்தைச் சித்தரிக்கிறது.

குடும்ப விளக்கு நூலின் முதற்பகுதி 1942ம் ஆண்டு வெளியானாலும் அதன் பிறகு வெவ்வேறு ஆண்டுகளில் 1950ம் ஆண்டு வரை மொத்தம் ஐந்து பாகங்கள் வெளியாகின. இதற்கு நடுவில் பாரதிதாசன் படைத்த மற்றுமொரு புனைவுக் கவிதை, நகைச்சுவை நடையில் இயற்றப்பட்ட ‘இருண்ட வீடு’. இந்த இருண்ட வீட்டைப் படித்துக் கடந்திடாமல், குடும்ப விளக்கு முழுமையடையாது. குடும்பத்திலுள்ளவர்கள் எப்படி இருந்தால் குடும்பம் கோவிலாகும் என்பதற்குக் குடும்ப விளக்கு எடுத்துக்காட்டு என்றால், எப்படியெல்லாம் இருந்தால் குடும்பம் குட்டிச்சுவராகும் என்பதை உணர்த்த ‘இருண்ட வீடு’ படைப்பைப் படைத்திருக்கிறார் பாவேந்தர்.

பாரதிதாசனின் இந்த இரு படைப்புகளும், ஒரு குடும்பம் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. "இருண்ட வீட்டில்" கல்வி இல்லாத குடும்பம் எப்படி நலிவுறும் என்பதையும், சோம்பிக் கிடக்கும் குடும்பத்தின் நிலை எப்படி இருக்கும் என்பதையும் உணர்த்துகிறார் பெருங்கவிஞர். இருண்ட வீட்டில் ஒளியேற்றுவதாகக் குடும்ப விளக்கு அமைந்துள்ளது.

தமிழ் படிக்க வேண்டும் எல்லோரும்
அத்தமிழர் படிப்படியாய் முன்னேற் றத்தை
எப்படியா யினும்பெற்று விட்டால் மக்கள்
இப்படியே கீழ்ப்படியில் இரார்க ளன்றோ?
மெய்ப்படிநம் அறிஞரின் சொற்படிந டந்தால்,
மேற்படியார் செப்படி வித்தை பறக்கும்.
முற்படில் ஆகாததுண்டா? எப்ப டிக்கும்
முதற்படியாய்த் தமிழ்படிக்க வேண்டும்”

என்று கல்வியின் முக்கியத்துவத்தை மட்டுமல்ல, தமிழின் முக்கியத்துவத்தையும், மும்மொழி என்று புகுத்துவதற்கு முன்னரே பன்னெடுங்காலம் முன்பே சொல்லிவைத்தார் நமது ஆசான்.

அதேபோல், “அதிகாலை தொடங்கிநாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்,
இதுவரைக்கும் பொதுநலத்துக் கென என்ன செய்தோம்?
என்பதைநாம் நினைத்துப்பார்ப் பதுவு மில்லை”.

”வீட்டுத் தொண்டா பொதுத் தொண்டு?
"இன்றைக்குக் கறிஎன்ன? செலவு யாது?
ஏகாலி வந்தானா? வேலைக் காரி
சென்றாளா? கொழுக்கட்டை செய்ய லாமா?
செந்தாழை வாங்குவமா? கடைச் சரக்கை

ஒன்றுக்கு மூன்றாக விற்ப தெந்நாள்?
உன்மீதில் எனக்காசை பொய்யா?''
என்று சுயநலமாய் வாழக்கூடாது என்று வலியுறுத்துகிறார்.

"தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்;
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்;
எமதென்று சொல்கின்றோம் நாடோ றுந்தான்;
எப்போது தமிழனுக்குக் கையா லான
நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?
நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்,
அமைவாகக் குந்திநினைத் தோமா? இல்லை;
அனைவருமிவ் வாறிருந்தால் எது நடக்கும்?''

இந்தக் கருத்தைச் சொல்வது கதையின் நாயகனாக இருப்பதைவிட, குடும்பத் தலைவியாக இருப்பதே சாலச்சிறந்தது என்பதையும் உணர்ந்த பெருங்கவிஞர், நுணுக்கமாகக் கவிதை புனைந்துள்ளார்.

பெண்கள், ஓவியமும் காவியமும் கற்க வேண்டும்; கவிதை எழுதி உலக அமைதியை உருவாக்க வேண்டும் என்று மட்டுமல்ல, அவள் தனக்குரிய மணமகனைக் காட்டி 'தேவை இவன்' எனத் தனது வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னவர் பாரதிதாசன்! கல்வி கற்றவளாக, காதல் தலைவியாக மட்டும் இருந்தால் போதுமா? வீரத்தாயாக விளங்குதல் வேண்டும்; குடும்ப விளக்காக ஒளிவிட வேண்டும் பெண்கள் என்பதையும் வலியுறுத்துகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்!

பெண், அச்சம் மடம் நாணம் கொண்டவளாக இருந்தால், நாடாளவும், விண்வெளியில் பறக்கவும் இயலுமா? அச்சம் மடம் நாணம் ஆகியவை பெண்களுக்கு அவசியம் என்று வலியுறுத்தப்பட்டக் காலத்திலேயே, அச்சத்தையும் நாணத்தையும் கொண்டிருப்பது மடமை என்று சொல்லி, இவற்றை உதறித் தள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

தேவையில்லாதவற்றைத் தள்ளிவிட்டு, கல்வி கற்று அன்புடனும் அறத்துடனும் பொதுநலத்துடனும், குடும்பத்தை நடத்த வேண்டும் என்று பெண்களை ஊக்குவிக்கிறார் பாரதிதாசன்.

ஒரு குடும்பத்தின் தினசரி நிகழ்வுகள், திருமணம், விருந்தோம்பல், மகப்பேறு போன்றவற்றை மட்டுமல்ல, முத்தாய்ப்பாக முதியோர் காதலையும் குடும்ப விளக்கில் அருமையாய்ச் சொல்கிறார் பாரதிதாசன்.

பாரதிதாசனின் படைப்பில் இளம்பெண்களை உரிமை மிக்கவர்களாய், சமுதாயக் கட்டுகளை உடைப்பவர்களாய் சித்தரித்திருப்பார். தமிழரின் வீரம், கொடை, மானம்

போன்ற முக்கியமான பண்புகளைப் போலவே முதியோரின் காதலின் முக்கியத்துவத்தை பாரதிதாசன் சொன்னதுபோல் வேறு யாரும் சொன்னதில்லை.

பாரதிதாசனின் எழுத்துக்களைப் பற்றிப் பேசும்போது, அவை எந்தக் காலத்தில் எழுதப்பட்டவை என்பது முக்கியமானது. அன்று அவர் கூறியவை இன்று சாதாரணமானதாகத் தோன்றலாம். 1950களில் புரட்சிக் கருத்தாக இருந்த அவற்றை ஏற்றுக் கொள்ள கற்றோரும் தயங்கினார்கள் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

பெண்ணே குடும்பவிளக்கு எனக் கூறத் தக்கவள். ஏனெனில் அவளே சிந்தனையும், திட்டமிட்டுச் செயலாற்றும் திறமும் படைத்தவள் என்று பாரதிதாசன் கருதினார்.

குடும்பவிளக்கின் தலைவி பல்துறை வித்தகி... அவள், சமைப்பது, வீட்டுவேலை செய்வது என்பதுடன் மட்டும் தன்னை சுருக்கிக் கொள்ளவில்லை. வீணை இசைக்கிறாள், கடைக்குச் சென்று வியாபாரம் செய்கிறாள், தையற்கலையை அறிந்தவள், துணி தைக்கிறாள், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள், வீட்டின் மராமத்து பணிகளையும் செய்கிறாள்.

பல கலைகளும் அறிந்தவளாக இருந்தாலும், குழந்தையை எப்படிப் பராமரித்துப் பாதுகாக்கிறாள் அந்தத் தாய் என்று பாரதிதாசன் சொல்கிறார்...

இரவில் தன் குழந்தையைப் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டு தூங்கும் தாய், தனது வலக்கையைத் தலையணையாய் வைத்துக் கொண்டு, இடக்கையைக் குழந்தையின் மேலே பாதுகாப்பாய் வைத்து உறங்குகிறாள். ஆழ்ந்த துயிலில் கணவன், மனைவி, புரண்டு படுத்தால், பச்சிளம் குழந்தை நசுங்கிவிடும் என்று நினைத்து அவளை எழுப்புகிறான்.

மனைவியை எழுப்பவும் வேண்டும், தூங்கும் குழந்தையையும் தொந்தரவு செய்யவும் கூடாது. என்ன செய்வது? மனைவி, தன் கூந்தலிலிருந்து அகற்றி அருகில் போட்டிருந்த ஒரு மலர்ச்சரத்தை எடுத்து அவளுடைய முகத்தில் போடுகிறான், ஆனால் அவள் கண் விழிக்கவில்லை. பிறகு, மலர்ச்சரத்திலிருந்து ஒற்றை மலரிதழை எடுத்துக் குழந்தையின் மீது போடுகின்றான். தூங்கிக் கொண்டிருக்கும் மனைவியின் கை, தன்னிச்சையாகக் குழந்தையின் மேல் விழுந்த, மலரிதழை நீக்கி விட்டு மறுபடியும் பாதுகாப்பாய் வளைகிறது, துயிலும் தொடர்கிறது.

சேயைப் பாதுகாக்கும் தாய்மையின் பேராற்றலைக் கண்டு மலைக்கிறான் கணவன். குடும்பவிளக்காய் பரிமளிக்கும் பெண்ணை வணங்குகிறான்.

நம் கலாச்சாரத்தை, தமிழரின் வாழ்க்கையை விளக்கும் குடும்ப விளக்கு, விருந்தினரை எப்படி உபசரிக்க வேண்டும் என்றும் அழகாய் உரைக்கிறது. இது விருந்தோம்பலின் இலக்கணம்...

வாழை இலையின்அடி, உண்பார் வலப்புறத்தில்;
வீழ விரித்திக் கறிவகைகள் - சூழவைத்துத்

தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் - பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின்பால் சோறிட்டுத்-தக்கபடி
கேட்டும் குறிபறிந்தும் கெஞ்சியும் மிஞ்சியும் அன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல்...

எப்படி இலையை இடவேண்டும், பரிமாற வேண்டும், என்று சொல்லும் கவிஞர், உணவு பிடித்திருந்தாலும் விருந்தினர்கள் கேட்டு வாங்கி உண்ணக் கூச்சப்படுவார்கள் என்பதால், பரிமாறுபவர் அங்கேயே நின்று உணவிடவேண்டும், குறிப்பறிந்து பரிமாறவேண்டும் என்று சொல்கிறார். அது என்ன,"கெஞ்சியும் மிஞ்சியும்?" விருந்தினரைக் கெஞ்சி உணவு பரிமாறுவது ஒருவகை என்றால், செல்லமாக மிரட்டி உண்ண வைப்பதும் ஒரு கலைதான், அது விருந்தினர் இயல்பாக இருக்க உதவும் என்பதை அழகாக உணர்த்துகிறார் பாவேந்தர்.

முதியவர்களை மதிக்கவேண்டும் என்பதை பாரதிதாசன் எப்படி உணர்த்துகிறார் தெரியுமா?

இருபெரு முதியோர் தம்மைத்
    தலைக்கடை அறைசு மந்து
பெரும்பேறு பெற்ற தன்றோ!
    பிள்ளைகள், அவர் மனைமார்
வருவார்கள்; அறங்கேட் பார்கள்.
  மற்றுள பேர்த்தி பேரர்
வருவார்கள் அளவ ளாவி
      மணியோடு பள்ளி செல்வார்...

எவ்வளவு பணிச்சுமை இருந்தாலும், நம்மை பேணிக்காத்து வளர்த்த பெரியவரை, பாட்டன் பாட்டியைக் கண்டு பேசினால் அவர் மனம் குளிருமல்லவா? இது இன்றைய காலத்திற்கும் அவசியமான படிப்பினை தானே?

ஒருவனும் ஒருத்தியும் அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையைக் காதல் வாழ்க்கை என்கிறோம். இந்தக் காதல் வாழ்க்கை, இளமையில் இனிப்பாய் இருப்பதைப் பல கவிஞர்கள் பாடியிருந்தாலும், முதியோரின் காதல் வாழ்க்கையைப் பாரதிதாசனைப் போல் அழகாகக் காட்ட முடியுமா?

காதல் என்பது, வயதைத் தாண்டியது, உடல் கவர்ச்சியைத் தாண்டியது... அன்பால் விளைவது... என்றென்றும் நீடித்து நிலைப்பது... 105 வயது ஆணுக்கும், 100 வயது பெண்ணுக்கும் இடையில் காதல்... இதைக் கற்பனை செய்து பார்க்கமுடியுமா? ஆனால் பாரதிதாசனால் முடியும்...

அவள் இருக்கின்றாள்... அதுவே எனக்கின்பம்... என்ற வார்த்தைகள் போறாதோ??

புதுமலர் அல்ல; காய்ந்த
   புற்கட்டே அவள் உடம்பு!

சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி!
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
"இருக்கின்றாள்" என்ப-தொன்றே!

அவள் இருக்கிறாள் என்பதே இன்பம் என்கிறார் கிழவர். முதியவளின் உடலில் மெருகும் இல்லை, அழகும் இல்லை என்றாலும், கணவனுக்கு மனைவிமேல் கொண்டிருந்த காதல் மாறவில்லை. இதற்கு அடிப்படை, அவரது உள்ளத்தில் நிறைந்து விளங்கும் உண்மை அன்பு தான். முதியவளின் உடம்பு புதுமலர் போல் ஒளியுடன் இல்லை; காய்ந்து போன புல்கட்டைப் போன்று இருக்கிறது. அவள் நடப்பது அழகாய் இல்லை; தள்ளாடி விழுவதுபோல் இருக்கிறது. நிலவு போல் அவள் முகத்தில் ஒளி இல்லை; வறண்டு இருக்கிறது. கண்கள் குழிந்து காணப்படுகின்றன. இப்படிப்பட்ட முதியவளின் உடலில் எனக்கு இன்பத்தைத் தருவது எது? இன்றும் உயிருடன் இருக்கின்றாள் என்பது மட்டுமே என முதியவர் கூறுகிறார். இதைச் சொல்லும் முதியவரின் வயது 105…

இதில் கூர்ந்து கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயமும் இருக்கிறது. அவள் இருக்கின்றாள் அதுவே எனக்கின்பம்' என்று சொல்வது கிழவர் தான், மூதாட்டி அல்ல... அதாவது, ஓர் ஆண், பெண்ணையே சார்ந்திருக்கின்றான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் பாரறிந்த பாரதிதாசன்.

குடும்பத்தலைவனாக ஆண் முன்னிறுத்தப்பட்டாலும், பெண் தான் குடும்பத்தின் விளக்கு, ஆணிவேர், நூறு வயது மனைவி, தன் கணவனிடம் உதவி கேட்கவில்லை. கணவன் தான், என் மனைவி உயிருடன் இருப்பதே எனக்கு ஆனந்தம் என்று சொல்கிறார்.

இதுவொரு பக்கம் இருக்கட்டும், 100 வயது கிழவி காய்ந்து போன புல்கட்டைப் போல் இருந்தால் 105 வயது கிழவர் எப்படி இருப்பார் இருந்தபோதிலும், தனது உடல்நிலையையும் அழகையும் பற்றிப் பேசாமல், தனது தோல் சுருங்கிப் போனதைப் பற்றிப் பேசவில்லை. மனைவி அழகில்லை என்றாலும் அவள் எனக்கென்று இருந்தால் போதும் என்கிறார்.

ஆனால் பெண்ணோ ஒருபோதும் அழகைப் பற்றிப் பேசுவதில்லை... கணவன் காதலுடன் இருந்தாலே போதும் என்று நினைப்பாள் என்பது எழுதாமல் விட்ட வார்த்தைகள் என்று நினைப்பதற்கு பாரதிதாசனின் எழுத்துக்கள் உணர்த்துகின்றன. இந்த வார்த்தைகளைக் கணவனைப் பார்த்து, 'அவன் இருக்கின்றான் அதுவே எனக்கின்பம்' என்று மனைவி சொல்வதாகவும் பாரதிதாசனால் புனைந்திருக்கமுடியும். ஆனால் பாவேந்தர், அதைச் செய்யவில்லை. ஏனென்றால், மனையாள் இல்லை என்றால் ஆண்கள் படும் துயரத்திற்குக் காரணம் அவர்களின் சார்புத்தன்மையே என்பதையும் உணர்ந்தவர் அவர்.

ஆண், பெண்ணை சார்ந்தவனா அல்லது பெண், ஆணைச் சார்ந்தவரா என்ற கேள்வியே எழுப்பாமல், மறைமுகமாய் பெண்களின் வலிமையை பாரதிதாசன் உணர்த்துகிறார். பெண்கள் இயல்பாகவே துன்பத்தை எதிர்கொள்ளும் மனவலிமை பெற்றவர்கள், அந்தக் காலத்திலும் பொருளாதாரத்திற்காகவே ஆண்களைச் சார்ந்திருந்தார்கள். ஆண்கள் ஏறக்குறைய எல்லா விஷயத்திற்கும் பெண்களையே சார்ந்திருந்தார்கள்.

அதனால் தான், பெண் கல்வியின் முக்கியத்துவத்தை பாரதிதாசன் உட்பட அனைத்து ஆன்றோர்களும் சான்றோர்களும் வலியுறுத்தினார்கள். இன்று அந்தக் கனவு மெய்ப்பட அடித்தளம் இட்ட பாரதிதாசனின் குடும்ப விளக்கு போன்ற படைப்புகள், இருண்ட வீட்டிலும், இருள் படர்ந்த மனங்களிலும் ஒளியேற்றி வைத்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

பாரதிதாசனின் குடும்ப விளக்கு வழிநின்று, குடும்பங்கள் சிறப்புற அமையுமானால், இந்தச் சமுதாயம் மேன்மேலும் உயர்வடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

சீன சிந்தாமணிப் பெருந்தெரு

முனைவர். எஸ். சாந்தினிபீ,
மேனாள் வரலாற்றுப் பேராசிரியர், அலிகார் பல்கலைக்கழக ம்.

பண்டைக் காலம் முதலே தமிழர் வாழ்வியல் என்பது வாணிபத்தை மையமாகக் கொண்டு விளங்குகிறது. தமிழர் அலை கடல் ஓடித்தானே திரவியம் தேடினார்கள். இந்தக் கலாசாரம் சங்கக் காலத்துடன் நில்லாது ஒரு நீள் தொடர்ச்சியாகவே காலனி ஆதிக்கக் காலமான 18 ஆம் நூற்றாண்டு வரையிலும் நன்கு வளர்ந்தது. ஆங்கிலேயர் அடிமைப் படுத்தினாலும் வ.உ. சிதம்பரனார் கப்பலோட்டினாரே ... மறக்கவா முடியும். இத்தகைய வாணிபக் கலாசாரப் பின்னணியில் இருந்து நாம் வந்துள்ளோம். நமது தமிழகத்தில் சீன சிந்தாமணிப் பெருந்தெரு ஒன்று இருந்தது என்றால் விரைவில் வியப்பு வராது. அது கல்வெட்டில் உள்ளது எனும் போதுதான் வியப்பாக இருக்கிறது.

சோழர் காலத்திய வாணிபம் செழித்திருந்ததை நாம் அறிவோம். தென் கிழக்கு ஆசியாவில் இருக்கும் மலேசியா, ஜாவா, சுமத்ரா, போன்ற தீவுகளுடன் வலுவான வாணிபத் தொடர்பு கொண்டிருந்தோம். மேற்கே அரபு நாடுகள், எகிப்து, ஈரான் என நமது வாணிபச் சங்கிலி நீண்டதுடன் மேற்கே ஐரோப்பிய நாடுகளிலும் வாணிபத் தொடர்பு இருந்தது. முதலாம் ராஜராஜன் காலத்தில் (கி.பி.985-1012) மன்னர் அனுப்பிய தூதுக் குழு சீனாவுக்குச் சென்றது. இத்தகவலை நீலகண்ட சாஸ்திரி தன் மாபெரும் ஆய்வுப் படைப்பான சோழர் புத்தகத்திலே சொல்லியுள்ளார். ராஜ ராஜனைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த முதலாம் ராஜேந்திரன் கடற்படை செலுத்தி கடாரம் கொண்டான் என்ற பட்டத்திற்கு உரியவனானான்.

"கொள்ளை கொள்ளவே சென்றான். கொள்ளையடித்த செல்வத்தில் மட்டுமே தஞ்சை, கங்கைக் கொண்ட சோழபுரம் கோயில்கள் கட்டப் பட்டன. சோழர்களுக்கு நிலைப் படையும் நிதிக் கொள்கையும் கிடையாது..." என்றெல்லாம் புரிதல் இல்லா அயலக வரலாற்றாளர்கள் சொன்ன கருத்துகளெல்லாம் காற்றில் கலைந்த மேகங்களாயின. கடாரத்தைக் கொண்டது எதற்காக என்றால் வணிகர்கள் பட்ட தொல்லைகளைக் களைந்து உதவவே என்பதை நாம் மிகத் தெளிவாக நிலைநாட்டியுள்ளோம். கங்கையும் கடாரமும் கொண்ட ராஜேந்திரன் சீனத்துடன் வாணிபம் செழிக்க வழிசெய்தார் எனும் கருத்து இன்றைய வரலாற்றில் பதிக்கப் பட்டுள்ளது.

இதை மேலும் ஆணித்தரமாகச் சொல்லும் ஆதாரம்தான் சீன சிந்தாமணித் தெருவைக் குறிக்கும் கல்வெட்டு. அன்றைய சோழப் பேரரசின் தலைநகரான கங்கை கொண்ட சோழ புரத்தின் உட்பிரிவான விக்கிரம சோழ வளநாட்டில் இத்தெரு அமைந்திருந்தது. இவ்வளநாட்டில் இருந்த பல ஊர்களில் ஒன்று ஸ்ரீ காமதவல்லி சதுர்வேதி மங்கலம் எனும் அந்தணர் வாழும் ஊர். இதுவே இன்றைய உடையார் பாளையம் தாலுக்காவில் உள்ள காமரசவல்லி ஆகும். இங்குள்ள கற்கோடகேசுவரர் கோயிலில் இக்கல்வெட்டு (தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி-34, எண் 91 {இனி தெ.இ.தொ}) காணப்படுகிறது. கங்கைக் கொண்ட சோழபுரம், காமரசவல்லி இவ்விரு இடத்திற்கும் இடைப்பட்ட தொலைவு இன்றைய நவீனப் பாதை வசதி வழியே கிட்டத் தட்ட 53 கி.மீ ஆகும். கல்வெட்டின் நோக்கம் சீன சிந்தாமணிப் பெருந் தெருவில் செக்கு ஆட்டி வந்த ஒரு வாணியத் தலைவர் வழங்கிய தானத்தைக் குறிக்கிறது. ஆனால் அவர் கங்கைக் கொண்ட சோழ புரத்தைச் சேர்ந்தவர். கல்வெட்டு மூன்றாம் ராஜராஜனின் காலத்தில் வெட்டப் பட்டது.

அது மூன்றாம் ராஜராஜனின் ஆட்சிக் காலம். (1216-1257). முதலாம் ராஜேந்திரனின் ஆட்சி முடிந்து 200 ஆண்டுகள் பிறப்பட்டது. (1214-44) 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழப் பேரரசு முடிவுக்கு வந்தது (1279). இக்கல்வெட்டு 1234-ல் வெட்டப்பட்டது. இப்பெருந் தெருவில் வாணிபத் தொடர்பிலிருந்த செக்கு வாணியத் தலைவன் மருதூர் உடையான் உய்யவந்தான் எனும் இங்கராயன் எனப் பெயர் கொண்டவர். ஒரு நந்தா

விளக்கெரிக்க தினமும் ஒரு நாழி எள் எண்ணெய்யைக் கோயிலுக்கு வழங்கியுள்ளார். மின்சாரமின்றி வாழ்ந்த காலத்தில் விளக்கு ஒளியே பார்வை தந்தது. கோயில் விளக்குகளில் பலவகை இருந்தன. நந்தா விளக்கானது அணையாது இரவும் பகலும் எரியக் கூடியது.

தன்னை அடுத்து வரும் வாணியத் தலைவர்கள் அனைவரும் தொடர்ந்து எள் எண்ணெய் தரவேண்டும் எனவும் கல்வெட்டில் சொல்லப் பட்டுள்ளது. (இத்துடன் ஒரு கூடுதல் தகவலைச் சொல்லிச் செல்கிறது இக்கல்வெட்டு. மகாபோதி புத்தர் இவ்வணிகர்களின் குலத்தில் பிறந்தவர் என்று சொல்கிறது. அதன் உண்மைத் தன்மையை நாம் விவாதிக்கப் போவதில்லை).

நம் கவனத்தை ஈர்ப்பதெல்லாம் சீன சிந்தாமணிப் பெருந் தெருவைக் குறித்தே ஆகும். சோழர் காலத்தில் பெரும்பாலும் பெருந் தெருக்கள் ஒரு நகரத்தின் வெளிப் புறத்தே மற்ற ஊர்களை இணைக்கும் தன்மையைக் கொண்டனவாக இருந்தன. சோழப் பேரரசின் இறுதிக் காலக் கட்டத்திலும் சீன நாட்டுடன் எண்ணெய் வாணிபம் செய்தோமா என்று தெரியவில்லை. கோவிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட ஆட்டுத் தோல் பைகளே எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் பயன்படுத்தினர் என்பது மட்டும் தெளிவு. இத்துடன் கங்கை கொண்ட சோழபுர அகழாய்வில் மாளிகை மேடு எனும் இடத்தில் சீன ஓடுகள் கிடைத்ததை இங்கே கருத்தில் கொள்வது அவசியம். சோழர் காலத்தில் நாம் சீன நாட்டுடன் வாணிபத் தொடர்பு வைத்திருந்தோம் எனும் கருத்திற்குச் சீனப் பானை ஓடுகளுடன் இக்கல்வெட்டும் இணைந்து ஆதாரமாகிறது.

சீனப் பெருந் தெரு காணப்படுவது ஒரேயொரு கல்வெட்டில் மட்டும் அல்ல. அதற்குத் துணையாக இன்னொன்றும் உள்ளது. நான்காண்டிற்குப் பின் இதே மூன்றாம் ராஜராஜனின் 22 ஆம் ஆட்சியாண்டில் கி.பி 1238 -ல் இதே கோயிலில் காணப்படுகிறது (தெ.இ.தொ-34 எண்-89). இரண்டு வாணிய நகரத்தார்கள் இணைந்து இக்கோயிலுக்குத் தானம் அளிக்க முன்வந்ததைக் கூறுகிறது இந்த இரண்டாம் கல்வெட்டு. சீன சிந்தாமணிப் பெருந் தெருவில் (உள்ள) வாணிய நகரத்தோரும் இக்கோயிலுக்குரிய திருமடை விளாகத்தின் திருச்சிற்றம்பலப் பெருந் தெருவில் (இருக்கும்) வாணிய நகரத்தோரும் இக்கோயிலில் சனி எண்ணெய்க் காப்பு சாத்தி அருள ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு நாழி எள் எண்ணெய் கொடுக்க இசைந்திருக்கிறார்கள். இரு பெரும் தெருக்களிலும் எண்ணெய் வாணியர் செக்கிட்டு எண்ணெய் தயாரித்திருக்கிறார்கள். காமரசவல்லி வாணிப நகரமல்ல; அது ஒரு பிரம்மதேயம் ஆகும். பல பிரம்ம தேயங்கள் பன்முகத் தன்மை கொண்ட பல சிறு, பெரு ஊர்களை இணைக்கும் மையப் புள்ளிகளாகச் சோழர் காலத்தில் செயல்பட்டன. அவற்றில் மேற்சொன்ன ஊர் காமரசவல்லியும் அடங்கும். இவ்வூரில் வாணிபம் நடை பெற்றதை உறுதியாக்கும் இன்னொரு கல்வெட்டும் உண்டு.

ஜடாவர்மன் வீரபாண்டியனின் 10 ஆம் ஆட்சியாண்டில் ஒரு கல்வெட்டு (கிபி 1263) இங்கே கிடைத்துள்ளது. வாணியப் பொருட்கள் மீது வரி பெற்று அதனை இக்கோயிலின் பராமரிப்புப் பணிக்காகத் தானமாக வழங்க, ”எழுபத்தொன்பது

வளநாடு பதினெண் பூமி பதினெண் விஷையத்தோம்" எனும் வாணியக் கூட்டுறவுக் குழு சம்மதித்துள்ளது. பட்டியல் ஒன்று வாணியப் பொருட்கள் மற்றும் அதன் மீதான வரியின் தகவலைத் தருகிறது.

அவை (தெ.இ.தொ-34, எண் 88)

புடவை கட்டு 1 ¼ பணம்

மிளகு பொதி 1 ¼ பணம்

நிறைக்கு (?) 1 காசு

பாக்குப் பொதி 1 ¼ பணம்

உரசிப்பார்க்கும் பொன் 1 ¼ பணம்

நெல் பொதி 1 - 1 காசு

அரிசிப் பொதி 1 - 2 காசு

தலைச்சுமை 1 - 1 காசு

சீன சிந்தாமணிப் பெருந் தெருவைச் சொல்லும் கல்வெட்டு இரண்டுக்கும் மேலே சொல்லப்பட்ட கல்வெட்டுக்கும் இடைப் பட்ட காலம் கிட்டத்தட்ட 25 ஆண்டு இடைவெளியாகும். இக்காலத்திலும் அது வாணியத் தலமாகவே செயல்பட்டுள்ளது. இக்கடைசிக் கல்வெட்டில் சாட்சியாக வரும் நபர்களும் 'அஞ்ஞூற்றுவ வேளான்', 'மலைமண்டல மாதாக்க(ள்)' இருவரும் வாணியத் தொடர்புடையவர்களாகத் தெரிகிறது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் 10 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை 400 ஆண்டுக்கால மன்னர்கள் காலத்தில் எழுதப் பட்டதாகும். எனவே சீன சிந்தாமாணிப் பெருந்தெரு இருப்பது இயற்கையே. பொ.ஆ 1063-1070 வரையிலும் ஆண்ட வீர ராஜேந்திர சோழனின் தாயார் பெயர் சிந்தாமணியாகும். இப் பெண்ணே இரண்டாம் ராஜேந்திர சோழனின்(1054-1063) மனைவியும் ஆவார்.

சங்கத் தமிழரின் வேனிற்காலம்சார் பதிவுகள்

உ.ச.எ.தமிழரசன்
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

நிலமும் பொழுதும் முதற்பொருளாகும். மனித வாழ்வு முதற்பொருளோடு தொடர்புடையது. நிலத்தில் வாழும் அனைத்து உயிர்களும் பொழுதோடு தொடர்பு கொண்டு நிற்கின்றன. காலமாகிய பொழுது அழியாப் பொருள். ஐந்திணைகளின் செயல்பாடுகளுக்கும் பருவ காலங்களே காரணமாகின்றது. அப்பருவகாலங்களில் வேனிற்காலம் சார்ந்த பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

நிலமும் பொழுதும்:

காலம் அல்லது பொழுது என்பது மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், இருது, அயணம், ஆண்டு, உகம் எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறது.

வாழ்க்கை முறை என்பது வாழும் இடம், காலம், சூழல் போன்றவற்றோடு தொடர்புடையது. மக்களின் வாழ்வியல் முறைக்கு இடமே அடிப்படை.

நிலத்தினை முதன்மைப்படுத்தி தொல்காப்பியர்,

“நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே” (தொல்.பொருள்.அகத். நூற்.2)
என்று குறிப்பிடுகிறார்.

நிலத்தை,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாய் சொல்லவும் படுமே” (தொல்.பொருள்.அகத்.நூற்.5)

எனப் பாகுபடுத்துகிறார்.

அகத்திணைக் கூறுகளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகைப்படுத்துகின்றனர்.

முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும்.
"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிப இயல்புணர்ந்தோரே" (தொல்.பொருள்.அகத்.நூற்.4)

பொழுது என்பது இயற்கை நிகழ்வு. இயற்கையோடு ஒன்றி நிலைத்திருப்பது என்பதை அறிய முடிகிறது. சங்க கால மக்கள் இயற்கைச் சார்புடைய வாழ்க்கைக்கு முதன்மை அளித்தனர். வாழ்வியல் சூழலுக்கும் உண்டாகின்ற நிகழ்வு மாற்றங்களுக்கும் நிலம், பொழுது காரணமாக அமைந்தன.

"குறிப்பிட்ட நிலத்தின் பருவ நிலைக்கும் இயற்கை வளத்துக்கும் ஏற்பட்ட மாறுதல்கள் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ திகழ்ந்து, வாழ்க்கைப் போக்கை அமைப்பதற்கு முதல் காரணமாய் இயற்கை அமைகின்றது" (மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.31-32)

பெரும்பொழுது:

பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது என்பது ஒரு ஆண்டின் பகுப்பு. சிறுபொழுது என்பது ஒரு நாளின் பகுப்பு.

"இருதிங்கள் சேர்ந்த காலப்பகுதி பருவம் அல்லது இருது எனக் கொள்ளப்படும் ஆவணி தொடங்கி இரண்டு இரண்டு மாதங்களாக முறையே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறு பருவங்கள் கொள்வர்" (நிகண்டுச் சொற்பொருட்கோவை, ப.22). பெரும்பொழுதுகள்பற்றி நிகண்டுச்சொற்பொருட்கோவை குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் அகத்திணையியலில் பெரும்பொழுதுகளை ஐவகை நிலங்களுக்குரிய பொழுதுகளாக வகைப்படுத்துகிறார். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பெரும்பொழுது ஆறு வகைப்படும்.

சூரியன் பூமியின் கீழ்த்திசையில் தென்பகுதியில் சில காலமும் வடபகுதியில் சில காலமும் மத்திய ரேகைப் பகுதியில் சில காலமும் இருப்பதால் கிரணங்கள் மாறுபடுகின்றன. பூமியின் மேல் ஒரே அளவாக விழாமல் மாறுபட்டு வருவதால் கிரணத்தின் தன்மையை ஒட்டிக் காலநிலைகள் மாறுபடுகின்றன.

காலம்	மாதம்
கார்காலம்	ஆவணி, புரட்டாசி
கூதிர்காலம்	ஐப்பசி, கார்த்திகை
முன்பனி	மார்கழி, தை
பின்பனி	மாசி, பங்குனி
இளவேனில்	சித்திரை, வைகாசி
முதுவேனில்	ஆனி, ஆடி

என ஆறு பருவங்களாகவும் இரண்டு இரண்டு மாதங்களாகவும் பெரும்பொழுதைப் பிரித்தனர்.

இந்த ஆறு பருவங்களையும் மழைக்காலம், பனிக்காலம், வெயில்காலம் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். மழையின் முற்பகுதி கார் எனவும், பிற்பகுதி கூதிர் எனவும் பகுத்தனர். முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன அவ்வப்பருவத்தின் முன், பின், பகுதி கொண்ட பெயர்களாகும்.

தட்ப வெப்பநிலை மாற்றங்கள், பருவநிலை மாற்றங்கள் அதனால் மக்களின் வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் காலச் சுழற்சியால் ஏற்படுபவை. பெரும்பொழுதுகள் ஆறு வகைப்படும் என்ற குறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை. பொழுதுகளின் பிரிவுகள் உரையாசிரியர்களால் வகுக்கப்பட்டவை.

“ஆறு என்ற தொகைக் குறியீடு தொல்காப்பியத்துள் இல்லை. அஃது உரையாசிரியர்களால் பெறப்படுவதுவே. கார், கூதிர், பனியெதிர் பருவம், பின்பனி,

வேனில் முதலான பெயரீடுகளே தொல்காப்பியத்தில் உள்ளன. இவற்றிற்குரிய மாதக் கணக்கீடுகள் மூலநூலுள் இல்லை. எனினும் உரை நூல்கள் அவற்றை விரித்துரைக்கும்" (க.ப.அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும், ப.103-104). இதன்வழி பெரும்பொழுதுகள் ஆறு என்று சுட்டப்பெறுவதை அறிய முடிகிறது. காலச் சுழற்சியில் ஏற்படுகின்ற மாற்றங்களால் பருவ மழை குறைதல், பருவம் மாறி மழை பெய்தல் போன்ற இயற்கை மாற்றங்கள் நிகழ்கின்றன.

இளவேனில் காலம்:

இளவேனிற்காலம் பாலைத் திணைக்குரியதாகப் பேசப்பெறுகின்றது. இலக்கியம் யாத்த புலவர்கள் இளவேனிற் காலத்தை காமர் வேனில், இன்னமர் வேனில், மேதகு இளவேனில், தண்பத வேனில், முற்றா வேனில், இன்ப வேனில், பெரும்பத வேனில் என்று பல திறம்பட்ட தன்மைகளில் புனைகின்றனர். சித்திரை, வைகாசி இளவேனிற் பருவத்திற்குரிய திங்களாகும்.

இளவேனிற் குறித்து, சங்க இலக்கியங்கள் பரவலாகக் குறித்தாலும், ஐந்து திணைகளில் பாடப்பெற்ற கலித்தொகையில் பாலைக்கென்றே பேசப்பெற்ற கலிப்பாடல்களில் இது விளக்கமாகப் புனையப்படுகின்றது. திணைச்சூழ்நிலைகள் மக்கள் ஒழுக்கத்தோடு உறவு மேற்கொண்டதை "சங்ககால மக்கட் பாகுபாடும் வாழ்க்கையும் ஒழுக்கமும் நில இயற்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன" என்னும் கூற்று உறுதி செய்கின்றது. (க.வித்தியானந்தன், தமிழர்சால்பு, ப.8).

இளவேனிற் கால இயல்பு:

வாடிய மரங்கள் யாவும் கிளைத்துத் தளிர்த்து, அரும்பும் இளவேனிற் பருவம் கண்ணுக்கினிய பருவமாகக் காட்சியளிப்பதைப் பல காலமாக விளங்குவதைப் பலதரப்பட்ட சூழ்நிலையோடு காணமுடிகின்றது. இப்பருவத்தில் மரம், செடி, கொடிகளின் தளிர்த்தல் முதல் பூத்துக்காய்த்தல் வரையுள்ள அடுத்தடுத்த செயல்கள்,

> "மடியிலான் செல்வம் போல் மரன் நந்த அச்செல்வம்
> படியுண்பார் நுகர்ச்சி போற் பல் சினை மிஞுநார்ப்ப
> மாயவன் மேனி போல் தளிர் ஈனஇ அம்மேனித்
> தாய கணங்கு போல் தளிர் மிகைத் தாது உக
> மலர்தாய பொழில் நண்ணி மணிநீர கயம் நிற்ப
> அலர்தாய துறை நண்ணி அயிர் வரித்து அறல்வார
> நனியள்ளும் குயில் நோக்கி இணைபு உரு நெஞ்சத்தால்" (கலி. 35:1-7)

என்ற பாடல் வழி விளக்கப் பெறுகின்றது.

தண்பத வேனில்:

இளவேனிற் பருவத்தில் பொழில்கள் புதுத் தளிரீன்று மரங்கள் நல்ல நிழல் செய்வதாலும் இப்பருவத்தைத் தண்பத வேனில் என்று குறிக்கின்றனர்.

“எரிப்பூ இலவத்து ஊழ் கழி பல்மலர்
பொரிப் பூம் புள்கின் புகர்நிழல் வரிக்கும்
தண்பத வேனில் இன்ப நுகர்ச்சி” (ஐங். 368: 1-3)

என்னும் அடிகள் மூலம் இன்ப நுகர்ச்சி எய்துவதற்கு உகந்தது இளவேனிற் காலம் என்பதை உணரமுடிகின்றது.

நாட்பத வேனில்:

பெருமழை பொழிதலால் மலர்கள் செறிந்துள்ளதற்கும் வண்டினங்களின் முரலுதலுக்கும் காரணம் இளவேனிற் பருவம் என்பதை நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கிறது.

“பெரும்பயல் பொழிந்த வழி நாளமையத்துப்
பல்பொறி அரவின் செல் புறங்கடுப்ப
ஆற்றல் நுணுங்கிய நாட்பத வேனில்” (நற்.157: 2-4)

கோடைக்காலத்தில் நீர்நிலையானது நீலமணி போலும் தெளிந்த நீரைக் கொண்டு அழகு பெறுதலை,

“ஆயின் தண் கலிழ் தந்து
வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்” (ஐங். 45: 1-2)
என்று சங்கப் பாடலடி கூறுகின்றது.

பிற பொழுது மயங்கிய வேனில்:

இளவேனில் பொழுதில் சிறு பொழுதுகளாகிய மாலையும் கங்குலும் இவையேயன்றி வாடைக்காலமும் மயங்கி வேறுபட்ட சூழ்நிலைகளைச் சித்தரிப்பதை;

“நெடுநிலா திறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ் நாற்றங்கங்குல் வத்தலைத் தரூஉம்” (கலி.29: 20-21)

“யாழ்கொண்ட இமிழ்இசை இயல் மாலை அலைந்தரூஉம்” (கலி.29: 17)

“வயங்கு இழை தண்ணென வந்தவிவ்வசை வாடை” (கலி.31: 12)
எனவும்;
"நோய்சேர்ந்த வைகலான் வாடை வந்தமைந்து அலைத்தரூஉம்” (கலி.29: 13)

எனவும் தண்மை பொருந்திய இளவேனில் குறிக்கப்பெறுகின்றன.

முதுவேனில்:

முதுவேனில் பாலைத்திணைக்குரிய பருவமாகப் பேசப்பெறுகின்றது. வெப்பம் மிகுந்த அரிய வெயில் பருவத்தைக் குறிப்பதே முதுவேனிற் பருவமாகும். இப்பருவத்திற்குரிய திங்கள் ஆனி, ஆடி ஆகும். இக்கொடிய கோடைப்பருவம்

கோடைக்காற்று வீசும் பருவம் என்றும் பயிரினங்களும் பல்வேறு உயிரினங்களும் வாடுகின்ற வெப்பம் செறிந்த பருவம் என்றும் பகுத்துக் கூறுகின்றது.

முதுவேனில் தன்மை:

முதுவேனில் கோடைப்பருவம் நிகழும் மாதங்களாகும். கோடைப் பருவத்தில் காலையும் மாலையும் கூட நண்பகல் போல வெம்மை மிக்குத் தோன்றும். அதன் காரணமாகச் சோலைகள் வாடியும் குளம் குட்டைகள் வறண்டும் உலகம் அழகிழந்து பயனும் இழந்து போனதால் வெஞ்சுரம் என்று குறிப்பிடப்படுகிறது.

ஏனைய பருவம் ஒன்றும் எய்தாமல் வேனிற்பருவம் ஒன்றனையே அறிந்த வெப்பம் வீசுகின்ற நீண்ட சுரம் பசுமையற்று வெம்மை மிகுந்து இருப்பதை;

> *“நின்ற வேனில் உலர்ந்த காந்தள்*
> *அழல் அவிர் நீள் இடை நிழலிடம் பெறாஅது” (நற்.29: 1-2)*

என்று குறிப்பிடுகின்றது.

பாலைக்கலியில் முதுவேனிற் பருவத்தின் தன்மை விரிவாகப் பேசப்பெறுகின்றது. சூரியனின் வெம்மையால் நிலம் கொதித்துப் பரந்து கிடக்கின்ற குன்றுகளைக் கடந்து வெம்மை கொண்ட கோடைக்காலம் என்பதைக் கூறும் கலிப்பாடல் பாலை வெஞ்சுரத்தின் இயல்பை விளக்குகிறது.

> *“கொதித்துஉராய்க்குன்று இவர்ந்து,*
> *கொடிக்கொண்ட கோடையால் ஒதுக்கு*
> *அரிய நெறி எண்ணார்இ ஒண்பொருட்கு அகன்றவர்” (கலி.150: 15-16)*

மேகங்கள் மழைப்பொழியாது கோடையால் அலைக்கழிக்கப்பட்டு, நீரில்லாத கொடுமையின் தன்மையை;

> *“மணிதிகழ் விறல் மலை வெம்ப மண்பக*
> *துணிகயம் துகன்பட்ட தூங்குஅழல் வெஞ்கரம்” (கலி.20: 5-6)*

என்று நவில்கின்றது.

முதுவேனிற் காலத்தில் ஞாயிற்றுக் கதிர்களின் வெப்பம் மிகுந்திருக்கும். பரந்த இருளை விழுங்கிப் பகற்பொழுதைத் தோற்றுவித்த ஞாயிற்றின் காய் சினத்தால் முறுகிய முதுவேனிற் பருவம் என்று வேனிலின் தன்மையைப் பெரும்பாணாற்றுப்படை;

> *“பகல்கான்று எழுதரு பல்கதிர்ப் பகுதி*
> *காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்” (பெரும். 2-3)*

என்று விளக்குகின்றது.

> வேனில் பருவத்தில் வைகறைப் பொழுதில் கோடைக்காற்று வீசும் என்பதை
> *“வழிநாள் வாசலின்இ கோடை தூக்கு தொறும்” (நற்.162: 10)*

என்று குறிப்பிடுகின்றது.

முதுவேனிற்பருவம் நீடியதால் கோடைக்காற்றினால் காடு வெப்பம் மிகுந்து காணப்படும். இக்கோடைக் காற்று காட்டின் கவினை அழிக்கும். கோடைக் காற்று வீசும் வேனில் காலத்தை;

> "வேனில் நீடிய வெங்கடற்று அடைமுதல்" *(அகம்.389: 17)*

என்றும்;

> "காடு கவின்அழிய உரைஇ கோடை" *(அகம்.173: 12)*

என்றும்;

> "உதிர்ந்த கோடை உட்குவரு கடத்திடை" *(அகம்.267: 5)*

என்றும் குறிப்பிடுவதன் வாயிலாகப் புலனாகின்றது.

கோடை மழை:

கோடை வெம்மையில் மழை பொழிவதுண்டு. கோடையில் பெய்யும் மழையானது கடுமையான மழைத்துளிகளைப் பெய்து விளங்கும் என்பதனை;

> *"முழங்கு கடல் முகந்த கமஞ்சூல் மாமழை*
> *மாதிர நனந்தலை புதையப் பாஅய்*
> *ஓங்கு வரை மிளிர ஆட்டிஇ பாம்பு எறிபு*
> *வான்புகு தலைய குன்றம் முற்றி*
> *அழிதுளி தலைஇய பொழுதில் புலையன்" (நற்.347: 1-5)*

என்று நற்றிணை கோடை மழையினைக் குறித்து நிற்கிறது.

நண்பகல் பொழுதின் தன்மை:

பகற்பொழுதில் வெயில் முனைப்பாக எரிக்கும் தன்மை உடையது. பாலைத் திணைக்குரிய சிறுபொழுதாக நண்பகலைப் பொருத்திக் காட்டும் நச்சினார்க்கினியர்;

"காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பி கூவல்மாறி, நீரும் நிழலும் இன்றி நிலம்பயர்துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெருகுவதொரு காலமாதலின் இன்பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலும் சிறப்புடைத்தாயிற்று என்பர். (நச்சினார்க்கினியர் (உ.ஆ.), தொல்.பொருள்.நூற்.9). இக்கூற்றின் படி வேனிற்காலம் காலை, மாலையை விட நண்பகல் கொடுமையான வெப்பம் உடையதாகக் கருதப்பட்டுள்ளது.

வெம்மை:

"நண்பகற்பொழுதில் வெயில் வெப்பம் மிகுந்த கதிர்களை வீசுவதுண்டு. மூன்று கண்களை உடைய சிவபெருமான் சினந்து அவுணர்களின் கோட்டையைத்

தெய்வக்கணையால் எரித்தார். அப்போது அவர் முகம் கொண்ட வெம்மை போல் ஞாயிறு சுடுகின்றது என்று கலித்தொகை;

> மடங்கல் போல் சினைஇ மாயம்செய் அவுணரைக்
> கடந்து அடு முன்பொடு முக்கண்ணான் மூஎயிலும்
> உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்" *(கலி.2: 3-5)*

எனும் பாடலில் நண்பகல் வெப்பத்தின் தன்மையை விளக்குகின்றது.

ஞாயிற்றின் மிக்க ஒளியினால் தன்னுடைய ஒளி கெடுகின்ற உச்சிக்காலத்து மதியைப் போல தலைவியின் ஒளிநலம் குறைந்ததைக் கூறும் பொருட்டுப் பகற் பொழுதின் வெப்பத்தன்மையை;

> "ஒண்சுடர் ஞாயிற்று விளக்கத்தான் ஒளிசாம்பும்
> நண்பகல் மதியம்போல் நலம்சாய்ந்த அணியாட்டு" *(கலி.121: 17-18)*

என்று; பாம்பின் தோல் நிமிர்ந்து நின்றதைப் போல் வெப்பம் மிகுந்தக் கனலுடன் கோடையின் நண்பகல் பொழுது விளங்குகிறது.

> "யாங்கு அறிந்தனர் கொல் தோழி பாம்பின்
> உரி நிமிர்ந்தன்ன உருப்பு அவர் அமையத்து" *(குறுந்.154: 1-2)*

எனும் பாடல் பாலையில் வேனிற்காலத்து, நண்பகல் பொழுதில் கதிரவனின் கொடிய கதிர்கள் வீசும் தோற்றம், பாம்பின் உரித்த தோல்நிமிர்ந்து நின்றதற்கு உவமிக்கப்படுகிறது.

முடிவுரை:

நிலத்தை ஐவகையாகப் பிரித்த தமிழர்கள் காலத்தையும் மிக நுட்பமாகப் பிரித்தார்கள். பெரும்பொழுது எனும் பகுப்பில் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் முதலியன அறிவியல் சார்ந்து அடங்குவதை ஆய்வு நிறுவுகின்றது. உயிரினங்கள் வாடும் பருவமாக முதுவேனில் அமைகிறது. கோடைக் காற்றினால் வெப்பம் மிகுந்து காட்டின் அழகு குறைந்து காணப்படும் பருவமாக இருந்துள்ளது. விலங்கினங்கள் ஊன் வற்றிப் பசியோடு உலவிவரும் நிலை காட்டப் படுகின்றன. உயிரினங்களும் பயிரினங்களும் வாழப் போராடும் முதுவேனில் பருவத்தில் கோடைக்கால மலர்கள் மலருமாறு கோடை மழை பொழிந்துள்ளதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

கடலும் ஆறும் மன்னனும் புலவரும்: உவமைச் சிறப்பு

பேராசிரியர் முனைவர் மு. முத்துவேலு
முதல் பதிவாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை
அலைபேசி: 9840215985.

சங்க இலக்கியங்கள் என்பவை எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகும். எட்டுத்தொகை நூல்களில் பாடுபொருளாக அமைந்திருப்பவை அகமும் புறமும் ஆகும். அகப்பாடல்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என ஐந்து நூல்கள் அடங்கும். புறப்பொருள் பற்றியவற்றில் பதிற்றுப்பத்தும் புறநானூறு அடங்கும். அகப்பாடல்களும் புறப்பாடல்களும் கவிதை நயத்தில் சிறந்து விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை.

ஆனால், புறப்பாடல்களைவிட அகப்பாடல்களில் உணர்ச்சிகளுக்கு மிகுந்த இடம் இருப்பதாலும் கற்பனைக்கு மிகுந்த இடம் இருப்பதாலும் அப்பாடல்களில் கவிதை நயங்கள் மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம். எனினும், புறம் என்று வழங்கப்படும் புறநானூற்றுப் பாடல்களிலும் கவிதைச்சுவை நிறைந்துள்ளது.

தமிழ்க் கவிதையைத் திறனாய்வு செய்வோர், ஒவ்வொரு கவிதையிலும் நான்கு கூறுகள் இருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கின்றார்கள். அவை கற்பனை, உணர்ச்சி, கருத்து, வடிவம் என்பவை ஆகும். இந்த நான்கு கூறுகளில் கற்பனையை வெளிப்படுத்துவதற்குக் கருவிகளாகப் பயன்படுபவை உவமைகளாகும். இந்த உவமைகள், புலவன் உணர்த்த வந்த கருத்தையும் உணர்ச்சியையும் தெளிவாகவும் அழகாகவும் வெளிப்படுத்துவதற்குப் பயன்படுகின்றன.

நான்கு கவிதைக் கூறுகளில் கற்பனைத் திறனை வெளிப்படுத்துகின்ற உவமைகள் குறித்துத் தொல்காப்பியம் தொடங்கித் தமிழ் இலக்கண வரலாற்றில் பல நூல்கள் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் புறநானூற்றில் வருகிற மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே இருக்கும் உறவு நிலையை உணர்த்துவதற்காக ஓர் உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தகை ஓர் உவமையின் சிறப்பே கட்டுரையின் கருவாக அமைகிறது.

மன்னர்களை நோக்கிப் புலவர்கள் ஓடி வந்து மன்னனைப் பாடிப் பரிசில் பெற்றுச்செல்கிறார்கள். மன்னர்களை நோக்கி வரும் புலவர்களின் ஆர்வத்தையும்

அவர்களுடைய விரைவின் தன்மையும் வேகக் குறிப்பையும் எடுத்துக்காட்டுவதற்காகப் புறநானூற்றுப் புலவர் ஓர் உவமையைக் கையாண்டு உள்ளார். அது,

"கடலை நோக்கி விரைந்து ஓடி வருகிற ஆறுகளைப் போல மன்னர்களை நோக்கிப் புலவர்கள் விரைந்து ஓடி வருகிறார்கள்".

என்பதாகும். இது குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனை இடைக்காடனார் என்னும் புலவர் பாடிய பாடல் ஆகும்.

நீர்தரு மகளிர் குற்ற குவளையும்,
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்
மென்புல வைப்பின் நன்னாட்டு பொருந!
மலையின் இழிந்து, மாக்கடல் நோக்கி,
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்,
புலவ ரெல்லாம் நின்நோக்கினரே,
நீயே, மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்
கூற்றுவெகுண் டன்ன முன்பொடு,
மாற்றுஇரு வேந்தர் மண்நோக் கினையே. (புறநானூறு 42)

என்பது பாடல்.

இதன் பொருள்;

"உன் நாடு வளமான நாடு. உன் வயலில் உழும்போது புரளும் ஆமை, கரும்பில் தொடுத்திருக்கும் தேன், துறையில் மகளிர் பறித்த குவளை ஆகியவற்றைப் புன்செய் நில மக்களுக்கு விருந்தாகத் தருகிறார்கள் உன்னுடைய நாட்டு மக்கள். மலையிலிருந்து நிலத்தில் பாய்ந்து கடலை நோக்கி ஓடும் ஆற்றைப்போல புலவர்கள் உன்னை எதிர்நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். நீயோ கூற்றுவன் போல இருபெரு வேந்தர்களின் மண்ணைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய் என்பதாகும். "

இதில் அமைந்திருக்கும் உவமை என்பது கடலை நோக்கி ஓடும் ஆறுகளைப் போல சோழனை நோக்கிப் புலவர்கள் ஓடி வருகிறார்கள் என்பதாகும். ஆறுகளின் ஓட்டத்திற்கும் புலவர்களின் நாட்டத்திற்கும் இங்கு உவமை கூறப்படுகிறது.

இனி தொல்காப்பியம் எனும் ஒல்காப் புகழ் தமிழ் இலக்கணம் உவமை குறித்து என்ன கூறுகிறது என்பதையும், அது கூறும் இலக்கணத்திற்குள் இந்த உவமை எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதையும் பார்ப்பது பொருத்தம் உடையதாகும்.

"வினை பயன் மெய் உரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம்"

என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும்.

ஒன்றனுக்கு உவமை சொல்லுகிற பொழுது பின்வரும் நான்கு பொருட்களில் ஒன்றினை ஒத்திருக்கும் வகையில் உவமை கூறுதல் வேண்டும். அவை தொழிலும் பயனும் வடிவமும் வண்ணமும் என்ற சொல்லப்பட்ட நான்கு பொருட்களாகும்.

இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாக;

புலிபோல் பாய்ந்தான் என்பது வினை உவமைக்கு எடுத்துக்காட்டாகும்

மாரி போல் கொடுத்தான் என்பது பயன் உவமைக்கு எடுத்துக்காட்டாகும்

துடிப்போலும் இடை என்பது வடிவத்திற்குக் காட்டப்படும் எடுத்துக்காட்டாகும்

தளிர் போல் மேனி என்பது வண்ணத்திற்கு சொல்லப்பட்ட எடுத்துக்காட்டாகும்.

ஒரு பொருளுக்கு உவமை சொல்லுகிற பொழுது இந்த நான்கனுள் ஏதேனும் ஒன்று ஒத்திருந்தால் அதனை உவமையாகச் சொல்லலாம். அதற்கு ஒருபுடை ஒற்றுமையாக்கம் என்று பெயர்.

அந்த வகையில் ‘புலி போல் பாய்ந்தான்’ என்பது புலியின் பாயும் செயலுக்கு அதாவது வினைக்குத் தருகிற ஒப்புமையை மட்டும்தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பாயும் செயலைச் செய்கிறவனுடைய தோற்றமோ வடிவமோ வண்ணமோ அந்த வினையால் உண்டாகும் பயனோ புலியுடன் ஒத்திருக்க வேண்டும் என்பது கருத்து இல்லை. பாயும் விரைவும் வேகமும் வினை உவமையாக அமைகிறது.

இந்த வகையில் தான்;

மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி நிலவரை இழிதரும் பல்யாறு போல புலவர் எல்லாம் நின்நோக்கினரே!

என்ற உவமை, வினை உவமையாக அமைகிறது என்று பொருள் கூறி வருகிறோம்.

ஆனால் கடலுக்கு வழங்கி வரும் வேறு பெயர்களை ஆராயும் பொழுது தான் கடலுக்கும் ஆறுக்குமான உறவு மன்னர்களுக்கும் புலவர்களுக்குமான உறவு என்பதில் இருக்கும் ஆழ்ந்த கருத்துப் புலப்படுகிறது. கடலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்களில் குறிப்பிடத்தக்கவை இருநீர் முந்நீர் என்பவை ஆகும். கடலில் இருக்கும் நீர்ப் பரப்பு எவ்வாறு உண்டாகிறது என்பதை ஆய்ந்தறிந்த தமிழ்ச் சான்றோர்கள் அது மழை நீராலும் ஆற்று நீராலும் உருவாகிறது என்பதைக் குறிப்பதற்காகவே இருவகையான நீர் இணைந்து அது உருவாவதால் இருநீர் என்று கடலை அழைத்தனர்.

"இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகத்து
வன்சொலால் என்றும் மகிழாதே -பொன் செய்
அதிர்வளையாய் பொங்காது கதிர் வரவால் தண்ஜென்
கதிர்வரவால் பொங்கும் கடல்".

என்னும் பாடலில் கடலைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு இருநீர் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது.

இன்னும் சில கடற்பரப்பில் ஆற்று நீர் மழை நீரோடு ஊற்று நீரும் இருப்பதை நாம் காண்கிறோம். அத்தகைய கடலைக் குறிப்பதற்காக ஆற்று நீர், மழை நீர், ஊற்று நீர் மூன்றும் சேர்ந்து உருவாகும் கடல் பரப்பிக் குறிப்பதற்காக முந்நீர் என்ற சொல்லைப் பழம் தமிழர்கள் கையாண்டு வந்தனர். தொல்காப்பியத்தில் ஆண்கள் பொருள் தேடிச் செல்வதற்கோ வேறு காரணங்கள் பற்றிக் கடல் கடந்து செல்லும் பொழுதோ தங்களுடைய மனைவியரை உடன் அழைத்துச் செல்கின்ற வழக்கம் இல்லை, என்பதையும் பெண்கள் கடல் தாண்டிச் செல்வதற்கு மரபு வழி அனுமதி இல்லை என்பதையும் சுட்டுவதற்குத் தொல்காப்பியம்,

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை"

என்று குறிப்பிடுகிறது.

எனவே கடலைக் குறிக்கின்ற இருநீர் முந்நீர் என்னும் இரு சொற்களிலும் கடல் ஆற்று நீராலும் மழை நீராலும் உருவாகிறது என்பது தெளிவாகிறது. எனவே, கடலுக்கும் ஆறுக்கும் இடையேயான உறவு என்பது மன்னருக்கும் புலவருக்கும் இடையிலான உறவைக் குறிப்பதற்கான எடுத்துக்காட்டை நோக்கும்போது அது ஆழ்ந்த பொருள் உடையதாக நமக்குத் தோன்றுகிறது.

கடலின் நீர்ப்பரப்பு குறையாமல் இருப்பதற்கும் கடலின் தன்மை இயல்பும் மாறாமல் இருப்பதற்கும் மழை நீர் இன்றியமையாதது என்பதை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

"நெடும்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான் நல்காது ஆகிவிடும்" (திருக்குறள் 17)

என்பது வள்ளுவர் கடலில் இயல்பை பற்றிக் கண்டறிந்த உண்மையாகும்.

கடல் பரப்பில் நீரின் தன்மை திரியாமல் இருப்பதற்கு மழை நீரோடு சேர்ந்து ஆற்று நீரும் அந்தக் கடலில் வந்து கலக்க வேண்டும் என்பதும் இன்றியமையாத கூறாகும். எனவே, கடலின் இயல்பு மாறாமல் இருக்க வேண்டுமென்றால் கடலோடு ஆறும் கலக்க வேண்டும் என்பது இயற்கை நியதி.

இதைப் போலவே மன்னனின் இயல்பும் திரியாமல் இருக்க வேண்டும் என்றால் மன்னனோடு புலவர்களும் சேர்ந்து இருக்க வேண்டும் என்பதைத் தான் இந்த உவமை சுட்டிக்காட்டுகிறது. கடலின் வளத்திற்கு ஆற்று நீர் வந்து சேர்வது எத்துணை இன்றியமையாத செயலோ அதைப்போல மன்னனின் புகழுக்கும் மன்னனோடு வந்து சேருகிற புலவர்களின் செயலும் இன்றியமையாத ஒன்றாகும் என்பதைச் சுட்டவே இடைக்காடனார் இந்த உவமையைப் பயன்படுத்தி இருக்கிறார் என்று பொருள் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

எனவேதான் சங்ககால மன்னர்கள் புலவர்கள் புடைசூழ்ந்து இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஔவைப்பிராட்டி தன்னுடன் நீண்ட நாள் தங்கி இருக்க வேண்டும் என்று விரும்பிய அதியமானின் பற்றும், வள்ளல் பாரியும் கபிலர் தம்மோடு நெடு நாள் இருக்க வேண்டும் என்று விரும்பிய எண்ணமும் மன்னர்கள் புலவர்களோடு சேர்ந்து இருக்க வேண்டும் என்று காட்டிய ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. சங்க கால மன்னர்கள் வீரத்தைப் புகழ் ஈட்டுவதற்குக் கருவியாகக் கருதினார்கள். எனவே, விழுப்புண் பெறாத நாளெல்லாம் தங்கள் வாழ்க்கையில் வீணான நாள் என்று நினைத்தார்கள். வீரத்தால் விளையும் புகழைப் போலவே மன்னர்கள் புலவர்கள் தங்களைப் புகழ்ந்து பாடுவதால் ஈட்டும் புகழையும் ஒன்றெனவே கருதினார்கள். உயர்ந்ததாக மதித்தார்கள். எனவே, நாள்தோறும் நம்மை நோக்கிப் புலவர்கள் வரவேண்டும் அவர்கள் நற்றமிழால் தம்மைப் போற்றிப் புகழ வேண்டும் என்பதே

தங்களுடைய நாளது செயல்களில் ஒன்றாகவே கருதினார்கள். எனவே, புலவர்கள் புடை சூழ்ந்து காணப்படாத மன்னனுக்குப் புகழே இல்லை என்கிற அளவுக்கு ஒவ்வொரு நாளும் புலவர்கள் தங்களைத் தேடி வர வேண்டும் என்று விரும்பினார்கள். புலவர்கள் வந்து தங்கி இருந்தால்தான் அரண்மனை முழுமை பெறும் என்பதையும் அவர்கள் உறுதியாகக் கருதினார்கள்.

ஆற்று நீரானது நாள்தோறும் கடலில் சென்று கலப்பது கடலுக்குச் சிறப்பு என்பதைப் போல நாள்தோறும் புலவர்கள் மன்னனைச் சேர்ந்திருப்பது தான் மன்னனுக்குச் சிறப்பினைத் தரும் என்பதை இந்த உவமை உறுதியாகச் சுட்டுகிறது. எனவே தான் பகைநாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுகிறான். சூள் உரைக்கிறான். அவனுடைய சூளுரையில் பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டுச் சொல்லுகிற பொழுது முக்கியமாக ஒரு செய்தியைக் குறிப்பிட அவன் தவறவில்லை. அதுதான் “புலவர்களில் சிறந்து விளங்குகின்ற மாங்குடி மருதன் என்னும் புலவன் தலைமையில் புலவர்கள் என்னைப் பாடாமல் என் நாட்டை விட்டு நீங்குவார்களாக” என்பதாகும்.

“கொடியன் எம்இறை எனக் கண்ணீ பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலோன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை”
(புறநானூறு - 72)

என்று தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடுகிறான்.

கடலை நோக்கி ஓடி வரும் ஆறுகளைப் போன்று மன்னர்களை நோக்கி ஆவலோடு புலவர்கள் ஓடி வருகிறார்கள் என்னும் இந்த உவமையில், ஆற்று நீர் இல்லாமல் கடல் முழுமை பெறாது என்பதைப் போல, புலவர்கள் இல்லாமல் மன்னர்கள் வாழ்வும் சிறப்பதில்லை; முழுமை பெறுவதில்லை என்னும் உயர்ந்த கருத்தையும் இந்த உவமை எடுத்துக்காட்டுகிறது எனக் கொள்வதும் பொருத்தம் உடையதாகும்.

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின் நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை. Ph. 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	120
2.	இணையத் தமிழ்	150
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200
5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	100
6.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	50

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)	200
2.	பெண் தெய்வ வழிபாடு	200
3.	தேவேந்திரன்	200
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	200
5.	இரு நிலத்தில் திருமுருகன்	200
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)	200
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	200
8.	யானைக்கடவுள்	200
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	200
10.	பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்	300
11	வழிபாட்டின் வேர்களைத் தேடி	300

சமய விளக்க நூல்கள்

1	சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)	300
2	விரதங்களின் விளக்கம்	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	250
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	200
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	100
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்	100
5.	பயணக் கவிதைகள்	100

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக் கும் செல்வீர்	200
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	200
3.	செக்கச் சிவந்த ரோஜா	200
4.	கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"	200
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	200
6.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	200
7.	கவிதை மொழிபெயர்ப்பு	200
8.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)	300
9.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	200

10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	*120*
2.	ரோஜா மொட்டு *(கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	மகிழ் பேரின்பம் *(poems)*	*200*
4.	பொன் வேலி *(poems)* நூல்கள்	*200*
5.	திருக்குறள் கதைகள் - பகை மாட்சி	*100*

தே. ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:
சம்சுல் ஹுதா பானு
99403 35306

காயகல்பத்தின் சிறப்பு

அண்ணாமலை சுகுமாரன்
வரலாறு, சித்தரியல் ஆய்வாளர், புதுச்சேரி.

காய கல்பம் - ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்தில் உடலைப் புதுப்பிக்கும் ஒரு பழமையான சிகிச்சை முறை. இது உடல், மனம், ஆன்மா என அனைத்தையும் புத்துயிர் பெறச் செய்கிறது.

இந்தக் கட்டுரையில், காய கல்பத்தின் வரலாறு, ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்தில் அதன் பங்கு, யோகா மற்றும் இரசவாதத்துடன் உள்ள தொடர்பு மற்றும் நவீனச் சிகிச்சை முறைகள் பற்றி விரிவாகப் பார்க்கலாம். முதுமையை வென்று இளமையாக வாழ காய கல்பம் ஓர் அற்புதமான வழி!

காய கல்பத்தின் தோற்றம் மற்றும் வரலாறு:

காய கல்பம் என்பது ஒரு பழமையான இந்திய மருத்துவ முறையாகும். இது ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. காய கல்பம் என்ற சொல்லுக்கு "உடலைப் புதுப்பித்தல்" என்று பொருள். காயம் என்றால் உடல். இந்தச் சிகிச்சை முறை உடல் மற்றும் மனதைப் புத்துயிர் பெறச் செய்து, ஆயுளை நீடிக்கச் செய்கிறது.

காய கல்பத்தின் தோற்றம் குறித்து பல்வேறு கதைகள் உள்ளன. ஒரு பிரபலமான கதையின் படி, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு முனிவர் தனது முதுமை தோற்றத்தை மாற்றிக் கொள்ளவும் இளமையாக இருக்கவும் இந்த முறையைப் பயன்படுத்தினார். என்று ஆயுர் வேதம் சொல்லுகிறது

காய கல்பமும் யோகாவும்:

சித்த மருத்துவம் காய கல்ப சிகிச்சையில் யோகாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பதஞ்சலி முனிவர் கூறிய எட்டு யோக அங்கங்களும் காய கல்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த யோக முறைகள் உடலையும் மனதையும் ஒருநிலைப்படுத்தி, இளமையைத் தக்கவைக்க உதவுகின்றன.

காய கல்ப மூலிகைகள்:

காய கல்பத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் பல. நெல்லிக்காய், இஞ்சி, கடுக்காய், கரிசாலை, வல்லாரை போன்ற மூலிகைகள் உடலைப் புத்துயிர் பெறச் செய்து, முதுமையைத் தள்ளிப்போடுகின்றன. ஒவ்வொரு மூலிகைக்கும் ஒவ்வொரு தனித்துவமான குணம் உண்டு.

காய கல்பத்தில் இரசவாதத்தின் பங்கு:

இரசவாதம் என்பது உலோகங்களை மருந்துகளாக மாற்றும் ஒரு முறையாகும். தங்கம், வெள்ளி, பாதரசம் போன்ற உலோகங்களைப் பஸ்பம் செய்து, அவற்றைக் காய கல்ப மருந்துகளில் பயன்படுத்துகின்றனர். இந்த உலோகப் பஸ்பங்கள் உடலுக்கு வலிமை அளித்து, நோய்களைக் குணப்படுத்துகின்றன.

நவீனக் காய கல்ப சிகிச்சை:

இன்றைய நவீன உலகில், காய கல்ப சிகிச்சை முறைகள் பல மாற்றங்களைக் கண்டுள்ளன. ஆயுர்வேத மற்றும் சித்தா மருத்துவ நிபுணர்கள், நவீன அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, புதிய காய கல்ப சிகிச்சை முறைகளை உருவாக்கி வருகின்றனர். இந்தச் சிகிச்சைகள் மன அழுத்தம், உடல் சோர்வு போன்ற பிரச்சனைகளைக் குறைத்து, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கின்றன.

காய கல்பமும் ஆயுர்வேதமும்:

ஆயுர்வேதத்தில் காய கல்பம் ஒரு முக்கியமான சிகிச்சை முறையாகும். இது பொதுவாக பஞ்சகர்மா மற்றும் ரசாயனம் போன்ற ஆயுர்வேதச் சிகிச்சைகளுடன் இணைந்தது. ரசாயனம் என்பது புத்துணர்ச்சி அளிக்கும் சிகிச்சை ஆகும். இது உடலின் ஆரோக்கியத்தையும், இளமையையும் மீட்டெடுக்க உதவுகிறது.

ஆயுர்வேத நூல்களில் காய கல்ப சிகிச்சையின் இரண்டு வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன:

குடி பிரவேசிகா:

இது ஒரு தீவிரச் சிகிச்சை முறையாகும். இதில், நோயாளி ஒரு தனி அறையில் தங்கி, சிறப்பு உணவு மற்றும் மருந்துகளை உட்கொள்கிறார்.

வாத தபிகா:

இது குறைவான தீவிரச் சிகிச்சை முறையாகும். இந்தச் சிகிச்சையை மேற்கொள்பவர்கள் தங்கள் வழக்கமான வாழ்க்கையைத் தொடரலாம்.

காய கல்பமும் சித்த மருத்துவமும்:

சித்த மருத்துவம் என்பது தென்னிந்தியாவில் தோன்றிய ஒரு பழமையான மருத்துவ முறையாகும். தமிழ் சித்தர்கள் காய கல்பத்தை நீண்ட ஆயுளைப் பெறுவதற்கும், நோயின்றி வாழ்வதற்கும் ஒரு வழியாகக் கருதினர். சித்த மருத்துவத்தில் காய கல்ப மூலிகைகள், உலோகங்கள் மற்றும் தாதுக்களைப் பயன்படுத்தி மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன. சித்த மருத்துவத்தில் காய கல்பத்தின் முக்கிய குறிக்கோள் உடலை அழியாமல் பாதுகாப்பதாகும். சித்தர்கள் உடலைஇளமையாகவும்ஆரோக்கியமாகவும்வைத்திருக்கப்பலவழிமுறைகளை உருவாக்கியுள்ளனர்.

காய கல்பமும் இரசவாதமும்:

காய கல்பத்தில் இரசவாதத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. இரசவாதம் என்பது உலோகங்களைத் தங்கமாக மாற்றும் ஒரு பழங்கால அறிவியல் ஆகும். சித்தர்கள்

இரசவாதத்தைப் பயன்படுத்தி உலோகங்களையும், கனிமங்களையும் மருந்துகளாக மாற்றினர். இந்த மருந்துகள் உடலைப் புத்துயிர் பெறச் செய்து, நீண்ட ஆயுளை வழங்குகின்றன என்று அவர்கள் நம்பினர்.

நவீனக் காய கல்ப சிகிச்சை முறைகள்:

இன்று, காய கல்ப சிகிச்சை முறைகள் பல மாற்றங்களைக் கண்டுள்ளன. நவீன மருத்துவர்கள் ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவத்தின் கொள்கைகளை இணைத்து புதிய சிகிச்சை முறைகளை உருவாக்கி உள்ளனர். இந்தச் சிகிச்சைகள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், வயதான தோற்றத்தைக் குறைக்கவும் உதவுகின்றன.

காய கல்பம் என்பது உடல், மனம் மற்றும் ஆன்மாவைப் புத்துயிர் பெறச் செய்யும் ஒரு பழமையான சிகிச்சை முறையாகும். இது ஆயுர்வேதம், சித்தா மருத்துவம் மற்றும் இரசவாதம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. நவீன உலகில், காய கல்பம் ஆரோக்கியத்தையும், இளமையையும் பேணிக்காக்க உதவுகிறது.

டச்சு தங்க நாணயம்

அண்ணாமலை சுகுமாரன்
வரலாறு, சித்தரியல் ஆய்வாளர், புதுச்சேரி.

நெதர்லாந்து நாடு, அப்போதைய பல ஐரோப்பிய நாடுகளைப் பின்பற்றி அதுவும் இந்தியாவுடன்(கிழக்கு) வணிகம் செய்ய 1605முதல் கிழக்கிந்திய டச்சு கம்பெனியை துவக்கி, ,இந்தியாவில் உள்ள கடற்கரைப் பகுதிகளை இந்திய மன்னர்களிடமிருந்து கைப்பற்றி, கோட்டை கொத்தளங்கள் மற்றும் குடியிருப்புகளை அமைத்து இந்தியாவில் 1605 முதல் 1825 முடிய வணிகம் செய்தனர்.

17ம் நூற்றாண்டின் துவக்கத்தில் டச்சு மக்கள் பயணித்த கப்பல்கள் சில பழவேற்காடு ஏரியின் முகப்பிற்கு எதிரே உள்ள கரிமணல் கிராமத்தின் கரையோரம் கரை தட்டின. இதன் காரணமாக அக்கப்பல்களில் இருந்த டச்சு மக்கள் இங்கே தங்க நேரிட்டது.

இதன் தொடர்ச்சியாக டச்சு வணிகர்களும் அவர்களது கப்பல்களும் இப்பகுதிக்கு அடிக்கடி வரத் தொடங்கின.

அவர்கள் 1606-ம் ஆண்டு முதல் 1690-ம் ஆண்டு வரை பழவேற்காட்டினைத் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு இப்பகுதியினைத் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். டச்சு காலத்தில் பழவேற்காடு பழைகட்டா என்றும் அழைக்கப்பட்டது.

இக்காலத்திலே ஜெல்டீரியா கோட்டையெனும் பெயரில் ஒரு கோட்டை இங்குக் கட்டப்பட்டது.

இந்தக் கோட்டையே டச்சு வணிகர்கள் மற்ற நாடுகளுடன் வணிகம் புரிவதற்கான தளமாக மாறியது. தற்போது டச்சு காலச் சான்றுகளாகப் பாழடைந்த டச்சு கோட்டையும் டச்சு தேவாலயமும், 1631-ம் ஆண்டு தொடங்கி 1655-ம் ஆண்டு வரை உருவான இருபத்தி இரண்டு கல்லறைகளும் வேறு சில இடிபாடுகளும் உள்ளன. இவை இந்திய அகழ்வாராய்ச்சி நிறுவனத்தின் பராமரிப்பில் தற்போது உள்ளன.

இங்கிருந்து தான் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அடிமைகளாக நிறைய நாடுகளுக்குக்கடத்தப்பட்டு விற்கப்பட்டனர் .

அவர்களின் முக்கிய வணிகப்பொருளாகத் தமிழர்களே விளங்கியதை வரலாறு பதிவு செய்துள்ளது

அது ஒரு நெடிய சோக வரலாறு

அப்போது அவர்கள் தங்கத்தால் ஆன ஒரு பகோடா எனும் நாணயத்தை பழவேற்காட்டில் இருந்தபோது வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில் திருப்பதி வேங்கடவரின் உருவம் இடம் பெற்றிருந்தது

இதை ஏன் செய்தார்கள் என்பது தெரியவில்லை .ஒருவேளை மக்கள் அந்த நாணயத்தை மதிக்கச் செய்யச் செய்திருக்கலாம்

அப்போதே திருப்பதி வேங்கடவர் செல்வத்திற்குக் குறியீடாக இருந்திருக்கிறார் என்பது தெரிகிறது

படம்: டச்சு தங்க நாணயம்

காலதேவன் வழிபாடு

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதர்கள் நாகரிகமும் பண்பாடும் பெற்று வாழ்ந்த தென் பகுதியில் காலம் என்ற கோட்பாட்டை இரவு பகல் என்ற பொருளிலும் சூரிய சந்திரர் இணைந்த வடிவிலும் காலம் நகர்ந்துகொண்டே இருக்கும் யாருக்காகவும் நிற்காது என்ற கோட்பாட்டை சக்கரமாகவும் உருவகப்படுத்தி வழிபட்டனர். ஒவ்வொருவருக்கும் காலம் முடியும் போது அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப பலன் கிடைக்கும் அதனை வழங்குவோன் எமன் எனப்பட்டான். [எமன் என்றால் எம்முடையவன்; அவன் உனக்கு எனக்கு என்று பாரபட்சம் காட்டாதவன் எனப் பொருள் கொள்ளலாம். வட மொழியில் இவனை யமன் என்பர்]

சீனாவில் எமன்

இவனே நீதிபதி என்றும் இறப்பினைக் கொடுத்து அவரவர் காலத்தை முடித்து வைப்பவன் என்றும் அறியப்பட்டான். காலத்தை கணக்கிடுவோன் காலன்; மரணத்துக்குத்

ஜப்பானில் எமன் - என்மதென்

தூதாக வருபவன் தூதன் என்றும் காலக்கடவுள் இன்னார் இனியார் எனாது தர்மத்தின் படி செயல்படுவான் என்பதால் அவனே தர்மன் என்றும் புரிந்துகொள்ளப்பட்டான்; அவனை எமதர்மன் என்றும் தர்மராஜா என்றும் அழைத்தனர்.

முழு நிலா

மண்ணுக்குக் கீழே இருந்து வரும் பாம்பு இறந்து போன முன்னோராகக் கருதப்பட்டது. கருப்பு நிறமும் அமாவாசையும் இறந்தவர்களுக்கானது. மேலே இருந்து வரும் மழை தேவலோகத்தில் இருந்து வருகிறது அதனை வருவிக்கும் அல்லது அருளும் தெய்வம் மண்மகளைச்சூலுறச்செய்யும் இந்திரன் எனப்பட்டான். புதிய பிறப்புடன் தொடர்புடையவை மேலே இருந்து வருபவை வெண்மை நிறத்துடன் தொடர்புபடுத்தப்பட்டன. ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடிப்பாடிக் களிக்கும் இரவு முழு நிலவின் ஒளி மிகுந்த இரவாக அமைந்தது. பங்குனி, சித்திரை, வைகாசி முழு நிலா இரவுகள் ஆண்டின் மிகுந்த ஒளி பெற்ற இரவைப் பகலாக்கும் முழு நிலா இரவுகளாகும். பங்குனி முழு நிலா காமனுக்குரிய நாளாகவும் திருமணத்துக்குரிய நாளாகவும் ஆயிற்று. கோயில்களில் நடக்கும் தெய்வத் திருமணங்கள் இதற்குச்சான்றாகும்.. சித்திரை முழு நிலா இந்திர விழாவுக்குரியதாயிற்று. ஆக வெண்மை என்பது மேலே மேலோகம், சுக்கிலம் சுரோணிதம், மகிழ்ச்சி, பிறப்பு ஆகியவற்றின் குறியீடுகள் ஆயின.

பிறப்பும் இறப்பும்

கிரேக்க கடவுள்

வெண்மை - கருமை, இந்திரன் - எமன், பிறப்பு – இறப்பு என்ற இருமைகள் ஆதி மனிதனின் சமயத்திலும் தொன்மங்களிலும் இருந்து வந்தன. இவை தன பகுதியசி சேர்ந்தவர்கள் கடல்கோள்களால் வடக்கே நகர நகர அவர்கள் போய்த் தங்கிய இடங்களிலும் செழித்து வளர்ந்தன. பாகிஸ்தான் மாநிலங்களில் ஒன்றான சித்ரால் என்ற பகுதியில் கைபர் கனவாய் அருகே வாழும் கலஷா எனப்படும் பழைய இனம் இவ்விரு கடவுளரையும் வணங்கி வருகிறது. இவர்கள் ஐயாயிரம் பேர் மட்டுமே. 1989 இல் இங்கு வந்து ஆய்வுகள் மேற்கொண்ட ஜோசெல் எல்ஃபின்பின் என்பவர் இவர்கள் கிமு மூன்றாம் நூற்றாண்டில் இங்குப் படைஎடுத்து வந்த திராவிட இனத்தவர் என்கிறார். சர்வன் &

ஜக்லவான் என்போர் கிமு இரண்டாம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறிய புலம் பெயர்ந்தோர் என்கின்றனர். திராவிடப் பூர்வ குடியினருடன் அலெக்சாண்டரின் வீரர்கள் தங்கிவிட்டதால் அவர்களின் கலப்பினமாக இப்போது மக்கள் இருக்கின்றனர் எனக் கருத இடமுண்டு. ஆனால் அலெக்சாண்டரின் படை வீரர்கள் இங்கு தங்கியதாக ரட்யார்டு கிப்ளிங் எழுதியது வெறும் கற்பனை என்றும் கருத்து நிலவுகிறது. *[விக்கிப்பீடியா]*

தெற்கில் இருந்து வடக்கே சென்ற இந்திரனும் எமனும்

இந்திரனை முழு முதல் ஆரியக் கடவுள் என்று முத்திரை இடாமல் அவன் தென்பகுதியைச் சேர்ந்த திராவிடர்களின் மழைக் கடவுள் என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டும். நெல் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த ஆண்டு முழுக்க தண்ணீர் தேவைப்பட்ட ஆற்றங்கரையில் வாழ்ந்த மருத நிலமக்கள் மழைக்காக உருவாக்கிய உருவகப்படுத்திய கடவுள் இந்திரன் ஆவான். திராவிடர்கள் இந்தியாவில் மலை மற்றும் கடல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்ததற்கான சான்றாக அவ்விடங்களில் திராவிட மொழிகள் பேசுவதால் அறிய முடிகிறது. இவர்கள் பிறப்பு இறப்பு என்ற அடிப்படையில் மனித வாழ்க்கையைப் புரிந்துகொண்டு இந்திரனையும் காலனையும் அல்லது எமனையும் வணங்கி வந்தனர். இடையில் வந்து குடியேறிய வந்தேறிகள் இந்திரனையும் எமனையும் மற்றும் இங்கு வணங்கப்பட்டு வந்த தெய்வங்களைத் தமக்கேற்ப ஊர் பேர் மாற்றி கதைகள் புனைந்து புதிய வடிவம் அளித்தனர்.

கடல்கோள் ஏற்பட்ட போது இங்கிருந்து மக்கள் நீந்திச் சென்று கரை ஏறியதாகவும் அதனால் தமது முன்னோர் கடல் மாதாவின் பிள்ளைகள் என்றும் கில்காமேஷ் புராணம் சொல்கிறது. இதனால் அங்கு வழங்கும் எபிரேயம், அரமே, போன்ற செமிட்டிய மொழிகளிலும் திராவிட மொழிகளின் இயல்பைக் காணலாம். *[எபிரேய மொழியில்*

தமிழில் இருப்பதைப் போன்ற வல்லொலி மெல்லொலி அமைப்பு, குற்றியலிகரம் குற்றியலுகரம், புள்ளி எழுத்துகள் போன்றவற்றைக் காண முடியும்]. அங்கும் பிறப்பு இறப்புக்கான கடவுள் உருவகங்கள் பிரிந்திருந்து பின்னர் அவை இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டதைக் காணலாம்.

பவுத்தத்தில் தொல் தமிழர் கடவுளர்

பவுத்த சமயம் மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழகம் வந்துவிட்டது. இங்கு அசோகா மாமன்னர் நாகப்பட்டினத்தில் புத்த விகாரைகளை எழுப்பினார். ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய பல்லவனேஸ்வரத்தில் பவுத்தர்களின் பாத வழிபாடு நடந்தற்கான அடையாளம் உள்ளது. எலாம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் திகழ்ந்தது. கி.பி. 44oஇல் பிறந்த போதி தர்மர் சீனாவுக்கு சென்று பவுத்த சமயத்தைப் பரப்பினார். அதன்பின்பு அங்கிருந்து ஜப்பான் கொரியா முதலிய நாடுகளுக்குச் சென்றது. பவுத்த துறவிகளைத் தர்க்கத்தில் வென்ற சங்கரர் இந்திரர் சரஸ்வதி என்ற வெற்றிப்பட்டத்தை பெற்றார். அதன் பிறகு அவர் உருவாக்கிய காஞ்சி சங்கர மடத்தில் பீடாதிபதிகள் இந்திர சரஸ்வதி பட்டத்தோடு புதுப் பெயர் பெற்றனர். சிவன் கோயிலில் இந்திரன் விலக்கப்பட்டான்

பவுத்த சமயம் புதிதாகப் பரவிய இடத்தில் அது வரை அப்பகுதியில் வழிபட்டு வந்த தெய்வங்களைத் தமதாக்கிக் கொண்டது

. இந்திரன் எமன் மற்றும் பெண் தெய்வங்கள் பவுத்த சாயலில் பெயர் மாற்றம் பெற்றன. இந்திரன் தேவராஜா என்பப்பட்டான் அவனே புத்தருக்கு [ஞானஸ்நானம்] திருமுழுக்குச் செய்வித்தான். இந்திரனை சக்ரா, சக்கா, சாக்கா, என்று பவுத்தர்கள் அழைத்தனர். புத்தரின்

ஒரு பக்கம் இந்திரனும் மறு பக்கம் பிரமனும் இருத்தப்பட்டனர். பிரம்மன், சரஸ்வதி, எமன், குபேரன், வருணன் ஆகியோர் புத்த சமயக் கடவுள்கள் ஆயினர். புத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டையும் உடலை யோக சாதனமாகப் பயன்படுத்தும் முறையையும் கற்றுத்தந்தது. இறப்புக்குப் பிந்திய வாழ்வை வலியுறுத்தியது. அதனால் இன்றும் ஒருவர் இறந்து போனால் அவர் சொர்க்கத்துக்குப் போவதற்காக புத்த துறவிகளிடம் பணம் கொடுத்து சீட்டுப் பெறும் முறை இருக்கின்றது. குறுந்தொகைத் தலைவி [292] இரவுக் குறி வந்திருக்கும் தன் தலைவனைக் காணப் போக முடியாமல் தவித்தபடி, இன்னும் உறங்காமல் இருக்கும் தன் தாயை நினைத்து பெண் கொலை செய்த நன்னன் போன மீண்டு வர முடியாத கீழான நரகுக்குச் செல்வாள் என்று சபிக்கிறாள். பாடல் எழுதப்பட்ட காலத்தில் தமிழகத்தில் நரகங்களின் எண்ணிக்கை மற்றும் நம்பிக்கை அதிகரித்திருந்த நிலையை இப்பாடல் உணர்த்துகிறது. ஜப்பானில் மீண்டு வர கூடிய நரகம், வர இயலாத நரகம் என்று இரு வகை நரகங்கள் பவுத்த சமய நம்பிக்கையில் உள்ளது.

எமதர்மன் வழிபாடு

எமன் தர்மதேவன் எனப்பட்டதால் அவனது கோயில்கள் தர்மராஜா கோயில்கள் எனப்பட்டன. இந்திரனுக்கு உரிய கோயில்கள் தேவராஜா கோயில்கள் எனப்பட்டன. மயிலை. சீனி. வேங்கடசாமி தனது பவுத்தமும் தமிழும் என்ற நூலில் தர்மராஜா கோயில்கள் புத்தர் கோயில்கள் என்கிறார். தாரா தேவி கோயில் பிற்காலத்தில் திரவுபதி கோயில்கள் ஆயின என்கிறார். திரவுபதி சமேத தர்மராஜா கோயில்கள் இன்றும் தாராபுரம் முதலான பல ஊர்களில் இருக்கின்றன. மாமல்லபுரத்தில் உள்ள பாண்டவர் ரதம் தர்மராஜா கோயில் ஆகும். எமனுக்கு கோயில் எழுப்பிய இடங்களில் அவனுடன் காலன், தூதன் ஆகியோரும் இடம் பெற்றனர். எமதர்ம வழிபாடு தமிழகத்தில் பக்தி இயக்கத்துக்கு பிறகு எருமை மீதமர்ந்து வரும் கரிய கொடிய தோற்றமுடைய கடவுளாக உருமாறியது. அதற்கு முன்பு ஒரு தூண் மட்டுமே நட்டு வைத்து வணங்கினர்.

இன்றும் தென்காசி தாலுகாவில் வல்லம் என்ற ஊரில் ஆதி கோயிலாக காலசாமி கோயில் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் டி. கல்லுப்பட்டி சுப்புலாபுரம் அருகில் நேரக் கோயில் என்ற பெயரில் காலக் கடவுள் கோயில் உண்டு. இவ்விரண்டு இடத்திலும் கீழே அகலமாகவும் மேலே குறுகலாகவும் செல்லும் ஐந்தடி உயரத் தூண் உண்டு. அதன் மேல் பகுதி கூம்பாக இல்லை; தட்டையாக இருக்கும். காலம் நகர்வதைக் குறிக்கும் வகையில் சூரிய சந்திரர் உருவம் பொறித்திருப்பதைக் காணலாம். இதுவே ஆதி வடிவம் ஆகும். பின்னர் உருவம் வரைந்தும் சிற்பம் செய்தும் வழிபட்டனர்.

எமதர்மரை வணங்குவோர் தம் பிள்ளைகளுக்கு தர்மர், தர்மராஜா, ஏமராஜா, ராஜ- எனத் தொடங்கும் பிற பெயர்களைச் சூட்டுவது மரபு. ஸ்ரீவில்லிபுத்தூரில் மூன்று இடங்களில் ஏமராஜா கோயில்கள் உண்டு. பெரிய கோயில், நாடார்களின் குலதெய்வமாக கம்மாபட்டி கருப்பட்டி ஊரணி அருகில் இருக்கும் கோயிலும், சென்னா குளம் புதுப்பட்டியில் கோனார்களின் குலதெய்வமாக ஒரு கோயிலும் உள்ளன. பெரிய கோயிலுக்குள் எமன் தனியாக கோயில் உண்டு. [இந்தக் கோயிலில் பணியாரம் வேகும் சூதான எண்ணெய்க்குள் வெறும் கையை விட்டு அரித்து எடுக்கும் அதிசயம் ஆண்டுதோறும் நடக்கும். ஒரு பாட்டி விரதமிருந்து இதைச் செய்வார்.] நாடார்கள் கோயிலில் ஆவணி மாதம் கடைசி வெள்ளியன்று ஆண்டு பூஜை நடத்தப்படும். அப்போது பூப்பந்தல், கரும்பு பந்தல் போட்டு வணங்குவர். இவர்கள் உடன்குடியில் இருந்து வடக்கே இடம் பெயர்ந்தவர்கள். உடன்குடியில் இருந்து அழகிய பாண்டியபுரம் வந்து அங்கிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வந்தனர். அவ்வாறு வந்த ஏழு குடும்பங்கள் இன்று ஐநூறு தலைக்கட்டுகளாக வளர்ந்துவிட்டன. எனவே இங்கு குடும்பங்கள் பெருகச் செய்த பிச்சமுத்து ஐயாவுக்கும் உள்ளே சிலை உண்டு. எமன், காலன் தூதன், ஐயனார், வன்னியராஜா, வெண்ணாங்கிழவி என்ற ஆறு பேருக்கும் கோயில் உண்டு. வெண்ணாங்கிழவிக்கு மட்டும் முறம், காதோலை, கருகமணி, பிச்சி பூ வைத்து வழிபடுகின்றனர். மற்ற தெய்வங்களுக்கு எந்தப் பூவும் சாற்றலாம்.

காலசாமி கோவில், வல்லம், தென்காசி (பட உதவி பொதிகை குடும்பன்)

பூ பந்தல் என்பது பவுத்தர்கள் சித்தர்களாக காடு மலைகளுக்குள் போய் ஒளிந்து மறைந்து வாழத் தொடங்கிய பிறகு ஏற்பட்ட ஓர் நேர்ச்சை அல்லது வேண்டுதல் ஆகும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் எல்லாம் வல்ல சித்தருக்கு பூப்பந்தல் நேர்ச்சை நடைபெறுவது உண்டு. சைவ வைணவ சமயங்கள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் அவர்கள் பவுத்தர்களையும் சமணர்களையும் கடுமையாகத் தண்டித்து அவமானப்படுத்தி உயிர்க்கொலையும் செய்தனர். இதனால் பலர் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் போய் மறைந்து வாழத் தொடங்கினர். இவர்கள் மிகச் சிறந்த காலக் கணிதர்களாக விளங்கினர். விண்மீன்களையும் கோள்களையும் வெறும் கண்ணால் நோக்கி எதிர்கால நிகழ்வுகளை கணித்துக் கூறினர். அவர்களில் பலர் இரசவாதம், ஜோதிடம், மருத்துவம் போன்றவற்றில் சான்றோர்களாகி சித்தர்கள் எனப்பட்டனர். வேறு சிலர் களரி, சிலம்பம், வர்மம், குங்ஃபூ, கராத்தே [பெயர்கள் பிற்காலத்தவை] போன்ற தற்காப்புக் கலைகளில் தேர்ச்சி பெற்று பெற்று ஆசான்களை உருவாக்கினர். இவர்களின் பாடல்களில் சிவன், முருகன் என்ற

பெயர்கள் இடம்பெற்றாலும் அவை புராணக் கடவுளர்களாக இல்லாமல் தத்துவக் கோட்பாடுகளாக விளங்கின.

புத்தமும் சித்தமும்

ஜப்பானுக்கு பவுத்தம் பரவிய போது அங்கு எழுதப்பட்ட பவுத்த நூல்களின் எழுத்து வடிவம் சித்தம் எனப்பட்டது. சித் என்றால் அறிவு. அறிஞர்கள் எழுதியவை என்ற பொருளில் அந்த எழுத்து வடிவம் சித்தம் எனப்பட்டது. ஏறத்தாழ ஐந்தாம் நூற்றாண்டு வரை இந்தியாவிலும் சித்தம் என்ற எழுத்து முறை இருந்தது. கியோத்தொவில் இநோஜியில் உள்ள எமன் கோயிலை எம்ம கோயில் என்று அழைக்கின்றனர். ஜப்பானில் ன், ம் ஆகிய இரண்டு ஒலிகளின் கலவையாக ஒரு மெய்யெழுத்து உள்ளது. மொழியியலில் *NASALAISED ENDING* என்று சொல்வதற்கு நிகரானது இந்த 'ன்ம்' என்ற மூக்கொலி வடிவம். இது மகர ஒலி போல ஈரிதழ் ஒலியாக முற்றுப் பெறாது. எனவே 'எம்ன்' என்ற ஒலியுடன் எமன் அங்கு அழைக்கப்படுகிறான்.

காலனும் காலபைரவனும்

காலன் சைவ சமய எழுச்சிக் காலத்தில் தமிழகத்தில் பெருங்கோயில்கள் கட்டப்பட்ட சமயத்தில் காலபைரவர் என்ற பெயரில் தென் கிழக்கு மூலையில் தனிச் சந்நிதி பெற்றான். நாய் காலத்தைக் குறிக்கும் குறியீடாக. கால பைரவரின் வாகனமாக இடம் பெற்றது. [ஜெயமோகன் கதை ஒன்றில் அடிக்கடி நாய் வந்து போவதைப் பற்றி அவரிடம் கெட்ட போது அவர் நாய் காலத்தின் குறியீடு என்றார்]. காலனை வழிபடுவோர் தமது பிள்ளைகளுக்கு காலசாமி, காலம்மாள் என்று பெயர் சூட்டுவர். எமன் [தர்மன்], காலன் என்ற கருத்தாக்கங்கள் தர்மச்சக்கரமாக பவுத்தத்தில் இடம்பெற்றது. அறவாழி என்றும் அழைத்தனர். இந்து சமயத்தில் சிவ, விஷ்ணு புராணங்கள் எழுதப்பட்ட காலத்தில் சக்கரம் வைணவத்தில் சக்கரத்தாழ்வாராக சமஸ்கிருதத்தில் சுதர்சன் என்ற பெயரில் இடம்பெறலாயிற்று. காலம் இரவு பகல் என்று மாறி மாறி சுழன்று வருவது போல சக்கரமும் சுழன்றுகொண்டே இருக்கும். இதுவும் ஒரு உருவகம். திருமோகூரில் சக்கரத்தின் மீது இரண்டு கால்களையும் அகல வைத்து சர்க்கஸில் ஒற்றைச்சக்கரத்தைச்சுற்றிக்கொண்டு வருபவர் போல சக்கரத்தாழ்வாரின் ஒரு புடைப்புச் சிற்பம் பழுதுபட்ட நிலையில் இருப்பதைக் காணலாம். காலச் சுழற்சியை சுட்டிக் காட்டும் சிற்பமைதிகளில் இதுவும் ஒன்று. ஆதிமனிதனின் காலம் பற்றிய கருத்தாக்கம் சமயங்களின் வாயிலாக எமன் என்றும் சக்கரத்தாழ்வார் என்றும் வளர்ந்தது.

காலி, காளி மற்றும் காலன், காளன் ஆகியவற்றுக்குள் வேறுபாடு இல்லை. காளன் எனப்படுவான் இந்திரனின் உதவியாளன் அவன் இந்திராணியை மீட்க உதவினான் என்று புராணக்கதையும் உள்ளது. திபெத்தில் மகாகாலன் பெருந்தெய்வமாக வணங்கப்படுகிறான் சைவ வைணவ எழுச்சிக்குப் பிறகு எமனின் பணியை சிவனும் கிருஷ்ணனும் புரிவதாகவும் புதிய கருத்தாக்கங்கள் தோன்றின. மும்மூர்த்திகளின் பணியில் சிவனின் பணி அழித்தல் ஆகும். அதுவே எமனின் பணியும் ஆகும் கிருஷ்ணன் எல்லா உயிர்களும்

இந்திரனும் காலனும் இணைந்த காலபைரவர்

தன்னில் வந்து அடங்கும் என்றதனால் அதுவும் ஏறத்தாழ எமனின் பணியை எடுத்துக்கொண்டதாக உணரப்படும்.

இந்து சமயத்தில் எமதர்மன்

மச்ச,கருட, விஷ்ணு புராணங்களில் எமனை யமன் என்பர். அவனைப் பற்றிய கதைகள் உண்டு. எமனின் தந்தை சூரியன்; தாய் சந்தியா அல்லது சரண்யா [அந்திப்பொழுது]; இவள் விஸ்வகர்மாவின் மகள் ஆவாள். யமனுடன் பிறந்த இரட்டை சகோதரி யமி ஆவாள். எமனுக்கு நிறைய மனைவியர் உண்டு. ஐயோ என்பவள் நாட்டுப்புற நம்பிக்கையில் காணப்படுபவள். ஐயோ தவிர ஹேமமாலா, விஜயா, சுசிலா என்று மூன்று மனைவியர் உள்ளதாக புராணங்கள் சொல்கின்றன. யமனின் மனைவி பெயர் ஊர்மிளா என்று மகாபாரதம் சொல்கிறது. மேலும் தர்மர் யமனுக்கு பிறந்தவர் என்று இறப்பையும் தர்மத்தையும் இணைத்துக் குடும்பமாக்கியது. தாகத்தால் தவித்து தண்ணீர் தேடி வந்த போது நீர்நிலையைக் காவல் காத்த பூதம் ஒன்று, தான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொன்னால் மட்டுமே தண்ணீர் தருவேன் என்று சொல்லி நால்வரையும் சாகடித்துவிடும். அதன் பிறகு தர்மர் வந்து அனைத்துக் கேள்விகளுக்கும் சரியாகப் பதில் சொல்வார். அப்போது பூதம் தான் எமன் என்ற உண்மையை அவருக்கு உணர்த்தும். அந்தக் கேள்வி பதில்கள் தத்துவ விசாரமாக இருக்கும். கடோபநிடதத்தில் எமன் நசிகேதனுக்கு மரணம் மற்றும் மரணத்துக்குப் பிந்தைய வாழ்வு பற்றி உபதேசிக்கிறான். இவ்வாறு மரணத்தின் முலம் வாழவின் மாற்றவியலா உண்மைகளை எமன் பிறருக்கு உணர்த்தும் ஞானி ஆகிறான்.

தமிழகத்தில் எமதர்மனுக்கு கோயில்கள்

சைவ எழுச்சியின் போது சமண பவுத்த கோயில்களின் கடவுளர் நீக்கப்பட்டு அங்கு சிவனுக்கு இடமளிக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த இந்திரன் எமன் பிரம்மன் போன்ற கடவுளர் சிவனால் பாவ விமோசனம் பெற்றதாகக் கதைகள் புனையப்பட்டு பரப்பப்பட்டன. திருச்சி தஞ்சை

மாவட்டங்களில் பவுத்தம் பரவிச் செல்வாக்குப் பெற்றிருந்ததை அங்குள்ள கோயில்களின் இறைவன் பெயர்களின் வாயிலாகக் காணலாம். அங்கு இந்திரனுக்குக் கட்டப்பட்டிருந்த கோயில்கள் பின்னர் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டன. தல புராணங்கள் வாயிலாக இந்திரன் சாபம் தீர்த்த கதையைக் கற்பித்து அங்குள்ள சிவன் கண்ணாயிர நாதர் என்று பெயர் சூட்டப்பட்டார். இது போல திருக்கடையூர் சிவபெருமான், காலனை வதம் செய்த காலசம்ஹார மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார். திருச்சிற்றமபலம் என்ற தலத்தில் தனது தவத்தைக் குலைத்த மன்மதனை எரித்து சிவன் பஸ்பமாக்கினார். அங்கு எமனுக்கு தனிச்சன்னிதி உண்டு. அவனுக்கே முதல் பூஜை நடைபெறும். அது பழைய எமன் கோயிலாக இருந்து பின்னர் சிவபெருமானுக்கு இடம் அளித்த கோயில் ஆகும். இங்குள்ள தீர்த்தம் எம தீர்த்தம் எனப்படும். அதில் பெண்கள் நீராடுவதில்லை. பாமக்குடி அருகே எமனேஸ்வரம் என்ற தலத்தில் சிவபெருமான் அனுக்கிரக மூர்த்தியாக எழுந்தருளி உள்ளார். இங்கு எமனுக்கு சிவன் அனுக்கிரகம் செய்ததாக தல புராணம் கூறுகிறது.. இங்குல்ல தீர்த்தத்துக்குப் பெயர் எம தீர்த்தம்.. இங்கும் நாய் இல்லாத பைரவரை தரிசிக்கலாம். இதுவும் எமனுக்குரிய பழைய கோயில் ஆகும்.

மார்க்கண்டேயனை உரிய நாளன்று பாசக் கயிறை வீசி எமன் பிடிக்க முனைந்த போது அவன் சிவலிங்கத்தை கட்டிபிடித்துக்கொண்டதால் கயிறு லிங்கத்தின் மீதும் சுற்றியது. இதனால் எமனை சிவபெருமான் சபித்தார். இக்கதை எமனை விட பெரிய கடவுள் சிவன் என்ற கருத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதித்தது. இது போன்ற கதைகள் எமனின் முக்கியத்துவத்தை குறைக்க உதவின. ஆயினும் நாட்டார் வழக்கில் எமதர்மனை குலதெய்வமாக வழிபடும் நிலை தொடர்ந்தது.

தென்கிழக்கு நாடுகளில் எமன் வழிபாடு

திபெத் நாட்டில் வஜ்ராயன் பவுத்தம் பின்பற்றபப்டுகிறது. இங்கு எமனை *GSINRJE* என்ற பெயரால் அழைப்பர். அழிவைத் தருபவன் என்பதால் யமாந்தகன் அல்லது யமாந்தக வஜ்ர பைரவன் என்றும் அழைக்கப்படுகிறான். அசுர முகமும் காலுக்குக் கீழே ஒருவனைப் போட்டு மிதிக்கும் உருவத் தோற்றத்துடனும் இருப்பான். கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் கோயிலிலும் இதே உருவ அமைப்புடன் எமனைக் காணலாம். சீனாவில் உள்ள ஏராளமான கோயில்களில் எமனுக்குரிய சந்நிதி அல்லது சிலை இருப்பதைக் காணமுடியும். ஜப்பானில் எமன் என்ற பெயரின் மெய் எழுத்துக்களை முன்பின் ஆக மாற்றி என்ம தென் என்று அழைக்கின்றனர். என்ம

அஜ்டெக் சமயத்தில் இறப்புக் கடவுள்

ஓ, என்ம தாயி ஓ என்றும் அழைப்பதுண்டு. தாயி என்றால் பெரிய என்பது பொருள். [தாயி புத்சு என்றால் பெரிய புத்தர்]. பெருங்கடவுள் எமன் என்பதையே இச்சொற்கள் குறிக்கின்றன. எமன் பற்றிய தகவல் அங்கு பழைய நூல்களில் காணக் கிடைக்கின்றன.. எமன் அங்கும் பாவங்களுக்குத் தண்டனை தரும் நீதிபதியாகப் போற்றப்படுகிறான்.

பவுத்த சமயத்தில் நரகங்கள்

பவுத்த சமயம் மரணத்துக்கு பிந்தைய வாழ்வு குறித்து அதிகம் போதித்தது. இறந்த பின்பு உயிர்கள் நரகத்தில் அனுபவிக்கும் தணடனைகள் குறித்தும் விளக்கின. அடுக்கடுக்கான நரகங்கள் இருப்பதாக அச்சுறுத்தின. நரகங்களின் பொறுப்பாளனாக காவலனாக எமதர்மன் இருந்தான். அவன் தர்மத்தின் வழியில் ஆத்மாக்களைத் தண்டிப்பான். ஜப்பானில் புண்ணியாத்மாக்கள் சொர்க்கம் புகும். பாவாத்மாக்கள் குறைவாகப் பாவம் செய்திருந்தால் மேய்தோ *[meido]* எனப்படும் நரகத்துக்குப் போகும் அங்கு சில காலம் தண்டனை அனுபவித்துவிட்டுப் பின்பு வெளியேறும். நிறைய பாவம் செய்த ஆத்மாக்கள் ஜிகோ கு *[jigoku]* என்ற நரகத்துக்கு போய் அங்கேயே கிடந்து உழலும்; அதற்கு விடுதலையே கிடையாது. கொரியாவில் நரகத்தை ஜியோக் *[jiok]* என்றும் வியதனாமில் *dia nguc* என்றும் அழைக்கின்றனர். *dia nguc* என்றால் வியத்னாமிய மொழியில் பூமிச் சிறை என்று பொருள்.

நிறைவு

பிறப்பு [வழமை] மற்றும் இறப்பு [அழிவு கடவுளரான இந்திரனும் எமனும் தொல் தமிழர் வாழ்வில் வழிபட்டு வந்த ஆதி கடவுளர் ஆவர். திராவிடர் வாழ்ந்த இடங்களில் எல்லாம் இக்கடவுளர் வழிபாடு இருந்தது ஆரியர் வரவுக்கு பின்னர் இவற்றிற்குப் புதிய வடிவமும் செயற்பாடும் கொண்ட கதைகள் உருவாயின. இந்திரனும் எமனும் கொடியவராகச் சித்திரிக்கப்பட்டனர். இருப்பினும் பழமை மாறாத, மறவாத நாட்டுப்புற மக்கள் தமது குல தெய்வமாக எமனை வாங்கி வருகின்றனர். தவறு செய்தால் கடவுள் தண்டிப்பார் என்ற அச்சத்துடன் மட்டுமே தெய்வ வழிபாடு நடைபெறுகின்றது.

ஒப்பிலக்கணம் தந்த ஒப்பிலாக் கால்டுவெல்

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே,
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி

அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள் - VI

பாருலகில் பேசப்படும் பல்லாயிரம் மொழிகளுள்ளும், மிகமூத்து முதிர்ந்த முதன்மொழியாகவும் இலக்கிய, இலக்கண, பண்பாட்டுக் கூறுகளால் பண்பட்டுயர்ந்த பெருமொழியாகவும் மொழி நூலார் உள்ளிட்ட அத்துணை அறிஞர்களாலும் ஆய்வாளர்களாலும் ஒப்ப உடன்பட்டு ஏற்கப்படும் உன்னத மொழி நம் தாய்த்தமிழே ஆகும். எனினும், இத்துணைப் பெருஞ்சிறப்புகளும் தன்னிகரற்ற தலைமைத்துவமும் வாய்ந்த இவ்வுயர்தனிச் செம்மொழியின் மாண்பையும் மகத்துவத்தையும் ஆய்வுலகும் அறிவுலகும் சில நூற்றாண்டுகள் முன்பு வரை உரியபடி அறியவில்லை. அறிவிக்கப்படவில்லை என்பதே கசப்பானதொரு வரலாற்று உண்மையாகும். ஒருபடி மேலே சென்று, இப் பேருண்மை உலகுக்குத் தெரியவிடாமல் மறைக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் உள்ளன. ஐரோப்பிய மொழிகளுள் கிரேக்கம், இலத்தீன் இத்தாலி போன்ற மொழிகளும் இந்திய மொழிகளுள் சமற்கிருதமும் பெற்ற ஆய்வு விளம்பர வெளிச்சங்களை அன்னைத் தமிழ் பெறாதிருந்தகாலம் இருந்ததுண்மை. அந்த மூடுபனித்திரைகளை விலக்கி, முத்தமிழின் மாண்பும் மகிமையும் அறிவுலகம் எங்கும் காலைக்கதிரவனின் வெளிச்சக் கதிர்கள் போல்விரிந்து பரவ தம் அயராத பணிகளாலும் ஆய்வுக் கொடைகளாலும் வழிவகுத்த முன்னோடிகளுள் முதன்மையானவர்கள் ஐரோப்பிய / ஆங்கிலேயக் கிறித்தவ அருளாளர்களே என்பது அசைக்க முடியாத வரலாற்றுண்மையாகும் இப்பெரும் பணியைச் சிரத்தையுடன் செய்து முடித்த சீலர்களுள் மிக முக்கியமானவர் 19ஆம் நூற்றாண்டின் இங்கிலாந்திலிருந்து தமிழகம் வந்து, அரை நூற்றாண்டுக்குமேலாக, இங்கேயே தங்கி, தமிழராகவே வாழ்ந்து, தொண்டாற்றி, தமிழ் மண்ணிலேயே அடக்கமான அருள்பணிச் செம்மல் மாமறைத்திரு அறிவர் இராபர்ட்கால்டு வெல் அவர்கள் ஆவார். அன்னாரின் அதிசயிக்கத் தக்க வாழ்வும் பணிகளும் பற்றிச் சுருக்கமாகத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

I அடிகளாரின் வாழ்க்கைக் குறிப்பு

இராபர்ட் கால்டுவெல் ஐயர், அயர்லாந்து நாட்டிலுள்ள (Antrim) என்னும் ஊரில் 1814ஆம் ஆண்டு மேத் திங்கள் 17ஆம் நாள் பிறந்தார். அருகில் உள்ள ‘ஷெப்பர்ட் யார்ட்’ எனுமிடத்தில் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. இவரது பெற்றோர் ஸ்காட்லாந்து

நாட்டினரான வில்லியம் கால்டுவெல், இசபெல்லா எமில்டன் ஆகியோர், இவர் கிளாஸ்கோ மாநகரில் பள்ளி, கல்லூரிப் படிப்புகளைப் படித்தார். இளங்கலை பயின்றபோது படிப்பில் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். கிளாஸ்கோபல்கலைக் கழகத்தில் ஒப்பியல் மொழி நூல் *(Philology)* பயின்றார். கிரேக்கப் பேராசிரியர் டானியல் கெய்த் சான்ட் போர்டு என்ற அறிஞரால் இவர் பெரிதும் பாதிக்கப்பட்டார். அவரது பேரூக்கத்தால் கல்வி அறிவில் தலைசிறந்து விளங்கினார். அப்போது இலத்தீன், கிரேக்கம், ஜெர்மன் முதலிய ஐரோப்பியச் செம்மொழிகளையும் பிற ஐரோப்பிய மொழிகளையும் நன்கு கற்றறிந்ததாகத் தெரிகிறது. பின், டப்ளினில் கலை, ஓவியம் போன்ற நுண் கலைகளையும் விரும்பிப் படித்தார்.

பின்னர், அவருக்கு இறையியல் கல்வியில் ஆர்வம் மேலிட்டதால், இறையியல் கல்வி *(Theology)* பயிலலானார். பின்னர் சமயப் பணியாளராகச் சமயப் பணிக்குழுக்களால் நியமிக்கப்பட்டார். சமயப் பணியாற்ற இந்தியா செல்ல முடிவெடுத்தார். தம் அன்னையின் அனுமதி பெற்று, ஆர்வம் மிக்க இளைஞனாக இந்தியா புறப்பட்டார்.



இந்தியப் பயணமும் வருகையும்

அக்கால வழக்கப்படி, கப்பலில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். கப்பல் பயணம் நெடுங்காலம் எடுக்கும் என்று அறிந்து, கப்பல்பயணத்தின் போதே இந்திய மொழிகளானசமற்கிருதத்தையும், தெலுங்கையும் பயில ஆரம்பித்தார். இதற்கு கப்பலில் அவருடன் பயணித்த சி.பி. பிரௌன் என்ற சென்னை அரசு அலுவலர் துணை செய்தார். பின்னர் ஒருவழியாகச் சென்னை வந்தடைந்த கால்டுவெல், இங்குள்ள இறைத் தொண்டர்கள் பலரோடு இனிய நட்பு கொண்டார். ஜான் ஆண்டர்சன், வின்சுலோ, ஜி.யூ. போப், ஹென்றி பவர் போன்ற அருளாளர்களோடு தொடர்பு கொண்டார். பிறகு திருநெல்வேலி மாவட்டத்தில் இறைப்பணியாற்ற, திருச்சபையால் நியமிக்கப்பட்டார். தம் மறைப் பணியைத் தொடங்க, சென்னையிலிருந்து நெல்லை மாவட்டத்திலுள்ள இடையன்குடி என்ற இடத்துக்குக் கால் நடைப் பயணம்

மேற்கொண்டார். சுமார் 800 மைல் (அதாவது 1300 கி.மீ) இவர் நடந்தே கடந்ததாக இவரது வரலாறு கூறுகிறது.

இந்த கால்நடைப் பயணத்தில் இவர் சிதம்பரம், தரங்கம்பாடி, கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, நீலகிரி, கோவை, மதுரை, பாளையங்கோட்டை, நாசரத், முதலூர் ஆகிய ஊர்களைப் பார்த்தபடி கடைசியாக இடையன்குடி வந்து சேர்ந்தார். இந்த ஊரிலேயே அவர் 50 ஆண்டுகள் தங்கி பணி செய்தார் என்ற செய்தி பிரமிக்க வைக்கிறது. வழிநெடுக, தாம் கண்ட ஊர்களிலெல்லாம் இருந்த கோயில்களையும், இயற்கை அழகினையும் பார்த்து இரசித்தபடியே பயணித்தார். இடையன்குடி, இவர் பிறந்ததாகச் சொல்லப்படும் ‘ஷெப்பர்ட் யார்டு’ என்ற ஆங்கில ஊர்ப் பெயரின் தமிழ்மொழிபெயர்ப்பாகவே அமைந்தது ஒரு வியப்பான செய்தி. இவ்வூர் பனைமரங்களின் ஊர்’ எனப்படுவது. இங்கு வாழ்ந்த பனைமரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உரிய உதவிகள் பல செய்ததோடு, ஒட்டுமொத்தத் திருநெல்வேலி மாவட்டமும் எல்லாவகையிலும் அதாவது, பொருளாதாரம், தொழில்வளம், நகரமைப்பு, வீட்டு வசதி எனப் பலதுறைகளிலும் சிறந்து விளங்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார். இவர் ‘பாலைவனமாகக்’ கிடந்த நெல்லை மண்டலத்தைச் சோலைவனமாக மாற்றினார் என இவரது வரலாற்றாசிரியர் சேவியர் குறிப்பிடுகிறார்.

பன்முகச் சமய, சமுதாயப் பணிகளாற்றி முதுமையில் மலைவாசம் புரிய கொடைக்கானலுக்கு வந்தார். அங்கும் ஓர் ஆலயம் கட்டினார். பின்னர் அங்கேயே 1891 ஆம் ஆண்டு ஆகஸ்டு 28ஆம் நாள் தமது 72ஆவது அகவையில் இறையடி சேர்ந்தார். அவரது பூத உடல், அங்கிருந்து அவர் அரும்பணியாற்றிய இடையன்குடிக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கேயே அடக்கம் செய்யப்பட்டது.

II அடிகளார் ஆற்றிய பணிகள்

கால்டுவெல் அடிகளார், தமிழ்மொழிக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆற்றிய பணிகள் கணக்கற்றவை. அவை (விரிப்பின் நீளும்; தொகுப்பின் எஞ்சும்’ எனும் நிலையில் அளவின்றி அமைந்திருப்பினும், நம் கட்டுரை அளவு கருதி ஏழு முக்கியமான கோணங்களில் அவரையும் அவரது பணிகளையும், படம் பிடித்துக் காட்ட இக்கட்டுரை முயலும். அடிகளார் நாளும் போற்றிப் பரப்பிய விவிலிய மறையில் ‘ஏழு’ என்ற எண் முழுமையின் குறியீடாகப் பேசப்படுவதும் ஒரு காரணம்.

1. திராவிட மொழிக்குடும்பத்தின் தாய் தமிழே என நிலைநாட்டிய மொழி நூல் மேதை

இராவர்ட் கால்டுவெல் ஐயரை அனைத்துலகும் முதன்மையாக அடையாளம் காண்பது, அவரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வாலேயே என்பது வெள்ளிடைமலை. தென்னிந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என ஒரு குடும்பமாக அடையாளம் காட்டி, அவற்றை ஆய்வுலகில் அறிமுகப்படுத்திய முதல் ஆய்வு மேதை இவரே. இவருக்கு முன்னரே எல்லிசு எனும் ஆங்கிலேய அரசு அலுவலர் இதனைக் குறிப்பிட்டு எழுதி இருந்தாலும், ஆய்வுபூர்வமாக அறுதியிட்டு விரிவாக வெளிச்சம் போட்டுக் காட்டியவர் கால்டுவெல் அடிகளாரே ஆவர். இவரது ஒப்பிலக்கண நூல் முதலில் 1856 இலும் பின்னர்

1875இலும் வெளியானது. தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளின் தாயாகவும் தமக்கையாகவும் திகழ்வது பழந்தமிழே என விளக்கி, இம்மொழிக் குடும்பத்துக்கும் சமற்கிருதம் போன்ற வடமொழிகளுக்கும் தொடர்பில்லை என ஆய்வு பூர்வமாக நிறுவினார். தமிழ், வடமொழியின் சார்பும் கலப்பும் சற்றுமின்றி, முற்றுமாகத் தனித்தியங்கவல்லது என உறுதிப்படுத்தினார். தெலுங்கு முதலிய பிற மொழிகள் காலப்போக்கில், சமற்கிருதத்தின் ஒட்டுறவுக்கு இடம் தந்து, அதன் கலப்புக்கு இடம் தந்து விட்டாலும், தமிழ் தன் தன்னீர்மை குன்றாது தனித்தியங்க வல்லது என அழுத்தமாக நிறுவி, பின்னாளில் வந்த மறைமலையடிகளார் வளர்த்த தனித்தமிழ் இயக்கம், தந்தை பெரியார் போன்றோர் கட்டி எழுப்பிய திராவிட இயக்கங்கள் போன்றவற்றுக்கும் பாதை அமைத்துக் கொடுத்தார். சென்னைப் பல்கலைக்கழகம், இராயல் ஆசியாடிக் சங்கம் போன்ற பேரமைப்புகள் இவரது ஆய்வுகளை உச்சி மோந்து மெச்சிக் கொண்டன. இந்நூலில் மொழி ஒப்பாய்வே அன்றி, திராவிடர் சூத்திரர் பற்றிய சமுதாய ஆய்வுகளையும் மேற்கொண்டு துணிவான முடிவுகளை வெளியிட்டார். கருத்து மாறுபாடு கருதி, சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புகளில் இப்பகுதிகள் நீக்கப்பட்டாலும், கவிதா சரண் போன்ற பதிப்புகள் முழுமையான நூலை வெளியிட்டுள்ளன. இவ்வகையில், சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர் வீ. அரசு அவர்களின் முன்னெடுப்புகள் பாராட்டத்தக்கன.

இதேபோல், ‘இலக்கணமும் மொழியியலும்’ என்ற நூலையும் கால்டுவெல் எழுதியுள்ளார். இந்நூலை, ‘இலக்கணக் கல்வியிலும் பயன்பாட்டிலும் புத்தொளி பாய்ச்சும் நூல்’ என ஆய்வறிஞர் கா. மீனாட்சி சுந்தரம் பாராட்டியுள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்று நூல் ஒன்றையும் கால்டுவெல்ஐயர் எழுதியதாகவும் அந்நூலில் அடிகளார் குறிப்பிட்டுள்ள பல காலக் கணக்கீடுகள் தவறானவை எனப் பின்னர் நிறுவப்பட்டதால், அந்நூல் நீக்கப்பட்டது எனவும் வரலாற்றாசிரியர் சேவியர் எழுதியுள்ளார்.

2. அரிய அகழ்வாய்வுகள் நடத்தி, பழந்தமிழகத்தின் பழமையையும் பெருமையையும் உறுதிப்படுத்திய தொல்லியல் அறிஞர்

மொழியியல் சார்ந்த அரிய பங்களிப்புகளை வழங்கிய கால்டுவெல் ஐயருக்கு, வரலாற்றாய்விலும் அதிலும் குறிப்பாக அகழ்வாராய்ச்சிகளிலும் ஈடுபாடிருந்தது வியத்தக்க செய்தி. தமிழக வரலாற்றில் முக்கிய இடங்களான கொற்கையில் - பொருநை நதிக்கரையில் அவர் அகழ்வாய்வு நடத்தினார். அதுபோல, புன்னைக்காயல் பகுதியிலும் அவர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டார். பழைய காயல் என்ற துறைமுகப் பகுதியிலும் அவர் நிலத்தைத் தோண்டினார். தொல்லியல் சிறப்புடைய அரிக்கமேடு பகுதியிலும் அவர் அகழ்வாய்வு மேற்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இன்று தூத்துக்குடி என வழங்கப்படும் பகுதி, முன்னர் தூற்றுக்குடி எனப்பட்டதாகவும், வெட்டின ஊற்றைத் தூர்த்துக் குடிக்கும் மக்கள் அங்கு வாழ்ந்ததால் அப்பெயர் பெற்றதாகவும் அவர் ஆய்ந்துரைத்தார். புன்னைக் காயலில் பல பழைய கட்டடங்களும் ஆலயங்களும் சிதைந்தநிலையில் இருந்ததை அவர் கண்டுபிடித்தார்.

3. திருநெல்வேலிச் சீமை வரலாற்றை ஆய்ந்தெழுதி, தமிழக வரலாற்றின் பாங்குணர்த்திய வரலாற்றாசான்

வரலாற்றாய்வில் பேரார்வம் கொண்டிருந்த கால்டுவெல், தமிழக ஊர்களின் பேர்களையும் அவற்றின் வேர்களையும் துருவித் துருவி ஆராய்ந்தார். பாளையக்காரரர்கள் வரலாறு பற்றி ஆராய்ந்த அவர், கட்டபொம்மன்கள் பலர் இருந்ததைப் பற்றி எழுதியுள்ளார். எபிரேய மொழியிலும் கிரேக்க மொழியிலும் தோகை (துகி); அரிசி (அருகா) போன்ற தமிழ்ச் சொற்கள் புழங்குவதைச் சுட்டி, தமிழகம் மேலைநாடுகளுடன் முற்காலத்தே கொண்டிருந்த வணிகத்தொடர்புகளை வெளிப்படுத்துகிறார். ‘திருநெல்வேலியின் பொது வரலாறும் அரசியலும்’ என்னும் தலைப்பில் அவர் எழுதிய ஆங்கில நூல் மிகப் புகழ்பெற்றது. தரமான வரலாற்று நூல்கள் எழுதப்படுவதற்கு இந்நூல் ஒரு வகைமாதிரி எனப் போற்றிப் புகழ்கிறார் இந்நூலை அறிஞர் கா. மீனாட்சிசுந்தரம். தமிழர்களின் குடுமிப்பழக்கம் பற்றி கூட அவர் ஆய்ந்து எழுதியுள்ளார். அதைவிட அதிகமாக விமர்சிக்கப்பட்ட அவரது நூல், ‘திருநெல்வேலிச் சாணார்கள்’ என்ற தலைப்பில் 1849இல் அவர் ஆங்கிலத்தில் வெளியிட்டது. அருமைநாயகம் என்பவர் இதைத் தமிழில் பெயர்த்ததோடு கடுமையாக விமர்சித்தார். இந்நூலுக்கு மறுப்புரையும் எழுதினார். ஆனால், இது அறிவியல் பூர்வமான மக்கள் குடி வரைவியல் (Ethnographic study) பற்றிய சிறந்த நூல் எனப் பாராட்டுகிறார் முனைவர் தொ. பரமசிவன். இத்தோடு SPCK, SPG ஆகிய சீர்திருத்தக் கிறித்தவ அமைப்பினரின் அரும்பணிகளைப் பற்றிய ஒரு வரலாற்று நூலையும் அவர் எழுதியுள்ளார்.

4. விவிலியத் திருமறையைத் தமிழில் மொழிபெயர்த்தளித்த மறைநூல் மாமணி

அடிப்படையில், சமயப் பணியாளராகத் தமிழகம் போந்த கால்டுவெல் அடிகளார் விவிலியப் போதனைகள் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் வேர்கொள்ள வேண்டும் என்ற விழைவில் எந்நாளும் சற்றும் குறைவுபட்டதில்லை. அந்த வகையில், விவிலிய மறை நூல் தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு, அருளாளர் ஹென்றிபவர் அவர்களோடு இணைந்து, அந்தத் திருத்த மொழிபெயர்ப்புக் குழுவில் இருந்த பன்னிருவரில் தலையாயவராக இருந்து செயல்பட்டார். அந்த மொழிபெயர்ப்பே, சில மாற்றங்களோடு இன்றளவும் திருத்தமுறைக் கிறித்தவர்களிடையே (protestants) பெருவழக்காக இருப்பது குறிப்பிடத்தக்கது.

5. கிறித்தவக் கொள்கைவிளக்க நூல்களும் வழிபாட்டுப் பாடல்களும் எழுதி வழங்கிய சமயத் தொண்டர்

கால்டுவெல் ஐயர், நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம், சிற்றறிஞர் ஞானக் குறிப்பிடம் முதலிய கிறித்தவ மறைக் கோட்பாடுகளை விளக்கும் நூல்களை எழுதி வெளியிட்டார். ஞானஸ்நானம், நற்கருணை முதலிய தலைப்புகளில் கட்டுரைகளும் எழுதியுள்ளார். புதிய தமிழ்க் கிறிஸ்தவர்கள் வழிபாட்டில் பாடுவதற்குத்தாமே மிக முயன்று சில தமிழ்க் கீர்த்தனைகளை எழுதினார். அவற்றுள் ‘ஏசையா பிறந்த ஆதி

மலையே' எனும் பாடல் பலரும் அறிந்தது. பிறமொழி ஞானப்பாட்டுகளையும் *(Hymns)* அவர் தமிழில் பெயர்த்துள்ளார்.

6. சமய ஒப்பாய்வு நூல்கள் எழுதி வழங்கிய ஆய்வுச் செம்மல்

திராவிட மொழிகளுக்கு ஒப்பிலக்கணம் கண்ட மேதை கால்டுவெல், சமயங்களிடையேயான ஒப்பாய்விலும் சிறந்து விளங்கினார். மகாபாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்களின் தோற்ற வரலாறுகளைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டு, அவர் எழுதிய 'பரத கண்ட புராதனம்' என்ற நூல் தனித்துவம் வாய்ந்தது. கிருஷ்ணர், பகவத்கீதை பற்றியெல்லாம் அவர் நூல்கள் எழுதியதாகத் தெரிகிறது. *Christianity and Hinduism'* என்ற பெயரில் அவர் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆற்றிய விரிவுரைகள், (கல்வி கற்ற இந்துக்களுக்கான நூல்' என்ற அறிமுகக் குறிப்புடன் நூல் வடிவம் பெற்றுள்ளன.

7. திருக்கோயில்களும் குடியிருப்புகளும் கட்டிய கட்டடக் கலை வல்லுநர்

மொழி, இலக்கணம், இலக்கியம், சமயம், வரலாறு முதலியவற்றில் ஆழங்கால்பட்ட அருளாளர்கால்டுவெல், கட்டடக்கலையிலும் ஈடுபாடு கொண்டிருந்தது வியப்பூட்டுகிறது. திருநெல்வேலி பகுதியில், வெளிநாட்டு வல்லுநர்கள். ஆலோசனைப்படி பலருக்கு அவர் வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளார். நகர அமைப்பிலும் *(Town planning)* கவனம் செலுத்தி, நெல்லைப் பகுதியில் பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். இதற்காக, அக்கால ஆங்கில அரசு அவருக்குப் பாராட்டுப் பரிசு அளித்துள்ளது.

III. அடிகளாரால் நாம் பெற்ற பயன்கள்

இத்தகு பன்முகப் பங்களிப்புகள் நல்கிய பேராளுமையால் தமிழும் தமிழகமும் தமிழரும் பெற்ற பலன்கள் சொல்லி முடியாதன. அவரால் தமிழின் மாண்பு வெளிப்பட்டது. தமிழனின் தலை நிமிர்ந்தது. நெல்லைத் தமிழர் வாழ்வுயர்ந்தது. தமிழ்ச் சமுதாயம் ஆன்மநலம் பெற்றது என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம்.

தமிழகம்வந்து, தமிழராகவே வாழ்ந்து தமிழுக்காகவும் தமிழர்க்காகவுமே தளராத் தொண்டுகள் புரிந்து தமிழ் மண்ணிலேயே அடக்கமாகிவிட்ட அவ் அருளாளரின் உள்ளம் சதாசர்வ நேரமும் தமிழர் மேம்பாட்டுக்காகவே துடித்துக் கொண்டிருந்தது என்பதற்கு, அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரை ஒன்றே போதுமான சான்றாகும். "தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி அறிவூட்ட நீங்கள் முன்வந்து முயலாவிடில், உங்கள் பிற பெருமைகளெல்லாம் வீணாகவே இருக்கும்" என உணர்ச்சி பொங்க அவர் பேசியுள்ளார். "கால்டுவெல் ஐயர் மட்டும் தமிழகம் வந்திராவிட்டால், தமிழகம் 50 ஆண்டுகள் பின் தங்கிப் போயிருக்கும்" என்று மேனாள் தமிழக அமைச்சர் - திராவிட இயக்கத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கூறியதாகத் தமிழறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். பேராசிரியரின் மதிப்பீடு நூற்றுக்கு நூறு உண்மையே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார். இராம இளங்கோவன்
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

பாடம் -31

புதுவகை இசைப்பாடல்களான தனிப்பாடல்கள் -2.

கடந்த பாடத்தில் கும்மிப் பற்றிய இலக்கணக் குறிப்பறிந்தோம். இந்தப் பாடத்தில் எந்தெந்த சிந்துகளில் எந்தெந்த பாடல்கள் என்று எடுத்துக் காட்டுப் பாடல்களை மட்டும் காண்போம். இரு சீரிரட்டையில் தனிச் சீர் பெற்று வந்த பாரதியார் பாடலைக் கீழே காண்போம்.

இரு சீரிரட்டைப் பாடல் கீழே:

சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே - புவியில்
ஏற்றம் புரியவந்தாய்!

அடுத்து, வேறு ஓசையில் அமைந்த முச்சீரிரட்டையைக் காண்போம். இடையிரண்டு சிந்தும் ஓரிசை;

முச்சீரிரட்டைப் பாடல் கீழே:

ஊருக்கு நல்லது சொல்வேன் - எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல் லாமுத லாகும் -ஒரு
தெய்வந் துணைச்செய்ய வேண்டும்!

தொடர்ந்து, நாற்சீரிரட்டையைக் காண்போம். அடி தோறும் தனிச்சொல் வந்த சமநிலைச் சிந்து கீழே காண்போம். தனிச்சீர் வராதது முண்டு.

நாற்சீரிரட்டைப் பாடல் கீழே:

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே!- பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே!- இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே!- கெட்ட
நயவஞ்சகக் காரனுக்கு நாசம் வந்ததே!

இனி, ஐஞ்சீரிரட்டைப் பாடலைக் கீழே காண்போம்.

ஐஞ்சீரிரட்டைப் பாடல் கீழே:

உலகுத் தொடங்கிய நாள்முத லாகநஞ் சாதியில் - புகழ்
ஓங்கிநின் றாரித் தருமனைப் போலெவர் மாமனே
இலகுப் புகழ்மனு வாதி முதுவர்க்கும் மாமனே!- பொருள்
ஏற்றமு மாட்சியு மிப்படி யுண்டுகோல் மாமனே!

இறுதியாக, அறுசீரிரட்டைப் பாடலொன்றைக் கீழே காண்போம். இதில் ஒவ்வோர்அரையடியும் முதற்சீரிலும், ஐந்தாலும் சீரிலும் மோனைக்கு இணையாய் எதுகை(ஆசை- நேச) என்று சை - ச வந்துள்ளதைக் காண்க. குற்றாலக் குறவஞ்சிப் பாடலைக் கீழே காண்போம்.

அறுசீரிரட்டைப் பாடல் கீழே:

ஆசை கொண்டு பாரில் வீழ்ந்தாள்
நேச மாமென்பார் - விளை
யாடாள் பாடாள் வாடா மாலை
சூடாள் காணென்பார்!
பேசா ணாதோ மோச மென்ன
மோச மோவென்பார் - இது

பேயோ வென்மார் பித்தோ வென்பார்;
மாய மோவென்பார்!

அடுத்து, இனி வியலினைச் சிந்து தன்னில் வரும் ஒவ்வொரு பாடலையும் காண்போம்.

வியலினைச் சிந்து:

இரு முச்சீரிரட்டைப் பாடல்:

ஓத்தெனப் பெரியோர்கள் - என்றும்
ஓதுவ தாய்வினை மோதுவதாய்த் தீமைகள் மாய்ப்பதுவாய் - துயர்
தீர்ப்பது வாய்நலம் வாய்ப்பதுவாய்!

முந் நாற்சீரிரட்டைப் பாடல் கீழே:

தின்னப் பழங்கொண்டு வருவான் - பாதித்
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்!
என்னப்ப னென்னைய னென்றால் - அதை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்!
நாலிரு சீரிரட்டைப் பாடல் கீழே:
முன்னை யிலங்கை யரக்கர் அழிய
முடித்தவில் யாருடையவில் - எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணிகைவில்!

கீழே இரட்டையின் ஈற்றில் தனிச்சீர் பெற்றது. பின்னடி மடக்கி வந்த நாலிரு சீரிரட்டை இது. பின்னிரு சீரும் எதுகைத் தொடையால் வந்ததாகும். இது இடைக்காட்டுச் சித்தர் பாடியது.

நாலிரு சீரிரட்டைப் பாடல் கீழே:

ஆட்டுக் கூட்டங்களை அண்டும் புலிகளை
ஒட்டியே யூதுகுழல் - கோனே
ஒட்டியே யூதுகுழல்!

இறுதியாக நாலடியால் வந்த இருமுச் சீரிரட்டைப் பாடல் கீழே:

அத்தின புரமுண்டாம் - இவ்
வவனியி லேயதற் கிணையிலையாம்
பத்தியல் வீதிகளாம் - வெள்ளைப்
வரை போற்பல மாளிகையாம் முத்தொளிர் மாடங்களாம் - எங்கும்
மொய்த்தளி சூழ்மலர்ச் சோலைகளாம்
நத்தியல் வாவிகளாம் - அங்கு
நாடு மிரதிநிகர் தேவிகளாம்!

எல்லாமே பாரதியார் பாடல்களையே தந்துள்ளேன். எளியதாக வாசித்துப் புரிந்து கொள்ள இயலும் என்பதால். இனி வேறு சில சிந்து வகைக்கொன்றாய் பாடல்கள் காண்போம்.

காவடிச் சிந்து பாடல் கீழே:

> தெள்ளுதமி ழுக்குதவு சீலன் – துதி
> செப்பண்ணா மலைக்குமநு கூலன் – வளர்
> செழியப் புகழ்விளைத்த
> கழுகு மலைவளத்தைத்
> தேனே – சொல்லு – வேனே!

இது அண்ணாமலை ரெட்டியாரின் பாடலாகும். இது முச்சீரிரட்டைக்குப் பின் முடுகும், தனிச்சொல் எடுப்பும் உடையதாகும். சீலன் - கூலன், தேனே - வேனே என்று இயைபுத் தொடை வந்துள்ளமை நோக்குக.

தங்கச் சிந்து:

மெய்ஞானத் தங்கம் மேலான தங்கம்
அஞ்ஞானத் தங்கமெல்லாம்- என் தங்கமே
ஆகாத தங்கமடி!

மேலேயுள்ள இது நாலிரு சீரிரட்டை எடுப்பாகும். எதுகைத் தொடையால் அமைந்தது. என்தங்கமே என்பது தனிச் சொல்லாகும். இந்தத் தனிச்சொல் அடிப்படையில் தான் இப்பாடல் தங்கச்சிந்து என்று பெயர் பெற்றது. தங்கச் சிந்து பாட்டிற்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டுப் பாடலைக் காண்போம்:

செங்கரும்பை வாங்கித் திருக்கையிலே தாங்கி
அங்கசவே ளோட அவன்செயலைப் பாட மங்கையர்கள் கூடி மணாளரு டனாடித்
தெங்கிளநீ ருண்பாரடி - என்தங்கமே
தெருவில் திரிவாரடி!

இது மூன்றடி நாலிரு சீரிரட்டை எடுப்பாகும். ஓரெதுகையால் அமைந்தது.

நொண்டிச் சிந்து:

மாதவர் குலத்துதித்த - நல்
மாட்டிடையர் ஆய்ச்சிசேதி கேட்டிடுவீரே!
ஆதவன் மரபினர்கள் - நன்கு
அரசு புரியுமுயர் புரசைகளார் காவிரிப்பூம் பட்டினமாம் -அதில்
கனத்த வணிகர்செல்வ இனத்துதித்த
மேவியமா சாத்துவனென்பார் - பெற்று
மேவளர்த்த மைந்தனென்பேர் கோவல னென்பார்!

கோவல நாடகப் பாடல்.

மேலேயுள்ள நொண்டிச் சிந்து முச்சீரிரட்டையாகும். இவ்வாறு, எதுகைத் தொடையாய், முச்சீர் பொழிப்பெதுகையாய்த் தொடர்ந்து வரும். முச்சீர் பொழிப்பெதுகை இன்றியும் வரலாம். தொடர்ந்து நாம் காண்பது,

வழிநடைச் சிந்து:

கோபுர மீதுபுறாச்சோடி - நம்மைக்
கூப்பிடுதே வாவெனக்
குமரனைக்கொண் டாடி
நூபுர வோதையவித் தோடி - கதிர்
நூலென விடந்தொறு
நுடங்கிடைநீ வாடி!

மேற்காணும் பாடல் முந்நாற் சீரிரட்டை யாகும். ஒருவன் ஒருத்திக்கு வழியிலுள்ள காட்சிகளைக் கூறியவாறு நடந்து செல்லுதல் போன்று பாடுவதாகும். இதனால், இது வழிநடைச் சிந்து ஆயிற்று. பின்னர்……

ஆனந்தக் களிப்பு (இன்பக் களிப்பு)

நீர்மேல் குமிழியிக் காயம் - இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம் பார்மீதில் மெத்தவும் நேயம் - சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம்

இது கடுவெளிச் சித்தர் பாடிய முந்நாற் சீரிரட்டை யாகும். இறுதியாகக் காணப் போவது தெம்(பா)மாங்கு வாகும்.

தெம்(பா)மாங்கு:

வாழையடி உன்கூந்தல்
வயிரமடி பற்காவி
ஏழையடி நானுனக்கு
இரங்கலையோ உன்மனது!
நன்னான நானா நனநனனா
தன்னான தானா தனனதான தானா

இது இன்பரசுத் தெம்(பா)மாங்கு இரு சீரிரட்டையாகும். எதுகைத் தொடையால் வந்தது. நன்னான என்பது தெம்(பா)மாங்கு எடுப்பாகும். எடுப்பின்றியும் தெம்பாங்கு வரும். சிந்துப் பாட்டில் வரும் ஒவ்வொரு சிந்தும் கண்ணி எனப்படும். சிந்து வகைகளில் மேலும் என்னென்ன சிந்துகள் உள்ளன என்பதையும் காண்போம்.

வேறு சில சிந்து வகைகள் கீழே:

வளையல் சிந்து, சேவற் பாட்டு, புறாப் பாட்டு, குள்ளத் தாராச் சிந்து, கொலைச்சிந்து, ஏற்றப் பாட்டு, ஏசல், தாலாட்டு, ஒப்பாரி, உடுக்கைப் பாட்டு, கிளிக்கண்ணி, எக்காலக் கண்ணி, பலசரக்கு ஏலப்பாட்டு, லாவணி ஆகியவை சிந்துவில் உண்டு.

இதுவரை இசைப் பாட்டுகளில் ஒன்றான சிந்து பாடல்களின் வகைகள், ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாடல்களையும் கண்டோம்.

யாப்பிலக்கணம் வளரும். . .

ஆழ்வார்கள் வரலாறு: கோழியர்கோன் குலசேகரன்

ஜனக்புரி ஸ்ரீனிவாசன்,
டில்லி தமிழாசிரியர் (ஓய்வு)

மாசிப்புனர்பூசம் காண்மினின்று மண்ணுலகீர்
தேசித்திவசத்துக் கேதென்னில்- பேசுகின்றேன்
கொல்லிநகர்க்கோன் குலசேகரன் பிறப்பால்
நல்லவர்கள் கொண்டாடும் நாள்"

என்று மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலை 13ஆம் பாசுரத்தில் கோழிக்கோன் குலசேகரப்பெருமாள் திரு அவதார நாளைக் கொண்டாடுகிறார்.

இவ் ஆழ்வார் மனத்துக்கினியவனான இராமபிரான் போலவே அரசகுலத்தில் புனர்பூசத் திருநாளில் சேரநாட்டில் திருவஞ்சைக்களம் என்னும் திருத்தலத்தில் அவதரித்தவர். இராமபிரானிடத்தில் அளவற்ற பக்தி கொண்டவர். வைணவப் பெரியோர்களால் குலசேகரப் பெருமாள் என்றும் போற்றப் பட்டவர். கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ என நம்மாழ்வார் கூறியதற் கேற்பவும், மனத்துக்கினியானைப் பாடவும் என ஆண்டாள் நாச்சியார் கூறியதற் கேற்பவும் இவரும் இராமபிரானிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

ஒருசமயம் இவரது சபையில் இராமாயணப் பிரசங்கம் நடைபெற இராமபிரான், இளையபெருமாள் இலக்குமணனைச் சீதாபிராட்டிக்குக் காவலாக இருத்திவிட்டு, தன்னை எதிர்த்து பதினாலாயிரம் அரக்கர்களுடன் வந்த கரதூஷணர்களைத் தான் ஒருவனாகவே எதிர்க்க யுத்தத்திற்குப் புறப்பட்டார் எனக்கூறக் கேட்ட அளவில் அரசனாக இருந்த குலசேகரர், இராமாயணம் நடந்தகாலம் திரேதாயுகம் என்பதை மறந்து, தன் காலத்திலேயே நடப்பதாக உணர்வு கொண்டு தன்னுடைய நால்வகைச் சேனையையும் அவருக்குத் துணையாக உடன் வரக் கட்டளையிட்டுத் தாமும் போர்க்கோலம் பூண்டார். அதுகண்ட மந்திரிமார்கள் அஞ்சி, இவருடைய கலக்கத்தைத் தவிர்க்க, சில வைணவப் பெரியோர்களை எதிரில் வரவழைக்கச் செய்து இராமபிரான் தான் ஒருவராகவே கரதூஷணர்கள் உட்பட அத்துணைப் பேரையும் வெற்றிகொண்டு திரும்பியதாகக் கூறச்செய்தனர். அதுகேட்டு குலசேகரரின் சீற்றமும் தணிந்ததாகக் கூறுவர்.

அந்த அளவுக்கு இராமபிரானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவ்வாழ்வார் திருமாலடியார்களிடத்தும் மிகுந்த பற்று கொண்டிருந்தார். வைணவ அடியார்களின்மீது

வெறுப்பு கொண்ட அரண்மனையில் இருந்த சிலர், வேண்டுமென்றே திருக்கோயில் எம்பெருமானின் கௌத்துவ மாலையை மறைத்துவிட்டு, திருக்கோயில் அடியார்கள்தாம் திருவாபரணத்தைத் திருடிவிட்டதாகப் புகார் கூறினர். அதுகேட்ட அரசர், எம் அடியார் அது செய்யார் எனக்கூறி, ஒருகுடத்தில் கருநாகப் பாம்பை இடச்செய்து, எம்மடியார் அவ்வாறு செய்திருப்பாரேயானால் இந்நாகம் தீண்டட்டும் என குடத்தினுள் கைவிட்டார். நாகம் அவரைத் தீண்டாமல் படமெடுத்து ஆடியதைக் கண்ட விஷமிகள் தாம் செய்த தவறுணர்ந்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை,

“ஆரம் கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே
வாரங்கொடு குடம்பாம்பிற் கையிட்டவன் மாற்றலரை
வீரங்கொடுத்த செங்கோல் கொல்லி காவலன் வில்லவன்கோன்
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே”
என மணக்கால் நம்பிகள் அருளிச் செய்துள்ளமை கொண்டு தெளியலாம்.

“இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப் பெருமாள்- பொன்னஞ்
சிலைசேர் நுதலியவேள் சேரலர்கோன் எங்கள்
குலசேகரன் என்றே கூறு”

என இவரைப் புகழ்ந்து உடையவர் அருளிச் செய்ததாகச் சிலரும் மணக்கால் நம்பி அருளிச்செய்ததாகச் சிலரும் கூறுவர்.

வாழி திருநாமத்திலும் . . .

அஞ்சன மாமலைப் பிறவி ஆதரித்தோன் வாழியே
அணியரங்கன் மணத்தூணை அடைந்துய்ந்தோன் வாழியே
வஞ்சிநகரம் தன்னில் வாழவந்தோன் வாழியே
மாசிதனிற் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே
அஞ்சலெனக் குடம் பாம்பில் அங்கையிட்டோன் வாழியே
அநவரதம் இராமகாதை அருளுமவன் வாழியே
செஞ்சொல் மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே
சேரலர்கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே!”
என இவரை வாழ்த்தி வைணவப் பெரியோர் போற்றிப் பரவுவர்.

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் வையந்தன்னொடும், உண்டியே உடையே என உகந்தோடும் மண்டலத்தோடும், தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய் நீதியாரொடும் கூட மனமில்லாமல் எத்திறத்திலும் யாரொடும் கூடும் அச் சித்தந்தன்னைத் தவிர்த்து செங்கண்மாலை அத்தனே! அரங்கா! என அழைத்து, திருக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு வாயாற வாழ்த்த விரும்பி, வானாளும், மண்ணரசும் விரும்பாமல், மனத்தூணே பற்றி நின்று, செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே, நெடியானே, வேங்கடவா! நின்கோயிலின் வாசல் அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்து உன் பவளவாய்

காண்பேனே என உள்ளம் உருக, ஊன் உருகப்பாடி எம்பெருமானின் திருமுன்பு விளங்கும் கருவறையில் படியாகக்கிடந்து அவனைச் சேவிக்கவே விரும்புகிறார்.

அதனால் இன்றும் வைணவத் திருக்கோயில்களில் கருவறைக்கு முன்புள்ள வாயிற்படியைக் 'குலசேகரன்படி' என்றே கூறுகின்றனர்.

செடியாய வல்வினை தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே"

இப்பாசுரத்தில் படியாய் இருந்து என்று கூறாமல் கிடந்து எனச் சொல்லக் காரணம் என்ன? 'படி' என்பதற்குப் பல பொருள்கள் கொள்ளலாம். படியெடுத்தல் என்றால் பிரதி எடுத்தல் என்பது பொருள். எம்பெருமானின் மறுவடிவாக இருப்பதால் படியாய் இருக்க விரும்புகிறார் எனலாம்.

எம்பெருமானுடைய பக்கத்தில் சென்று பார்க்கலாம் என்றால் அவனது முழுவடிவினைக்காணாது ஏங்குவர். சற்றுதூரத்தில்சென்று பார்த்தால்எம்பெருமானுடைய பாதாதிகேசம் சேவிக்கலாம் என்ற ஆதங்கத்தில் படியாயிருக்க விரும்பினார் போலும். அடியார்களோடு கூடிக்களிக்க விரும்பியவரன்றோ ஆழ்வார். படியாய் கிடந்தால்

அவனைத் தரிசிக்க வரும் அடியார்களின் பாததூளிகள் தம்மீது படுமல்லவா என நினைத்தார் போலும். திருவேங்கட மலையில் குருகாகவோ மீனாகவோ, செண்பக மரமாகவோ, புதராகவோதம்பகமாகவோ, கானாறாகவோ, படியாகவோஆகாவிட்டாலும் வேறு ஏதேனும் ஆவேனே என ஆசைப்படுகிறார் .

குலசேகர ஆழ்வாரைக் குலசேகரப் பெருமாள் என்றே போற்றுகிறது வைணவ உலகு. இவர் அருளிய பெருமாள் திருமொழி ஸ்ரீராமாயண சாரம் எனப்படும். திருவரங்கத்தைப்பற்றி மூன்று பத்தும், திருவேங்கடத்தைப் பற்றி ஒருபத்தும், இராமாவதாரத்தைத் தாலாட்டாகவும், தயரதன் புலம்பலாகவும் சுருக்கமாக இராமாயணத்தை பாடியுள்ளார். ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்த கண்ணனைப் பற்றி ஆய்ச்சியர்கள் கூடுவது, பிரிவது ஊடுவதாகிய நிலைகளை நாயகி நாயக பாவத்தில் பாடியுள்ளார். தேவகி புலம்பலாகவும் பாடியுள்ளார் உள்ளமுருகச் செய்யும் பாசுரங்கள் இவை.

105 பாசுரங்கள் கொண்ட பெருமாள் திருமொழி இவருடைய அருளிச் செயலாகும். இம்மண்ணுலக வாழ்வின் கொடுமையை இகழ்ந்து இராமகிருஷ்ண அவதாரங்களில் மனதை ஈடுபடுத்தி சிந்தைக்கினிய செவிக்கினிய முறையில் அவ்வவ்வவதாரங்களின் கல்யாணக் குணங்களைப் புகழந்து பாடியுள்ளார்

வடமொழியில் முகுந்தமாலா என்னும் நூலை அருளிச் செய்துள்ளதாகக் கூறுவர். திருமாலின் மங்கள வடிவங்களில் ஈடுபட்டு, மாளாத காதல் கொண்டு தன்மகள் இளையவல்லி எனப்படும் சேரகுல வல்லியுடன் திருவரங்கம் சென்று, பல்லாண்டுகள் அவனுக்குத் தொண்டு புரிந்து அழகிய மணவாளனுக்கே தன்மகளை மணமுடித்தார் என்பர். திருவேங்கடம், திருவித்துவக்கோடு, திருவாலித் திருநகர், திருக்கண்ணபுரம், திருச்சித்திரகூடம் ஆகிய தலத்து எம்பெருமானை மங்களாசாசனம்(போற்றிப் பாடியுள்ளார்) செய்துள்ளார்.

பெரியபெருமாளாகியஇராமனிடத்தில்பேரன்புகொண்டவராகி,அப்பெருமானுடைய திவ்யசரிதையைக் கேட்டவையே பேரின்பப் பேறாகக் கொண்டிருந்தார். ஆதலின் இவரை, “பெருமாள்" என்றும் குலசேகரப் பெருமாள் என்றும் வைணவப் பெரியோர்கள் கூறலாயினர். ஆதலின் இவர் அருளிய திருமொழிகளின் (பதிகங்களின்)தொகைக்குப் பெருமாள் திருமொழி என்னும் திருப்பெயர் வழங்குவதாயிற்று " என்பார் கா.ரா. கோவிந்தராச முதலியார்.

நாமும் குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த பெருமாள் திருமொழியை அனுசந்தித்து எம்பெருமான் திருவருள் பெறுவோமாக!

குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்.

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter - 4

2016 A D, December, Kentucky

John Wilfer Keiser a Greco-American fondly took the cat Tiger and put him in his coat pocket. He felt the warmth of the animal. He loved its name Tiger and it had lines on his back. He fed him with the burger from his pocket. MurGosh a Tamil youth who had allowed John Keiser to share his room is worried about John Keiser's activities. Now Keiser feeds the cat with the burger and if the cat becomes obese then he may take the animal to a gym for a regular workout.

MurGosh and John Keiser had stories for their names. MurGosh an ardent devotee of Aravind Gosh changed his name from Murugesan to MurGosh. Keiser is called after the German name Keiser [King] which was borrowed from the Latin word Caeser [King]. John Keiser used to say that when he was born he had a lot of hair on his head like Caeser.

Keish means hair in some Indo-European languages and anything worn above the head represents the power of a ruler. Now Keiser believes he is a mighty king.

Months before, midnight, John Keiser rang Murgosh

'Why didn't you tell me that tiger is the symbol in the Chola's flag?

'You didn't ask me.'

John Keiser was silent. Perhaps he agreed.

The other day John Keiser asked MurGosh in an exciting voice,

'In the excavations of Indus valley civilization many bulls are seen. Do you know that? Are you not proud of that?'

MurGosh said, 'What's wrong with you'? Why are you excited?'

John Keiser didn't reply.

John Keiser, a colleague, and roommate of MurGosh is an excellent programmer in a Software company. He gets excited about knowing about Cholas, the great kings of Tamil Nadu. It seems to be unusual and he consulted a psychiatrist for this. The doctor was not aware of the Imperial Cholas of South India but counseled him not to get distracted by old and useless things. He prescribed him tranquilizers and John Keiser didn't want them.

One day John Keiser found a book on Hens in MurGosh's room. It was the book of MurGosh's son and once the boy enjoyed the pictures of hens, he didn't want it. John gravitated to the name and pictures of the cocks and hens. He became mad at watching them. He wanted to have that book and asked Murgosh in a pleasing voice. MurGosh wondered. From that day John Keiser used to tell some facts about the hens to MurGosh.

Then John Keiser came to know of the Cock fight in Tamil Nadu and was eager to know more about it, but MurGosh was blank-headed. John Keiser tried and got two old Tamil films namely, 'Sandai koli' [Fighting cock] and 'Aadu KaLam' [Playground], and watched them. He had many queries to get clarified about the cock fight from MurGosh and this made MurGosh go away from John Keiser. He slowly rejected his phone calls at night. John Keiser started busily browsing for things related to Cocks.

One fine morning the door was knocked on by a police officer and he told, John Keiser had killed Professor Kingsley. MurGosh was shocked and he was wanted by the police for inquiry. He called an advocate and went there. He gave a detailed reply to all the queries.

Finally, a police officer asked him "Do you know anything about Cock fight'? MurGosh widely opened his eyes in surprise.

The officer asked him 'Is that a code word?'.

'No, not at all. He detailed John Keiser's interest in the hens and cock fight.

'John was a bit abnormal'.

'Since it is a murder we suspect each and every thing. We may call you again'

OK. I will. May I know why he killed the professor?

'Professor Kingsley is a lover of animals and birds. He had authored a book on the torture of animals and birds in the name of rituals and customs, in various countries and suggested banning them. In that book, he condemned the cock fight. John Keiser met him and tried to educate him that cock fight is glorious and traditional, but the professor ignored his words. When the professor showed a deaf ear to John Keiser he became ferocious and knocked on his head with a teakwood chess board. Professor bleeds to death.

John Keiser wanted to speak to you. 'Come with me'.

MurGosh followed the officer. He thought he must have taken John Keiser to the doctor and cured him. He felt sorry for that.

John Keiser was looking tired and weary. His eyeballs were restless. "Is cock fight barbarously? It is the martial art of a civilized community that lived six thousand years ago. They are the predecessors of civilization and culture to the entire humankind. How can I tolerate when he calls them barbarians?" MurGosh was silent.

This murder news didn't find a place in any Indian or Tamil newspaper. It was upcountry news and local journals were not interested. Saravanan, a Tamil television reporter, read this news in the American Library and became curious. He wrote a letter to John Keiser in the prison. Saravanan wanted to know John's background. John Keiser was very happy and excited because it was the first letter in his life. He replied in detail and it ended as 'my forefather was one among the three Greeks who have promised king Irumborai Chola'...

புதிய வெளியீடுகள்

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639